# கரு



தே.யூட்தாஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Lebara Library, Kanambigaikulam, Kilinohchi.

## முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Director
Lehara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

009950

# கரு

(மருத்துவ ஒழுக்காறு சார்பான ஆக்கங்கள்)

Director
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.




- தேவதாஸ் யூட்தாஸ் -
B.Ph. (Rome), B.Th. (Rome)

வெளியீடு
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25



Director
Lehara Library
Educational Resource Ce[illegible]re
87, Kanahambigaikula[illegible]
Kilinochchi.

# Karu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கரு |
| நூலின் வகை | : | மருத்துவ ஒழுகலாறு சார்பான ஆக்கங்கள் |
| ஆக்கம் | : | அருட்திரு. தேவதாஸ் யூட்தாஸ் |
| பதிப்பு | : | 05 ஜுன் 2007 (முதற்பதிப்பு) |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். |
| நூல் வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் | : | அ.ஜுட்ஸன் JS கணினி வடிவமைப்பு, யாழ்ப்பாணம். |
| அட்டைப்படம் | : | அ.ஜுட்ஸன் |
| பக்க எண்கள் | : | (XXVII+104) |
| விலை | : | 200 ரூபா |

| | | |
|---|---|---|
| Title | : | Karu |
| Subject | : | Medical Ethics |
| Author | : | Rev. Fr. Thevathas Judethas |
| First Published | : | 05 June 2007 |
| Copyright | : | Author |
| Publishers | : | St. Francis Xavier's Seminary, Columbuthurai, Jaffna. |
| Printed at | : | JS Graphics, Jaffna. |
| Cover Art | : | A. Judeson |
| Pages | : | (XXVII+104) |
| Price | : | Rs.200.00 |

ISBN : 978-955-50314-0-0

Imprimatur : ✠Rt.Rev.Dr. E. Thomas Savundaranayagam
Bishop of Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணம்

பாரதற்கு என்னை உவந்தளித்து
அமுதூட்டி, அறிவூட்டி, அன்பு பொழிந்து
என்னை வளர்த்து வரும் எனதருமைப் பெற்றோர்
**திரு. திருமதி தேவதாஸ் ஜோர்ச் மேரி யோசப்பின்**
அவர்களுக்கு

இந் நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரின் ஆசிச்செய்தி

அதீத விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி பல்வேறு வகையில் மனுக்குலத்திற்கு உயர்ச்சியையும் சிறப்பையும் கொண்டு வருகிறது. அதேவேளை மனிதனின் கட்டுமீறிய ஆசைகளும், இறைதிட்டத்தைப் பகுத்தறியும் அக்கறையின்மையும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும், வசதிகளையும் பிழையான வழியில் பயன்படுத்தத் தூண்டுகிறது. இதன் விளைவாக பல மனித உயிர்கள் அவலமாகக் காவுகொள்ளப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சி மட்டில் திருச்சபை மகிழ்கிறது. அதேவேளை விஞ்ஞான வளர்ச்சி இயற்கையின் ஒழுங்கமைப்பையும், இறைத் திட்டத்தையும் கருத்தில் எடுக்காது அழிவுநோக்கிச் செல்லும் போது திருச்சபை பாராமுகமாய் இருந்துவிடாது; மாறாக தட்டிக்கேட்டு, உண்மையைப் புலப்படுத்தும் பணியிலும் திருச்சபை பின்னிற்பதில்லை என திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 'உயிர் இறைவனின் கொடை' என்னும் திருமடலில் உறுதியாகக் கூறுகிறார். (cf. Pope John Paul II, *Donum Vitae*, No.1, Harmony Media Inc., Oregon)

மனித உயிரானது இறைவன் தரும் விலை மதிப்பில்லாத கொடை யாகும். குடும்ப அன்பு உறவின் விளைவாக உருவாகும் கரு இறைவனால் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு உருவாகும் கருவுக்கு மனித மாண்பு கிடைக்கிறது. எனவே தாயின் கருவறைக்குள்ளும், வெளியிலும் கரு கொலை செய்யப்படுதல் மாபெரும் குற்றமாகும்.

ஒழுக்கவியல் கோட்பாடுகள் நடைமுறைப் பொருளாதார உலகில் மதிக்கப்படாது, விலை பேசப்படும் பரிதாபநிலை எங்கும் காணப்படுகிறது. எனவே இவ்வாறான ஒரு சூழமைவில் மருத்துவ ஒழுக்கவியலில் (Medical Ethics) உள்ளடங்கும் சில விடயங்களில் திருச்சபையின் போதனையை இந்நூல் எடுத்து இயம்புகிறது. புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடத்தில் இறையியலின் இறுதியாண்டில் படிக்கும் அருட்சகோதரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தே. யூட்தாஸ் அவர்கள் இவ்விடயத்தை நன்கு ஆராய்ந்து தெளிந்து தனது ஆசிரியர்களின் வழிகாட்டலில் இந்நூலை இயற்றியுள்ளார். இந்நூல் பலருக்கும் திருச்சபையின் மாறாத ஒழுக்கப் போதனைகளை விபரமாக எடுத்துரைக்கின்றது. இந்நூலைப் படிப்பதன் மூலம் இறைவனின் திட்டத்தை சிறந்த முறையில் அறிந்து, இறைவன் தரும் உயிர் என்னும் கொடையை மதித்துப் பாதுகாக்கும் பணியை நல்ல முறையில் மேற்கொள்ள அனைவரும் முயற்சிக்க வேண்டுமென அழைப்புவிடுகிறேன்.

ஆயர் இல்லம், பேரருட்திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்ப்பாணம். யாழ் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை 1

"உன்மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக வைத்து வாழ்வையும் சாவையும் ஆசியையும் சாபத்தையும் உனக்குமுன் வைக்கிறேன் நீயும் உன் வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வை தெரிந்து கொள்." (இணைச்சட்டம் 30:19)

வாழ்வு என்பது ஒரு மனிதனின் முதல் உரிமையாகும். இதுவே அவனின் அடிப்படை உரிமையாகும். இந்த உரிமை எவருக்கும் உரித்தானது. இது மனிதனின் வளர்ச்சிப் பருவத்தின் எக்காலத்துக்கும் பாதுகாக்கப்பட வேண்டியது. இந்த அடிப்படையில் ஒரு தாயின் முட்டையும் (Ovum) தந்தையின் விந்தும் (Sperm) ஒன்று சேர்ந்து கரு உருவாகியதும் அந்த உயிர் தாயுடையதுமல்ல தந்தையுடையதுமல்ல மாறாக அது ஓர் மனித உயிர். எனவே அந்த உயிர் கடவுளுக்குச் சொந்தமானது எனவே இந்த உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமையில்லை. எனவேதான் கடவுள் என்றும் மனிதனிடம் கேட்பது "வாழ்வையே தெரிந்து கொள்" (இணைச்சட்டம் 30:19).

ஆனால் இன்று நம் மண்ணில் பாரிய மனிதப் பேரவலம் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. மனித உயிர் என்பது மலிந்த ஒரு சரக்காக மாறிக் கொண்டிருக்கின்றது. கடந்த வாரம் பருத்தித்துறையில் பட்டினியால் ஒரு வயோதிபர் மரணமானார். நாளாந்தம் தெருக்களில் மனித உடல்கள் போடப்பட்டுள்ள கொடூரக் காட்சிகள், வலிந்த தாக்குதல்கள், தற்காப்புத் தாக்குதல்கள் என்ற சொற்பதங்களில் நடைபெறும் மோதல்கள், நூற்றுக்கணக்கான உயிர்கள் பறிக்கப்படுகின்ற பரிதாப நிகழ்வுகள், இவ்வாறு நடந்தேறிவருகின்ற கொடூரங்களிற்கிடையே இன்னுமோர் மௌனக் கொலை ஒன்று திரை மறைவில் அரங்கேறி வருகின்றது. அதுவே இறைவன் அழகாக அமைத்த கருவறைகள் கல்லறைகளாக மாறிவருகின்ற கொடூரம். இது மேலைத்தேய நாடுகளில் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது பகுதிகளில் மிகமிக அதிகரித்து வருவதாக பல புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கத்தோலிக்கத் திருச்சபை எப்போதும் பாலைவனக் குரலாக மனித உயிர் மாண்புடையது, அது என்றும் எக்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகின்றது. அதனை "கொலை செய்யாது இருப்பாயாக" என்று சீனாய் மலைக் காட்சியிலிருந்து இன்றைய திருத்தந்தை வரை எல்லாத் திருத்தந்தையர்களும் தங்கள் படிப்பினைகளில் வற்புறுத்தி வந்துள்ளனர். பல திருமடல்களில் இவற்றுக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தப் படிப்பினைகளும் விளக்கங்களும் எந்தளவுக்கு மக்களுக்கு சென்றடைந்தன என்பது ஒரு கேள்விக்குறியே. மறைக்கோட்பாடுகள், அறநெறிக் கோட்பாடுகளை மக்களுக்கு விளக்க வேண்டியது திருச்சபையின் இன்றியமையாத ஒரு தேவையாகும். இறைவன் விவிலியத்தில், திருச்சபையின் பாரம்பரியத்தில், வெளிப்படுத்தியவை, மறைக் கோட்பாடுகளாக மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழப் படவேண்டும். எனவே திருச்சபையின் படிப்பினைகள் அடிமட்டத்திலுள்ள மக்களை சென்றடையாதுவிட்டால் அவர்கள் தவிர்க்க முடியாத அறியாமையால் (invincible ignorance) இருப்பவர்கள் ஆகின்றனர். கருவழிப்புப் பற்றி மறையுரைகளில் இப்போது அறிவுறுத்துவது மிகக் குறைவு, ஏன், "இல்லை" என்றே மக்கள் கூறுகின்றனர். திருமண ஆயத்தத்தின் போதும் இது பற்றி கூறப்படுவது குறைவு. இவ்வாறான நிலையில் தற்கால தொடர்பு சாதனங்கள் கரு அழிப்பு சரியானது என்ற கருத்தை முன்வைக்கின்றது. மேலைத்தேய நாடுகளில் ஓர் மதிய இடைவேளையில் ஒருவர் சென்று தன்னுடைய தலைமயிரை சலூனில் கத்தரித்து வருவது போல் இப்போது ஒரு பெண் கருஅழிப்பு செய்துவிட்டு வரலாம் என்ற அளவுக்கு இந்த விடயம் ஓர் அற்ப விடயமாக மாறி உள்ளது. இன்றும் கருஅழிப்பு செய்வதற்கு எடுக்கின்ற தீர்மானமும் மிக இலகுவாக எடுக்கப்படக் கூடியவாறு மனச்சாட்சிகளும் பழக்கப்பட்டுவிட்டன அல்லது குருடாக்கப்பட்டுவிட்டன.

இந்த நிலையில்தான் அருட் சகோதரன் தே. யூட்தாஸ் அவர்களின் இந்தக் கன்னி முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. தன்னுடைய நான்கு வருட சூழமைவு இறையியல் உருவாக்கத்தில் நம்மண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களநிலமையை புரிந்து கொண்டு தன்னுடைய தற்போதைய பொதுநிலைக் குருத்துவத்தினதும் தான் ஏற்கவிருக்கும் பணிநிலைக் குருத்துவத்தினதும் முக்கிய பணிகளில் ஒன்று இறைவார்த்தைப் பணி என்பதனை உணர்ந்து அந்தப் பணியின் ஓர் பரிமாணமாக இந்தப் புத்தகத்தை அவர் வெளியிடுவதில் அவரைக் கற்பித்த ஆசான் என்ற வகையில் நான் பெருமகிழ்வடைகின்றேன். அவருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகம் மருத்துவ இறையியல் சார்பான விடயங்கள் பற்றிய விவிலிய இறையியல் அடிப்படையிலான ஓர் கண்ணோட்டத்தை எமக்குத் தருகிறது. சிறப்பாக இவ்வாறான ஒரு புத்தகம் பல விசுவாசிகளுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். இன்னும் கருஅழிப்பு, மனித உயிரைப் பாதுகாத்தல், பற்றிய சிறந்த கண்ணோட்டத்தைக் கொடுக்கும். இது பலருடைய அறியாமைகளை அகற்றி அவர்களின் மனச்சாட்சிகளை உருவாக்கும் என்று நம்புகின்றேன். மீண்டும் என் ஆசிகளை ஆசிரியருக்கு வழங்கி இன்னும் பல நூல்களை அவர் காண வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அருட்திரு. ம. டேவிட் **S.T.L (Rome).**
தலைவர்,
இறையியல் துறை,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை 2

மருத்துவத்துறையில் ஒழுக்கவியல் மிகவும் முக்கியமானது. மருத்துவத் தீர்மானங்கள் ஒழுக்கவியலின் அடிப்படைகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். மருத்துவத் துறையில் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது இரண்டு விடயங்கள் கவனிக்கப்படுகின்றன.

1. ஒழுக்கவியல் அடிப்படைகள்
2. செயல்முறை வினைத்திறன்

இவ்விரு கூறுகளையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் தீர்மானங்களே ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை அமைப்பதில் உதவ முடியும். மருத்துவம் சார்ந்த பல விடயங்கள் ஒழுக்கவியல் ரீதியாக முக்கிய இடத்தை வகிக்கின்றன: உதாரணம் கருச்சிதைவு, கருத்தடை, கருக்கொலை, குளோனிங் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வரலாற்றினூடாக நோக்கினால் மேலைத்தேய மருத்துவம் வளர்ந்த போது அது கிறிஸ்தவ சமயத்துடன் கைகோர்த்து வளர்ந்ததை அவதானிக்க முடியும். இவ்வாறு கைகோர்த்துக் கொண்ட போது பல மனிதநேயம் சாந்த விழுமியங்களும் அதனுடன் இணைந்து கொண்டன. விழுமியங்களுடன் இணைந்திருந்த போது மருத்தவத் துறை மிகவும் பொலிவுற்றுக் காணப்பட்டது. கால ஓட்டத்துடன் மருத்துவம் மதங்களைக் கடந்து வளர்ந்தது. இதன் போது பல ஆரோக்கியமான மாற்றங்களையும் அது சந்தித்தது. ஆனால் மனித மேம்பாட்டு விழுமியங்களுடன் மருத்துவத்துறைக்கு இருந்த தொடர்புகள் தத்தமது அடிப்படைகளை இழக்க ஆரம்பித்தன. படிப்படியாக மருத்தவத் தீர்மானங்கள் விழுமியங்களின் அடிப்படைகளில் எடுக்கப்படும் நிலை மறைந்தது. கலந்துரையாடல்களின் அடிப்படையில் மருத்துவத் தீர்மானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும் நிலை ஏற்பட்டது. கலந்துரையாடல்களில் ஈடுபடும் பெரும்பான்மையினரின் கருத்துக்கள் தீர்மானங்களாக மாறத் தொடங்கின. அதாவது ஆரம்பத்தில் ஒழுக்கவியல் விழுமியங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மருத்தவத் தீர்மானங்கள் அவ்வத்துறைகளில் ஓங்கி ஒலிக்கும் மாற்றுக் கருத்துக்களால் உருமாறத் தொடங்கின. மருத்துவ ஒழுக்கவியலில் இது ஒரு வழுக்குப்பாறையில் பயணிப்பதை ஒத்ததான நிலைகளைத் தோற்றுவித்தது.

உ்தாரணமாக கருச்சிதைவை எடுத்துக்கொண்டால் ஆரம்பத்தில் கருச்சிதைவு மருத்துவத்தில் தவறெனவே இனங்காணப்பட்டது. ஆனால் கால ஓட்டத்தில் கருச்சிதைவு சட்டவலுவைப் பெற்றுக்கொண்டது. இதனால் இன்று சில மேலைத்தேய நாடுகளில் கருச்சிதைவு ஒரு சாதாரண விடயமாகியுள்ள அளவுக்கு நிலமை மாறியுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தவரை அது ஒழுக்கவியலுக்கு எப்போதுமே உயர்வான இடத்தை வழங்கி வருகிறது. கால ஓட்டத்துடன் இணைந்து செல்லாமல் திருச்சபை பின்தங்குகின்றது என்று சில வேளைகளில் குறை கூறப்பட்டாலும் ஒழுக்கவியல் அடிப்படைகள் தவறாகிவிடக்கூடாது என்பதில் திருச்சபை ஆசிரியம் மிகவும் அக்கறையுடன் இருப்பதை உணரமுடியும்.

இது இவ்வாறு இருக்க, மருத்துவ விஞ்ஞானமானது இன்று சாத்தியமானது எல்லாம் செய்து முடித்துவிடும் தொனியில் வேகமாக இயங்குகின்றது. மருத்துவ ஆராய்ச்சிப் பீடங்களில் நடைமுறைப்படுத்தப் படுபவை பின்னர் படிப்படியாக அரச மற்றும் தனியார் வைத்தியசாலை களினூடாக பொதுமக்களை சென்றடைந்தன. கத்தோலிக்கத் திருச்சபையும் தனது உறுப்பினர்களை மருத்துவ ஒழுக்கவியலில் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இப்படியான ஒரு பின்ணணியில் இன்று யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பேசும் பிரதேசங்களிலும் கொலைகள் மலிந்து மனித உயிரின் மாண்பு அருகிவிட்ட நிலையில் மனித மாண்பை வலியுறுத்தும் தகமை கொண்டதாக 'கரு' என்னும் இந்நூல் வெளிவருகின்றது.

இன்றைய சமூக அரசியல் ஓட்டத்தை ஒரு ஆரோக்கியமான திசை மாற்றம் செய்ய இந்நூல் முயலாவிட்டாலும் கூட, ஒரு சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவனுக்கு மருத்துவ ஒழுக்கவியல் சார்ந்த விடயங்களை தமிழில் வெளிப்படுத்துவதில் இந்நூல் ஒரு கணிசமான பங்களிப்பினை ஆற்றியிருக்கின்றது. துரதிஸ்டவசமாக இன்று பெரும்பாலான நல்ல நூல்கள் எமது பிரதேசங்களில் ஆங்கில மொழியில் மட்டும் காணப்படுவதால் ஒரு சராசரி மனிதனின் வாசிப்புத் தேவையை அவை சந்திப்பது இல்லை. எனவே தமிழில் வெளிவரும் இப்படியான நூல்கள் ஒரு விரிந்த வாசக வட்டத்தைத் தோற்றுவிக்க முடியும். எமது மக்களின் வாசிப்புப் பழக்கம் இன்று ஒரு கேள்விக் குறியாக மாறிவிட்டிருப்பினும் பல வாசகர்களினால் இந்நூல் பயன்பாட்டு முக்கியத்துவத்தைப் பெறும்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை தனது கத்தோலிக்க மனச் சாட்சியுடன் வாழவிரும்பும் ஒருவருக்கு இந்நூல் மிகவும் உதவி புரியும். ஏனைய கத்தோலிக்க மற்றும், கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களுக்கும் மருத்துவ ஒழுக்கவியலில் கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாட்டை இந்நூல் வலியுறுத்தும்.

தமது மனச்சாட்சியின்படி வாழவேண்டுமென நினைக்கும் மனிதர்களுக்கு தமது மனச்சாட்சியை கூர்மைப்படுத்துவதற்குத் தேவையான சில அடிப்படை வினாக்களையும் இந்நூல் வழங்கும். யாழ் மறை மாவட்டத்தைப் பொறுத்தவரை நடைமுறையில் உள்ள கத்தோலிக்கத்தை வழமையான வழிபாடுகளுக்கு அப்பாலும் விரிவுபடுத்தும் இன்னோர் முயற்சி இது.

பொதுநிலைக் கிறிஸ்தவர்கள் தத்தமது துறைகளில் கிறிஸ்தவ விழுமியங்களைக் கைக்கொள்வதற்கு இப்படியான நூல்கள் பெரிதும் உதவிபுரியும். பொது நிலையினரின் துறைசார்ந்த கிறிஸ்தவ பங்களிப்பை அதிகரிப்பதிலும் இது மிகவும் உதவி புரியும். மருத்துவ ஒழுக்கவியலைப் பொறுத்தவரை அத்துறைசார்ந்த பணியாளருக்கு இந்நூல் துணைநிற்கும். துறைசார்ந்து பணிபுரியும் பொதுநிலையினரையும் திருநிலையினரையும் இணைக்கும் ஒரு பாலமாகவும் இந்நூல் தொழிற்படும்.

பல வினாக்களையும் இந்நூல் எழுப்புகின்றது. இப்படியான நூல்கள் இதுவரை ஏன் யாழ்ப்பாணத்தில் பரவலாக வெளிவரவில்லை? ஏன் எம்மிடம் தமிழில் இப்படியான நூல்கள் இல்லை? எமது பிரதேசங்களில் மருத்துவ ஒழுக்கவியலில் இன்றைய நிலை என்ன? மருத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கவியலில் எமது துறைசார்ந்த பங்களிப்பு எவ்வாறு இருக்கின்றது? வடபுல கத்தோலிக்க திருச்சபை தனது துறைசார்ந்த பங்களிப்பில் எந்தளவு வெற்றி கண்டுள்ளது? போன்றவாறான வினாக்களே அவை.

இறுதியாக இன்றைய உறுதியற்ற சமூக அரசியல் பொருளாதாரப் பிண்ணனியின் மத்தியிலும் இந்நூலை உருவாக்கி இறுதியுருவம் கொடுக்க உதவிய அருட்சகோதரர் தே. யூட்தாஸ் அவர்களை மனமார வாழ்த்துகிறேன். தனது குருத்துவ வாழ்விலும் மருத்துவ ஒழுக்கவியலுக்கு சிறப்பான ஒரு இடத்தை வழங்கி எமது பிரதேசங்களில் அத்துறையை நடைமுறைச் சாத்தியமான வழிகளில் வளர்க்க அவர் உழைப்பார் என நம்புகின்றேன். இன்றைய கிறிஸ்தவம் ஆலயங்களைக் கடந்து வீதிகளிலும் வீடுகளிலும் வியாபார நிலையங்களிலும் வைத்தியசாலைகளிலும் மனிதர்களால் வாழப்படும் ஒரு நிலை வளர இந்நூலும் உதவி புரியட்டும். இறை அரசை அமைக்கும் அந்த உன்னதமான பணியில் இந்த நூலும் உற்ற துணையாகட்டும்.

வைத்தியர் கு.யோ. பிரதீபன் **MBBS (Sri Lanka)**
யாழ் போதனா வைத்தியசாலை.

Director
Lehara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

கத்தோலிக்கத் திருச்சபையின் உறுப்பினரான நான், திருச்சபைக்கு அளிக்கும் சிறு காணிக்கை 'கரு' என்னும் இந் நூலாகும். இந்நூலில் மருத்துவ ஒழுக்க நெறியுடன் தொடர்புடைய சில விடயங்களை ஆய்ந்துள்ளேன். மருத்துவ ஒழுக்க நெறியுடன் தொடர்புடைய நிறைய விடயங்கள் உண்டு. ஆனால் எமக்குத் தேவையான, தொடர்புடைய விடயங்களை மாத்திரமே நான் இந்நூலில் உள்ளடக்கியுள்ளேன். ஆங்கிலத்தில் இவ்விடயம் தொடர்பாக அதிக நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் தமிழில் இவ்விடயப்பரப்புடன் கூடிய நூல்கள் மிக மிகக் குறைவு எனவே கூறலாம். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சில மாணவர்கள் நான் குருமடமாணவனாக கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் என்னிடம் வந்து இறையியல், ஒழுக்கவியல் சம்பந்தமான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவது உண்டு. அவர்களது ஆய்வுக்கும் நான் உதவியது உண்டு. விடயங்கள் ஆங்கிலத்தில் மாத்திரமே காணப்படுவதால் அவர்கள் அவற்றை தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி கூறுவார்கள். இவ்வாறு எழுதுகின்ற போது தான், நான் இவ்விடயங்களை ஏன் ஒழுக்குக்கிரயமாக எழுதி வெளியிடக் கூடாது, என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது. இது இறை ஊக்கமாகக் கூட இருக்கலாம்.

இந்நூலைப் பலரும் பலகோணங்களிலும் நோக்கலாம், விமர் சிக்கலாம். பரந்தவட்டத்தில் சிந்தித்தால் இவ்வாக்கங்களுக்கான தேவை எமது சமூகத்தில் காணப்பட்டதை நாம் கண்டுகொள்ளலாம். திருச்சபை எனக்குத் தந்த அறிவை நான் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கின்ற ஒரு சிறு முயற்சி இதுவாகும். திருச்சபையானது சில விடயங்களைத் தடுக்கின்ற போது அதற்கான விளக்கத்தையும், காரணத்தையும் கொடுப்பதோடு, அதற்கு ஈடான மாற்று வழியையும் பரிந்துரைக்கின்றது. திருச்சபையின் பரிந்துரைகள் மக்களைச் சென்றடைய வேண்டும். இதுவே எனது அவாவும் ஆசையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிந்தனைகள் இந்நூலாக எமது கைகளில் தவழ பலரும் பலவழிகளில் எனக்கு பக்கபலமாக இருந்திருக்கிறார்கள். அவர்களை நான் மறந்து விட முடியாது. அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

இந்நூலை நான் வெளியிடுவதற்கான அனுமதியை எனக்கு வழங்கி என்னை ஊக்குவித்த மேன்மை தங்கிய யாழ் ஆயர் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

ஒவ்வோர் சிறுவனும் தனக்கு வேண்டிய அறிவை தனது குடும்பச் சூழமைவிலிருந்தே பெற்றுக் கொள்கிறான். கல்வியியலாளர்கள் கூறுவார்கள் 1-5 வயதிற்குள் ஒரு சிறுவன் தனக்கு வேண்டிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்கிறான். அதன் பின்னர் பாடசாலைகளில் தான் பெற்றுக் கொண்ட அறிவை அவன் வளர்த்துக் கொள்கிறான் என்கிறார்கள். இதற்கு நான் விதிவிலக்கல்ல. எனது பெற்றோர் சகோதரர்கள் தான் எனக்கு அறிவூட்டி வருகிறார்கள். எனவே எனது பெற்றோர்க்கு எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன். நான் இந்நூலை வெளியிடப் போகிறேன் என்பதை அறிந்தவுடன் எனது சகோதரர்கள் உடனே அதற்கு தேவையான அனைத்தையும் செய்யத்தயாராக இருந்தார்கள். நான் சில வேளைகளில் வெளியீட்டு வேலைகளில் பாராமுகமாய் இருந்தாலும் அவர்கள் அடிக்கடி கேட்பார்கள். "புத்தகவேலை என்ன மாதிரி" என்று, வெளியீட்டுக்கான பண உதவியையும் எனது சகோதரர்கள் தந்தார்கள். நான் கையால் எழுதிய விடயங்களை கணணியில் அச்சுச் செய்தவர் எனது சகோதரி யாவார். எனவே சகோதரர்களுக்கும் எனது நன்றியை அர்ப்பணிக்கிறேன்.

எனது ஆக்கங்களைத் திருத்தி ஆலோசனைகள் வழங்கிய அருட்தந்தையர்கள் மேரி யோசப், டேவிட், ஜெராட் சவிரிமுத்து, கிறிஸ்துநாயகம் அவர்கட்கும் வைத்தியர் பிரதீபன் அவர்கட்கும் எனது நன்றிகள். இந்நூலிற்கு தேவை யான படங்களைச் சேகரித்துத் தந்துதவிய அருட்சகோதரி ஜெரால்டின் HFC, தமிழ் திருத்தி உதவிய அருட்சகோதரி லூமினா HFB அவர்களுக்கும், செல்வி ஜரிஷ் நிலூஷாஅமலதாஸ் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அணிந்துரைகள் வழங்கியவர்களுக்கும், பின் அட்டையில் செய்தி வழங்கி ஆலோசனைகள் கூறிநின்ற அருட்திரு. ஞா.பிலேந்திரன், M.A.P.R.சவுந்தரநாயகம் அடிகளாருக்கும் எனது நன்றிகள். எனது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்து ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய எனது நண்பர்கள் அருட்தந்தையர்கள் நீ. லெஸ்லி அன்ரனி, நீருபன் நிஷானந், அருட்சகோதரர்கள் கனிசியஸ் றாஜ், நேவின்ஸ் பீரிஸ், ஜேம்ஸ் நாதன், மக் மயூரன், எல்மோ அருள்நேசன் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளியீட்டிற்கு பண உதவி வழங்கிய Missio அமைப்பினருக்கும், அருட்திரு P.M. இம்மானுவல் அடிகளாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் வெளியீட்டிற்குரிய அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொண்ட வெளியீட்டு நிறுவனமாகிய யாழ் புனித சவேரியார் குருமடக் குடும்பத்தினரை நன்றியோடு நினைத்துக் கொள்கின்றேன். இந்நூல் எமது கரங்களில் தவழ வடிவமைப்பு, அச்சிடல் உதவிகள் புரிந்த JS Graphics நிறுவன உரிமையாளர் திருவாளர் அ.ஜுட்ஸன் அவர்களுக்கும் நன்றிகள் பல கூறி நிற்கின்றேன்.

இறுதியாக "கரு" என்கின்ற என்னுடைய கன்னிமுயற்சியின் உருக்கொடுப்பிற்கு உதவிக்கரம் நீட்டிய அனைத்து அன்புள்ளங்களையும் இதயத்தால் நினைத்து ஆனந்திக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Director
Lehara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.

# என்னுரை

நவீனகாலத்தைக் கடந்து பின் நவீன காலத்தில் நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இக்காலமானது ‘தகவல் வெடிப்பு யுகம்’ எனவும் ‘மிகவும் விரைவான யுகம்’ எனவும் பலராலும் பலகோணங்களிலும் நோக்கப்படுகின்றது. அனைத்துத் துறைகளும் (disciplines) கால ஓட்டத்திற்கும், கால மாற்றத்திற்கும், போக்கிற்கும் ஏற்றவாறு வளர்சியடைந்து செல்கின்றன. இத்துறைகளுள் சிறப்பாக மருத்துவத்துறையும், இறையியல் துறையும் மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றவையாகும். இவற்றின் வளர்ச்சி கால ஓட்டத்தின் வீச்சுக்கு ஏற்றவாறு முன்னோக்கிச் செல்வனவாகவே காணப்படுகின்றன. மனிதனது செயற்பாடுகள், நோக்கங்களின் விரைவுத்தன்மைக்கு ஏற்றவாறு மருத்துவத்துறைக்கான கேள்வியும் அதிகரித்துச் செல்கின்றது. புதிய புதிய கண்டுபிடிப்புக்களும், மனித உடல், உயிர் சார்பான ஆய்வுகளும் மருத்துவத்துறையை விரிவுபடுத்தி வருகின்றன. விஞ்ஞான ரீதியிலான பல ஆய்வுகள் மருத்துவத்துறையின் செழிப்புக்கு வழிகோலுகின்றன. இவ்வகையில் நோக்குங்கால் பின்நவீனத்துவ காலத்தில் துரித வளர்ச்சி காணும் துறைகளுள் மருத்துவத்துறை மிகமுக்கியமானதாகும்.

பொருள் முதல்வாதம், நுகர்வுக்கலாச்சாரம், பூகோளமயமாக்கல் போன்ற காரணிகளின் செல்வாக்கு, உலகம் முழுமையும் பரந்து வாழும் அனைத்து மக்களையும் சென்றடைகின்ற கால்வாய்களாக தொடர்பு சாதனங்கள் தொழிற்படுவதால் இறைவன் மீதான நம்பிக்கையும், காலாதிகாலமாக பாதுகாக்கப்பட்டு வந்த கோட்பாடுகளும், பல்வேறுபட்ட கேள்விகளுக்கும், ஐயுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றன. நச்சுத்தன்மை வாய்ந்த நாத்திக சிந்தனைகளும் பரப்புரை செய்யப்படுகிறது. இவ்வாறானதொரு உலகியல் சூழமைவில் இறையியலானது தன்நிலை விளக்கவேண்டிய தேவை அதிகமாயுள்ளது. எனவே இறையியல் பல்வேறு தளங்களிலிருந்து தன்னை துரிதமாக வளர்க்கவேண்டியது காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையாகும். இத்தேவையானது எதிர்பார்த்ததை விட மேலதிகமாக நிறைவேற்றப்படுவது கண்கூடு. இறையியல் துரிதகதியில் வளர்ச்சி கண்டுகொண்டு வருகிறது, அதேவேளை வளர்ச்சி காணும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

பகுத்தறிவும், நம்பிக்கையும் இறைவன் மனிதனுக்குக் கொடுக்கும் கொடைகளாகும். இக் கொடைகள் இரண்டும் நேரிய முறையில் கையாளப்பட வேண்டும். இவற்றின் அதிதீவிரத்தன்மை பல்வேறு பிறழ்வான செயற்பாடுகளில் முடிவடைய வாய்ப்புண்டு. மனிதனை மற்றைய விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துவது பகுத்தறிவே ஆகும். சாதாரண விலங்குகள் பகுத்தறிவைக் கொண்டிருப்பதில்லை. மனிதனையும் ஓர் விலங்கு என மனிதவியல் ஆய்வாளர்கள் வகைப்படுத்துவர். ஆனால் மனிதனை பகுத்தறிவுள்ள விலங்கு (rational animal) எனவே கூறுவர். மனிதனது பகுத்தறிவானது அவனது நம்பிக்கையால் நெறிப்படுத்தப்பட வேண்டும். நம்பிக்கையால் நெறிப்படுத்தப்படாத பகுத்தறிவானது நாத்திக நச்சுத்தன்மையை இலகுவாகப் பெறக் கூடியதாயும், இறை விருப்பம் இல்லாத கொள்கைகளையும், செயற்பாடுகளையும் தீவிரமாக வளர்க்கவும் முற்படும். பகுத்தறிவும் நம்பிக்கையும் ஒன்றை ஒன்று வளர்க்க வேண்டும். வளர்க்கின்ற போது இரண்டும் செழிப்படையும்.

இவ்வாறே மருத்துவத்துறையும் இறையியல் துறையும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும். இணைந்து செல்லாத போது பல மனிதம் சாராத செயற்பாடுகளில் மருத்துவத்துறை ஈடுபட வாய்ப்பு ஏற்படுகிறது.

மருத்துவ ஒழுக்கவியல் சார்பாக திருச்சபை போதிக்க விரும்பும் விடயங்கள் அனைத்தும் திருச்சபையானது 'மனித ஆள்' மட்டில் கொண்டுள்ள கொள்கைகளில் இருந்தும் கோட்பாடுகளில் இருந்தும் பிறக்கின்றன.[1] 'மனித ஆள்' பற்றிய திருச்சபையின் படிப்பினைகள், "மனிதன் கடவுளுடைய சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான்'. ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபட்டவனாக ஆன்மீக அறிவையும், சுதந்திரமான புத்தியையும் உடையவனாக படைக்கப்பட்டுள்ளான், என்ற விவிலிய வார்த்தைகளில் ஆழமாக அடித்தளமிடப்பட்டுள்ளன. (தொட.நூல். 1:26-31). பெற்றோரின் அன்பின் இணைப்பில் மனித உயிர் கடத்தப்பட்டாலும் மனித ஆன்மாவானது இறைவனின் நேரடிச் செயற்பாட்டின் மூலமாகவே

[1] Cf., Vatican II: The Conciliar and Post Conciliar Documents, "Dogmatic Constitution on divine Revelation", (Nov. 18, 1965), Vol 1, Austin Flannery, ed., Bombay: St. Paul's Publications, p. 755.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுகின்றது (காண்க.தொட.நூல். 2:7,மத்.7:22-23). ஓவ்வோர் மனிதனும் தனித்துவமுடையவனாகவும், மாற்றீடு செய்யப்பட முடியாதவனாகவும் காணப்படுகிறான் (காண்க.மத்.10:29-31); அத்தோடு அனைத்து மனிதரும் வெறுமனே தனிப்பட்ட முழுமைக்கு மாத்திரமல்லாது நித்திய வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முழுமையையும், முடிவில்லாத வாழ்வையும் அடைகின்ற பயணத்திலே பிரத்தியேகமான இறைவனின் கொடையும், அடையாளமுமான தெரிவுச் சுதந்திரத்தை உடையவர்களாக மனிதர்கள் வாழ்கிறார்கள். இத் தெரிவுச் சுதந்திரத்தின் உதவியோடு ஒவ்வொருவரும் தத்தமது நடத்தையையும், முடிவையும் அமைத்துக் கொள்கிறார்கள். தெரிவுக்கான சுதந்திரம் தரப்படவில்லையாயின் நன்மையைப் பற்றியும், தீமையைப் பற்றியும் நாம் கதைக்க முடியாது, காரணம் தெரிவுச் சுதந்திரத்தின் அடியொற்றியே நன்மை எது? தீமை எது? என பிரித்தறிய முடிகிறது. தெரிவுகளை நாம் மேற்கொள்ளும் போது இறைவனின் அருள் எமது பலவீனங்களிலிருந்து மீள எமக்குத் துணைபுரிகிறது. ஓவ்வோர் மனிதனும் இறைவனோடு கொண்டுள்ள உறவின் நிமித்தம் மனித உயிரானது தூயதாக விளங்குகிறது. இத்தகைய படிப்பினையின் மட்டிலிருந்து பிறப்பதே பின்வரும் கோட்பாடாகும். "நேரடியான மனித உயிர்க்கொலை மாபெரும் பாவமாகும்." மனித உயிரின் பெறுமதியானது இறைவன் தன் ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பி மனிதவுடல் ஏற்ற நிகழ்வு வழியாக எண்பிக்கப்படுகின்றது (எபிரே.4:14-16). இவ்வுலகிற்கு வந்த இறைமகன் கிறிஸ்து சமூகத்தில் அடிமட்டத்தில் வாழ்ந்த ஏழைகளையும், கைவிடப்பட்டவர்களையும் தேடிச் சென்று அவர்கள் மட்டில் பரிவிரக்கம் கொண்டார் (மத்.. 26:31-46).

Director
Library
Educational Resource Centre
87,Kanamambugaikulam
Kilinochchi

## சுகாதாரம் மட்டிலான கிறிஸ்தவ கண்ணோட்டம்:

கத்தோலிக்கத் திருச்சபையானது சுகாதாரம் மட்டில் கொண்டிருக்கும் அணுகுமுறை மருத்துவ ஒழுக்க நெறி பற்றிய திருச்சபையின் போதனைக்கு அடிப்படையாக இருக்கிறது. சுகாதாரத்தை குறுகிய வட்டத்தில் நோக்கும் போது, அது வெறுமனே உடலியல், உளவியல் சார்பான செயற்பாடுகளையும், தொடர்புகளையும் குறித்து நிற்கும். எனவே சீரான இருதய துடிப்பையும், இரத்த ஓட்டத்தையும், சாதாரண (அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட) உளவியல் செயற்பாடுகளையும் கொண்ட மனிதரை 'ஆரோக்கியமான மனிதன்' என விளங்கிக் கொள்கிறோம். பரந்தவட்டத்தில் சுகாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து ஆய்வு செய்யும் போது சாதாரணமான சமூக, ஆன்மீக, உடலியல், உளவியல் கூறுகள் அனைத்தையும் இது உள்ளடக்குகிறது. பரிசுத்த வேதாகமத்தில் உடல் நலமானது பரந்த நோக்கிலேயே எடுத்தாளப் பட்டுள்ளது. குணமளிக்கும் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து முழுமனித விடுதலையைக் கொடுப்பதற்கு (லூ.11:33) இவ்வுலகிற்கு வந்தார்.[2]

கத்தோலிக்கப் போதனையானது விசுவாசத்தையும், அனுபவத்தை யும் அடிப்படையாகக் கொண்டு மனிதனின் சக்திகள் அனைத்தும் நடுநிலையோடு கையாளப்பட வேண்டும் எனக் கற்பிக்கின்றது. எமது சக்திகளின் தீவிரத்தன்மைக்கு நாம் சென்று விடக் கூடாது ஆனால் இது கடினமான ஓர் காரியமாகும். (உரோ 7:14), மனிதர்களாக இவ்வுலகில் படைக்கப்பட்ட நாம் அனைவரும் முழுமையானவர்கள் அல்ல. ஏதோ ஒரு குறையோடு நாம் அனைவரும் முழுமையை நோக்கி பயணம் செய்கிறோம். இந்தப் பயணத்திலே பல்வேறு சவால்களை நாம் சந்தித்தேயாக வேண்டும். துன்ப துயரங்களை நல் மனதோடு ஏற்றுப் பயணம் செய்கின்ற போது ஆன்மீக ரீதியில் கிறிஸ்துவில் வளர்ச்சியடை கிறோம் (யோவா. 16:33). எனவே உடல் நலம் சார்பாக நாம் கொண்டிருக்கும் கருதுகோள்கள் அனைத்தும் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். இயற்கையானதும், நாம் அடைய விரும்பும் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவு செய்வது என்பது நிகழக்கூடிய விடயமல்ல. உடல், உளநிலையில் நாம் ஆரோக்கியமானவர்களென மருத்துவ அறிக்கைகள் கூறலாம். ஆனால் ஆன்மீக, சமூக ரீதியில் அவர்கள் சீராக இயங்கவில்லையெனில் அவர்களது ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

'சிறந்த மருத்துவர்களாக' பெயரோடும் புகழோடும் வாழ விரும்பும் மருத்துவர்கள் வெறுமனே குறுகிய வட்டத்திலேயே தமது உடல் நலம் பற்றிய கண் நோக்கைக் கொண்டிருக்கிறார்கள்.[3]

நோயாளர்களை மனிதர்களாகக் கருதி அவர்களும் வாழ்வில் முழுமையை நோக்கி பயணிக்க வேண்டும் என விரும்பும் மருத்துவர்கள் அவர்களின் சமூக, ஆன்மீக தொழிற்பாடுகளையும் இனங்கண்டு சீர் செய்ய வேண்டிய வர்களாக இருக்கின்றார்கள்.

---

[2] Cf., Pope John Paul II, "The Ethnic of Genetic Manipulation" (Oct. 29, 1983), in *Origins* 13 ino.23, Nov. 17, 1983, P.385.

[3] Cf., Edmond D. Pellegnino and David C. Thomasma, *A Philosophical Basis of Medical Practice*, New York: Oxford Press, 1981, pp 51-80.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. கருவழிப்பு 01

1.1 நிகழ்வு 01
1.2 அறிமுகம் 02
1.3 வரைவிலக்கணம் 04
1.4 கருவழிப்பின் வகைகள் 04
1.4.1. நேரடியான கருவழிப்பு 05
1.4.2. மறைமுகமான கருவழிப்பு 05

1.5 கருவழிப்பிற்கான காரணங்கள் 07
1.5.1. வலுக்குறைந்த கருக்களை அழித்தல் 07
1.5.2. சமூக ஒழுக்க நெறி சார் கருவழிப்பு 08
1.5.3 சமூகச் சூழமைவு சார் கருவழிப்பு 09
1.5.4. மருத்துவம் சார் கருவழிப்பு 10

1.6 கருவளர்ச்சி 11
1.7 கருவழிப்பு முறைகள் 11
1.7.1. கருவழிப்பு சிசேரியன் முறையில் 12
1.7.2. உப்பு மூலம் நடைபெறும் கருவழிப்பு 12
1.7.3. டீ. சி. சத்திர சிகிச்சை 13
1.7.4. டீ. எக்ஸ் சத்திரசிகிச்சை 13
1.7.5. மாத்திரைப்பாவனை 13
1.7.6. எமது நாட்டில் நாட்டு வைத்தியர்கள் கையாளும் சில கருவழிப்பு முறைகள் 14

1.8 கருவழிப்பால் ஏற்படக் கூடிய நோய்கள் 14
1.9 கருச்சிதைவு 14
1.10 ஒழுக்கவியல் போதனை 15
1.11 வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் - பொறுப்புகளும் கடமைகளும் 18
1.12 கத்தோலிக்க வைத்தியசாலைகளின் கடமைகள் 19
1.13 ஒழுக்கவியல் உறுதிப்பாடுகளிலிருந்து பிறக்கும் தடைகள் 20


Director
Lebara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi

Director
Lebara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) செயற்கை முறையிலான கருவூட்டல் 23

2.1 நிகழ்வு 23
2.2 வரைவிலக்கணம் 24
2.3 செயற்கை முறையிலான கருவூட்டலானது இரண்டு வகைப்படும் 24
2.3.1. குடும்ப அமைப்பிற்குட்பட்ட / கணவன் மனைவிற் கிடையிலான கருவூட்டல் 25
2.3.2 குடும்ப அமைப்பிற்கு வெளியான / கணவன் மனைவியை விட மூன்றாம் (homologous) நபரின் செல்வாக்குள்ள கருவூட்டல் (heterologous) 25

2.4. ஒழுக்கவியல் போதனை 25
2.4.1. குடும்ப அமைப்புக்குட்பட்ட செயற்கை முறையி லான கருவூட்டல் பற்றிய ஒழுக்கவியல் போதனை 27
2.4.2. குடும்ப அமைப்புக்கு வெளியான செயற்கை முறையிலான கருவூட்டல் பற்றிய ஒழுக்கவியல் போதனை 27

3) உறுப்பு மாற்றல் சிகிச்சை 31

3.1 மனித உடலின் உயர் நிலை 32
3.2 இறந்த உடலின் பயன்பாடு 32
3.3 இறந்த மனித உடலும், பொது உத்தியோகத்தர்களும் 33
3.4 ஒழுக்கவியல் போதனை 34
3.5 உறுப்பு / இழைய மாற்றலானது மூன்று வகைப்படும் 36
3.5.1. ஒருவருடைய உடலுக்குள்ளேயே மாற்றல் 36
3.5.2 விலங்கிலிருந்து மனிதனுக்கு 36
3.5.3 மனிதனிடமிருந்து மனிதனுக்கு 36

4) இரக்கக் கொலை 38

4.1 நிகழ்வு 38
4.2 அறிமுகம் 38
4.3 பதவிளக்கம் 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.3.1. நேரடியான இரக்கக் கொலை 40
4.3.2. மறைமுக இரக்கக் கொலை 40

4.4. ஒழுக்கவியல் போதனை 41

5) தற்கொலை 46

5.1 நிகழ்வு 46
5.2 பலரும் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலை செய்து கொள்கிறார்கள் 48
5.2.1. சமுதாயக் காரணிகள் 49
5.2.2. ஆரோக்கியம் சார்பான காரணிகள் 49
5.2.3. உளவியல் காரணிகள் 49
5.2.4. ஏனைய காரணிகள் 50

5.3 பரிசுத்த வேதாகமத்தில் தற்கொலை 50
5.4. ஒழுக்கவியல் போதனை 52

6) இயற்கை முறையிலான குடும்பக் கட்டுப்பாடு 55

6.1 நிகழ்வு 55
6.2 அறிமுகம் 55
6.3 நோக்கம் 56
6.4 சில இயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் 56
6.4.1 தாய்ப்பால் ஊட்டல் முறை 56
6.4.2 வெப்பநிலை முறை 57
6.4.2.1 எப்போது வெப்பநிலை எடுக்கப்பட வேண்டும் 58
6.4.2.2 எவ்வாறு வெப்பநிலை எடுக்கப்பட வேண்டும் 58
6.4.2.3 வெப்பநிலைப் பதிவு 59

6.4.3 மாதவிடாய் சுழற்சி கணிப்பு முறை 59

6.4.4 கருச்சினை கனிவு முறை / டாக்டர் பில்லிங்ஸ் முறை / வெண்கசிவு முறை. 61
6.4.4.1. வெண்கசிவின் முக்கியத்துவம். 61


Director
Lebara Library
Educational Resource Centre
87, Kanamimbuvaikulam
Kilinochchi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.4.4.2 பெண்ணின் மாதவிடாய் 62

6.4.4.2.1 முதல் வறண்ட நாட்கள். 62

6.4.4.2.2 வளமான வெண்கசிவு நாட்கள் 63

6.4.4.2.3 உச்ச அறிகுறி நாட்கள் 63

6.4.4.2.4 பின் வறட்சிக் காலம் 63

6.4.4.2.5 கருத்தரிக்க வாய்ப்புள்ள நாட்கள் 65

6.4.4.2.6 கருத்தரிக்காத நாட்கள் 65

6.4.4.2.7 ஆண்பிள்ளை, பெண்பிள்ளை 65

6.4.4.2.8 உச்ச நாளுக்குரிய சில அறிகுறிகள். 66

6.8. ஒழுக்கவியல் போதனை. 66

7) குளோனிங் 69

7.1. அறிமுகம் 69

7.2. குளோனிங் என்றால் என்ன 69

7.2.1. பாலியல் சாராத இனவிருத்தி. 70

7.2.2. பாலியல் சார்ந்த இனவிருத்தி. 70

7.3. ஒழுக்கவியல் போதனை. 71

8) கருத்தடை 75

8.1. நிகழ்வு. 75

8.2. அறிமுகம் 76

8.3. விந்தை வெளியில் சிந்துதல் / ஓனானிசம் 77

8.4. யோனியைக் கழுவும் முறை 78

8.5. உறைப்பாவனை 78

8.5.1. ஆணுறை 78

8.5.2. பெண்ணுறை 79

8.5.3. உறைப் பாவனையால் ஏற்படும் விளைவுகள். 79

8.6. கருப்பையின் உள்ளே போடும் கருவிகள் (I.U.D) 80

8.6.1. கருப்பையின் உள்ளே போடும் கருவிகளினால (I.U.D) ஏற்படும் தீமைகள். 82




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.7. குடும்ப கட்டுப்பாட்டு மாத்திரைகள். 83
8.7.1. கருத்தடை மாத்திரைகள் பாவிக்கும் போது மிக அதிகம் பாதிக்கப்படுபவர்கள். 83
8.7.2. மாத்திரைகளால் ஏற்படும் ஏனைய கெடுதல்கள் 84

8.8. நிரந்தரமான முறைகள் 84
8.8.1. வசக்டமி 84
8.8.2. டியுபெக்டமி 85

8.9. ஒழுக்கவியல் போதனை 85
8.9.1. மனிதனுடைய முழுமையான தரிசனம் 86
8.9.2. திருமணம் ஓர் அருள் அடையாளம் 86
8.9.3. திருமண அன்பு 87

8.10. கருத்தடை உத்திகளால் ஏற்படும் பாரிய விளைவுகள். 88

BIBLIOGRAPHY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு அழிப்பு

## 1.1 நிகழ்வு

அண்மையிலே நான் நீர்கொழும்பு சென்றபோது ஒரு பெண்ணைச் சந்தித்தேன். இப்பெண் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். இவரை எனக்கு நன்கு தெரியும். ஆனால் பல நீண்ட காலமாகக் காணாததாலும், தொடர்புகள் இல்லாததனாலும் இவரை என்னால் உடனடியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனாலும் அப்பெண்ணால் என்னை அடையாளம் காண முடிந்தது. அவரைக் கண்டபோது பல சிந்தனைகள் எனது உள்ளத்தில் இழையோடின. இவரது முகம் பல செய்திகளை வெளிப்படுத்தியது. இவர் தற்போது ஓர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். படிப்படியாக இவருடன் கதைத்த போது பல செய்திகளை அறிந்து கொண்டேன்.

இவர் ஆரம்பத்தில் ஒரு இளைஞனைக் காதலித்தார். பல நாட்களாகக் காதல் வளர்ந்தது. இவ்விளைஞன் வெளிநாட்டில் இருந்து வந்து பல ஆசைகள் காட்டி இப்பெண்ணின் மனதில் இடம்பிடித்து இவளைத் திருமணம் முடிப்பதாகவும் வாக்குக் கொடுத்தான். இடைப்பட்ட காலத்தில் தமது எல்லை களை மீறி உடலுறவும் கொண்டார்கள். இதன் விளைவாக இவள் கருவுற்றாள். செய்தி வெளியில் தெரிந்தால் குடும்பமானம் தெருவிற்கு வந்துவிடும் எனத் தெரிந்த பெற்றோர், பெண்ணை இரகசியமாக கொழும்பிற்கு அழைத்து வந்து கருவழிப்பு மேற்கொண்டனர். கருவழிப்புச் செய்கையின் போது பெண்ணின் கருப்பையில் ஏற்பட்ட கீறு காரணமாக கருப்பை சீழ் பிடித்து பல அசௌகரியங் களைக் கொடுத்தது. இறுதியில் வேதனை மிகுதியால் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது வைத்தியர் பெண்ணின் கருப்பையை வெளியேற்றினால் தான் பெண்ணைக் காப்பற்ற முடியும் என அறுதியாகக் கூறிவிட்டார். வேறுவழி ஏதுமின்றி கருப்பை வெளியேற்றப்பட்டது.

விடயமறிந்த அவ்விளைஞன் நாசூக்காக அப்பெண்ணைக் கைவிட்டு விட்டான். தற்போது இவர் தனது பெற்றோரோடு வசித்துவருகிறார். நீண்ட நாட்களாக யாதுசெய்வதென்று தெரியாது வாழ்வே இருளாக வாழ்ந்த இவர் தற்போது வெளிச்சத்திற்கு வந்தவராக வாழ்வை மீண்டும் புத்தூக்கத்தோடு ஆரம்பித்துள்ளார். இவருடைய செய்திகேட்டு உண்மையில் என் மனம் வேதனையடைந்தது. (பதிப்பித்தலுக்கான அனுமதி சம்பவம் தொடர்புபட்ட வரிடமிருந்து பெறப்பட்டது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.2 அறிமுகம்

தாயும் தாய்மையும் போற்றப்பட வேண்டிய விடயங்களாகும். தாயையும் தாய்மையையும் போற்றாத இலக்கியம் இல்லை என்றே சொல்லலாம். தமிழ் இலக்கியங்களை சுவைக்கின்ற போது அநேகமான காப்பியங்கள், பாடல்கள், தாயின் பெருமையையும், அவளுடைய தாய்மையையும் பல்வேறு கோணங்களில் நோக்கிப் பாடுகின்றன. இவை அனைத்தும் உண்மையே. நாம் அனைவரும் மனிதப் பிறவிகளாக இவ்வுலகில் சீவிக்கின்றோம் என்று சொன்னால் அதற்குக் காரணம் எமது தாய்மார் என்றால் பொய்த்துவிடாது. ஓர் உயிரை தனது கருவறையிலே சுமந்து அந்த உயிரை உலகிற்குப் பரிசாகக் கொடுப்பவர்கள் தாய்மார் ஆவர். இறைவனின் படைப்புத்தொழிலிலே முழுமையாக பெற்றோர் பங்கேற்கின்றனர் (காண்க. தொட. நூல். 1:28).

**ஓர் ஆணுடைய விந்தும் ஓர் பெண்ணினது முட்டையும் இணைந்து கருவாக உருவாகும் பொழுதிலே அங்கே ஓர் உயிர் தோன்றுகின்றது.** ஓர் மனிதனுக்கு இருக்க வேண்டிய மனித மாண்பு அந்த உயிருக்கும் அவ்வேளையிலிருந்து கிடைக்கிறது. இன்று விஞ்ஞான ரீதியில் கரு உருவாக் கத்திற்கு பரிசோதனைக் குழாய்கள் பயன்படுத்தப்பட்டு கருக்கட்டல் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. செயற்கையான கருவறைகளை எவராலும் இன்று வரை உருவாக்க முடியவில்லை. ஓர் உயிர் உருவாகின்ற கருவறை புனித மானது, உயர்ந்தது. தாயின் கருவறையிலே உருவாகின்ற உயிர் போன்றதொரு உயிர் வேறு எப்பொருளிலும் உருவாகாது, உருவாக முடியாது.

தாயின் கருவறையிலே பின்வரும் காரணிகள் குழந்தை ஒன்றிற்குக் கிடைக்கிறது:

1. **ஊட்டச் சத்துக் கடத்தல்:** உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கிறது,
2. **உளவியல் கூறுக் கடத்தல்:** உளவியல் வளர்ச்சிக்குத் தேவையான கூறுகள் சீராகக் கிடைக்கிறது,
3. **அன்புக் கடத்தல்:** குழந்தை தாயினுடைய அன்பை சுவைக்கக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய அன்புச் சுவைப்பே எதிர்காலத்தில் குழந்தை மற்றவருடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள உதவிசெய்கிறது.
4. **பாதுகாப்புக் கடத்தல்:** தாயினுடைய பாதுகாப்பை குழந்தை பெறுகிறது. இத்தகைய பாதுகாப்பானது குழந்தையை பயம், பீதி இல்லாது நல்ல சூழலில் வாழ்வைக் கொண்டுசெல்ல உதவுகிறது.

 3௬

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **ஆன்மீகக் காரணிகள் கடத்தல்:** தாயினுடைய ஆன்மீகக் காரணிகளை குழந்தை பெற்றுக் கொள்கிறது. இதன் மூலமாக சமூகத்தில் சிறந்த விழுமியங்கள் கொண்ட வாழ்வை முன்னெடுக்க உதவுகிறது.

மேற்கூறப்பட்ட காரணிகளை நோக்குகின்ற போது தாயின் கருவறையிலே ஓர் உயிர் வளர்வதற்கு வேண்டிய ஊட்டச்சத்து மாத்திரம் கொடுக்கப்படுகிறது எனக் கூறமுடியாது. மாறாக ஓர் உயிரின் முழுவளர்ச்சிக்கு வேண்டிய உடல், உள, ஆன்மீக ஊட்டச்சத்துக்களும் வழங்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தாயின் கருவறைக்கும், கண்ணாடிப் பேழைக்கும் இடையேயுள்ள மாபெரும் வேறுபாடு இதுவேயாகும்.

ஆனால், இவ்வாறான புனிதமான கருவறைகள் கொல்களங்களாக (Slaughter House) மாற்றப்படும் அவலம் எம் பகுதிகளிலே அரங்கேறுகின்றது. இந்த அரங்கேற்றத்திற்கு நாட்டு சட்டதிட்டங்களும் துணைபோவது மனவருத்தம் தரக்கூடிய செயலாகும். ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, சீனா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் கருவழிப்பை சட்டபூர்வமாக்கியுள்ளன.

கருவழிப்பு சார்பாக '**abortionstatistic.com**' எனப்படும் இணையத் தளத்தில் இருந்து பெறப்பட்ட சில தரவுகள் பின்வருமாறு:

- உலகில் 54 நாடுகளில் கருவழிப்பு சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. அதாவது உலக சனத்தொகையில் 61 வீதமானவர்களை இந்நாடுகள் கொண்டுள்ளன.
- அதேவேளை 97 நாடுகளில் கருவழிப்பு சட்டபூர்வமற்றதாக காணப்படுகிறது. அதாவது உலக சனத்தொகையில் 39 வீதமானவர்களை இந்நாடுகள் கொண்டுள்ளன.
- ஒவ்வோர் வருடமும் ஏறத்தாழ 46 மில்லியன் கருவழிப்புகள் உலகத்தில் அரங்கேறுகின்றன. இவற்றில் 20 மில்லியன் சட்டபூர்வமற்றதாக மேற்கொள்ளப்படுகின்றன.
- ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 1,26,000 கருவழிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுனாமி, கத்தரீனா, றீற்றா, வில்மா போன்ற அனர்த்தங்களாலும், பூகம்பம், நிலச்சரிவு, காட்டுத்தீ போன்றவற்றாலும் மனித உயிர்கள் அழிகின்றபோது நாம் கவலைப்படுகின்றோம், அனுதாபம் கொள்கின்றோம். ஆனால் எத்தனையோ இலட்சக்கணக்கான மனித உயிர்கள் அன்றாடம் வேட்டையாடப்படுகின்றது என்ற உண்மை தெரிந்தும் நாம் மௌனித்து நிற்கின்றோம். இந்த மௌனம் ஒத்துப்போதலுக்கு சமனாகும். தாயினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையிலே மனித உயிர் கொலைசெய்யப்படும் செயற்பாடானது திட்டமிட்ட கொலை, மனிதவேட்டை, மிருகத்தனமான செயலாக கணிக்கப்பட வேண்டும். எனவே தான் திருச்சபைச்சட்டம் 1398 பின்வருமாறு கூறுகின்றது: முழு மனிதச் செயலாக, கருவழிப்பில் ஈடுபடுபவர்கள் இயல்பாகவே திருச்சபையிலிருந்து விலக்கப்படுகின்றார்கள் (latae sententiae).[4]

## I.3 வரைவிலக்கணம்

ஓர் தாயினுடைய கருவறையிலே உருவாகி வளரும் உதவியற்ற கருவினை (non-viable) முழு அறிவு, சுதந்திரம், விருப்பத்தோடு தாயினுடைய கருவறைக்குள் வைத்துக் கொலை செய்தல் கருவழிப்பு எனக் கொள்ளப்படும்.[5]

இக்கொலையை மேற்கொள்பவர்கள் பல காரணங்களைக் கூறி தமது இழிவான செயலை நியாயப்படுத்த முற்படுகின்றனர். கருவழிப்பை மேற்கொள் பவர்கள் பின்வரும் கருத்துக்களை கைக்கொள்கிறார்கள்:

1. நாம் அழிப்பது சிறு சதைத்துண்டே ஆகும். அது உயிர் அல்ல.
2. எமது உடலின் மீது எமக்கு உரிமையுண்டு (pro-chioce). எனவே நான் எனது உடலில் எதையும் அகற்றலாம் எதையும் ஏற்றுக் கொள்ளலாம். .ஏனையவர்கள் எமது தனிப்பட்ட வாழ்வில் குறுக்கீடு செய்வது விரும்பத்தகாதது. மற்றவர்கள் எமது வாழ்க்கைப் பிரச்சினைகளில் தலையிடுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.
3. கருவழிப்பை நாம் கருத்தடை நோக்கிற்காக மேற்கொள்கிறோம்.
4. எனது குடும்பப் பொருளாதார நிலையில் பிள்ளையைப் பெற்று வளர்த்தெடுப்பது இயலாததும் கடினமானதுமான விடயமாகும். எனவே கருவழிப்பை மேற்கொள்கிறோம்.
5. எனது கணவர் பிள்ளை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்க மறுக்கிறார். நான் கருவழிப்புச் செய்யவில்லையாயின் எமது குடும்ப உறவு அறுந்து விடும். எனவே நான் கருவழிப்புச் செய்கிறேன்.
6. எனது கல்வியை நான் பூர்த்தி செய்யும் வரை நான் பிள்ளை பெற்றுக்கொள்ள இயலாது. எனவே நான் கருவழிப்புச் செய்கிறேன்.

## I.4 கருவழிப்பானது இரண்டு வகையாகப் பிரிக்கப்படலாம்:

1. நேரடியான கருவழிப்பு (direct abortion)
2. மறைமுகமான கருவழிப்பு (indirect abortion)

---

[4]Cf., The Code of Canon Law, Prepared by the Canon Law Society of Great Britain and Ireland, Bangalore: Collins Publications, No.1398, p.248.

[5] Cf., Bernard Haring, *The Law of Christ*, trans. Edwin G. Kaiser, Vol.3,Bangalore:Theological,1960, p.205.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.1 நேரடியான கருவழிப்பு: (direct abortion)

ஓர் கருவழிப்புச் செயற்பாட்டின் நேரடியான நோக்கம் அல்லது உடனடியான விளைவு (intention) கருவை கொலை செய்தலாக அமைகின்ற போது அக்கருவழிப்பானது நேரடியான கருவழிப்பாகக் கருதப்படுகின்றது.[6] கத்தோலிக்க திருச்சபையானது அனைத்து நேரடியான கருவழிப்பையும் கண்டிப்பதோடு, நேரடியான கருவழிப்பானது தன்னிலேயே தீமையானதாக இருக்கின்றது எனக் கற்பிக்கின்றது.

### 1.4.2 மறைமுகமான கருவழிப்பு: (indirect abortion)

ஓர் வைத்தியச் செயற்பாட்டின் போது கருவை அழிப்பது நேரடியான நோக்கமாக அல்லது உடனடியான விளைவாக அமையாது கருவழிக்கப்படுவது வைத்திய செயற்பாட்டின் விளைவாக அமைகின்ற போது அது மறைமுக கருவழிப்பு எனக் கொள்ளப்படும்.[7] கருவினுடைய வெளியகற்றல் முன்னதாகவே அறியப்பட்டாலும் செயற்பாட்டின் நோக்கமும் முடிவும் கரு வெளியகற்றலாக இருப்பதில்லை, அதேவேளை சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியரின் நோக்கமும் கருக்கொலையாக இருக்கவில்லை. ஆனால், எந்தளவிற்கு ஒரு தாயின் உயிரை பாதுகாத்துக்கொள்வதற்காக கருவைக் கொலை செய்யலாம் என்பது கேள்விக்குரியதே.

இவ்வாறான வினாவிற்கு விடைகொடுப்பதற்கு நாம் "இரட்டை விளைவுக் கோட்பாட்டைப்" (principle of double effect) பிரயோகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நன்மையையும் தீமையையும் கொண்ட இரண்டு விளைவுகளைத் தரக்கூடிய ஒரு செயற்பாடு பின்வரும் நான்கு காரணிகளையும் பூர்த்தி செய்யும் வேளை அச்செயற்பாடானது நியாயமான செயலாகக் கொள்ளப்படுதலே "இரட்டைவிளைவுக் கோட்பாடு" ஆகும்.

1. *செய்யவிருக்கும் செயற்பாடானது தன்னிலேயே நல்லதாக (good in itself) இருக்க வேண்டும் அல்லது நன்மையோ தீமையோ அற்றதாக (indifference) இருக்க வேண்டும். (உதாரணமாக 'புற்றுநோயால்' வேதனைப்படும் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சையைக் குறிப்பிடலாம்.) அதாவது தன்னிலேயே தீமையான எந்தவொரு செயற்பாடும், அது நன்மையான விளைவைத் தந்தாலும் மேற்கொள்ளப்படக் கூடாது.*

[6] Cf., George V. Lobo, *Current Problems in Medical Ethics*, India: St. Paul's Publications, 1974, p.107.
[7] Cf., John P. Kenney,The Principles of Medical Ethics, England: Thomas Moor Books Ltd., 1962, p. 186.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2. ஒரு செயற்பாட்டிலிருந்து நன்மையான விளைவும், தீமையான விளைவும் ஓரேநேரத்தில் சமமாக (simultaneously) வெளிப்படவேண்டும். ஆனால் கவனத்தில் எடுத்து தீர்மானிக்கப்பட்ட விளைவு நன்மையானதாகவே இருக்கவேண்டும். தீமையாக இருக்கக் கூடாது. (உதாரணமாக கருப்பையில் புற்றுநோயால் துன்பப்படும் ஒரு கர்ப்பிணித் தாய்க்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சையில் நன்மையான விளைவாக தாயினுடைய குணமாக்கலும், தீமையான விளைவாக கருவெளியேற்றலும் இடம்பெறலாம். இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட விளைவு குணமாக்கலே ஆகும்.)*

*3. செயற்பாட்டைச் செய்கின்ற நபருடைய எண்ணம் நன்மையானதாகவே இருக்கவேண்டும். ஒரு நல்ல செயற்பாடு தீமையான எண்ணத்தோடு செய்யப்படுமானால் அது தீமையானதே. தீமையான விளைவு எக்காரணம் கொண்டும் விரும்பத்தக்கது அல்ல. ஆனால் இரட்டைவிளைவுக்கோட்பாட்டின் அனைத்து அம்சங்களும் பூர்த்திசெய்யப்படும்போது அனுமதிக்கப்படலாம் (permitted). தீயவிளைவை எண்ணுதல் எப்போதும் பிழையானது ஆகும். (எடுத்துக்காட்டாக, இரண்டாவது கருத்தில் கூறப்பட்ட உதாரணத்தில் தாயினுடைய குணமாக்கலே எண்ணத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட செயற் பாடாகும். கருவெளியகற்றலானது அனுமதிக்கப்படும் செயற்பாடு மாத்திரமே ஆகும்.)*

*4.அனுமதிக்கப்படும் தீமையான விளைவானது பெறப்படப்போகும் நன்மைக்குச் சமனானதாக (proportionate) இருக்கவேண்டும். பெறப்படும் நன்மையோடு ஒப்பிடும் போது தீமையானது எக்காரணம் கொண்டும் அதிகளவாக இருக்கக்கூடாது. (உதாரணமாக, இராணுவத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் போது 200 வீரர்களை காப்பாற்றுவதற்காக 500 வீரர்களை இழப்பது பிழையான செயலாகும். நன்மையும் தீமையும் ஒப்பீட்டளவில் சமனானதாக இருக்கவேண்டும்).[8]*

மேற்கூறப்பட்ட நான்கு அம்சங்களையும் ஓர் மறைமுக கருவழிப்புச் செயற்பாடு உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இவ்வாறான கருவழிப்பு நியாயப்படுத்தப்படுகின்றது.

[8] Cf. Karl H.Peschke, *Christian Ethics*, Vol.II, Bangalore: Theological Publications in India, 1987, p.248.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.5 கருவழிப்பிற்கான காரணங்கள்

பின் நவீனத்துவ காலத்தில் வாழுகின்ற மனிதன் தன்னை துறைசார் ரீதியில் நிபுணத்துவப்படுத்தியதன் விளைவாக எக்காரியத்தையும் நியாயப்படுத்தி தப்பித்துக்கொள்ளும் போக்குடையவனாக காணப்படுகின்றான். அதீத அறிவு இதற்கு உதவியாக இருக்கின்றது. இதனடிப்படையில் கீழ்வரும் காரணங் களுக்காக கருவழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றைப் பலரும் நியாயப்படுத்த முற்படுகின்றனர்.

### I.5.I வலுக்குறைந்த கருக்களை அழித்தல் (Eugenic Indication)

நவீன தொழில்நுட்பக் கருவிகளின் வளர்ச்சிகாரணமாக தற்காலத்தில் ஓர் கருவினுடைய வளர்ச்சிகளையும், பரிமாணங்களையும் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. அமினியன் பகுப்பாய்வு (Amniocentesis), கோரியன் முனைப் பகுப்பாய்வு (Chorionic Villus Sampling), கழியலைமூலமான ஆய்வு (Foetal Ultra-sound Scans) என்பன குறிப்பிடத்தக்க சில முறைகளாகும். எனவே ஏதோ ஓர் குறைபாடு காரணமாக எதிர்காலத்தில் வலுக்குறைந்த குழந்தையாக உருவாவதைத் தடுக்கும் நோக்குடன் குறைபாடுள்ள கருவை தாயின் கருவறையிலே அழிக்கின்ற செயற்பாட்டையே இவ்வகை குறித்து நிற்கின்றது.[9]

கருத்தரிப்பின்போது அல்லது கருவளர்ச்சிக் காலங்களில் தாய் மதுபானம், புகைத்தல் பொருட்கள், போதைவஸ்துக்களைப் பயன்படுத்து வதனாலும், ஒரு சில தொற்றுவியாதிகளாலும், குறிப்பாக சின்னமுத்து நோயால் தாய் பாதிக்கப்படுவதாலும், பரம்பரை வியாதிகள் காரணமாகவும் ஓர் குழந்தை குறைபாடுள்ள சிசுவாகப் பிறக்கின்றது.[10]

குழந்தைச் செல்வங்கள் இறைவனால் பெற்றோருக்குக் கொடுக்கப்படும் கொடைகளாகும். குழந்தைகளை நல்மனத்தோடு ஏற்று அவர்களை நல்ல மனிதர்களாக வளர்த்து சமூகத்திற்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்குரியதாகும். இதுவே பெற்றோரின் தலையாய பொறுப்பாகும். தமது பொறுப்பை சீரிய முறையில் ஆற்ற அனைத்துப் பெற்றோரும் கடமைப்பட்டுள்ளார்கள். இப்பொறுப்பை உணர்ந்து சரிவர ஆற்றுகின்றபோதுதான் தமது வாழ்விற்கான பொருளை பெற்றோர் அடைந்து கொள்ள முடியும். இது சரிவர அமையவில்லையாயின் வாழ்வு பொருளற்ற அல்லது வீணான ஒன்றாக மாற்றமடைய வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

---

[9] Cf., Bernard Haring, *The Law of Christ*, p. 206.
[10] Cf., Karl H. Peschke, *Christian Ethics* , p. 357.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமகன் கிறிஸ்து தன்னையே முழுவதும் எமக்காக தியாகப் பலியாகத் தந்தார். திருச்சபை வரலாற்றில் பலரும் பலவற்றைத் தியாகம் செய்திருக்கின்றார்கள். திருமுழுக்கின் வழியாக நாம் தியாக வாழ்விற்கே அழைக்கப்பட்டிருக்கின்றோம் (காண்க. எசாயா.53:4-5, உரோ.6:8-11) அன்றாடம் நாம் பங்குகொள்ளும் திருப்பலியானது தியாகப்பலியாக அமைவதோடு எம் ஒவ்வொருவரையும் அத்தகைய வாழ்விற்கே அழைத்து நிற்கின்றது. எனவே ஒரு குழந்தையானது வலுக்குறைந்ததாக கிடைப்பதால் எந்த விதத்திலும் அப்பிள்ளையின் மாண்பில் குறையிருக்காது. அவ்வாறான பிள்ளையை நல்ல மனத்தோடு ஏற்று பல தியாகங்கள் ஊடாக வளர்த்தெடுத்தல் பெற்றோரின் கடமையாகும். அக்குழந்தையைக் கொலை செய்வது எந்தவகையிலும் நியாயப்படுத்தப்பட முடியாதது ஆகும்.

## 1.5.2 சமூக ஒழுக்கநெறிசார் கருவழிப்பு (Ethical Indication)

விபச்சாரம், கற்பழிப்பு போன்ற செயற்பாடுகளின் விளைவாக உருவாகும் கருக்களை தாயினுடைய சமூக அந்தஸ்தையும், எதிர்கால குடும்ப நலனையும் முன்னிட்டுக் கலைக்கும் முயற்சியானது இவ்வகை கருவழிப்பு ஆகும். விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களும், கற்பழிப்பால் பாதிக்கப்படும் பெண்களும் தமக்கு கிடைக்கும் பிள்ளைகளை அழித்துவிடவே விரும்புகிறார்கள். தமது எதிர்காலம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இப்பெண்கள் கருவழிப்பில் ஈடுபடுகின்றார்கள். இப்பெண்களைவிட இவர்களைப் பெற்ற பெற்றோர் தமது பிள்ளையின் வாழ்வில் அக்கறைகொண்டு தமது பிள்ளையின் வயிற்றில் வளரும் கருவை அழிக்க வற்புறுத்துவதை நாம் காணலாம்.[11]



படம் 1

இறைவனின் விலைமதிப்பில்லாக் கொடையான மனித உயிரானது இவ்வாறானவர்களுக்கு வேண்டப்படாத கொடையாக மாறுவதை நாம் அவதானிக்கலாம். இதற்குத் தீர்வாக கருவழிப்புச் செய்வதால் உடல், உள, மன அலைச்சல் அற்றுப் போய்விடும் எனக் கருதமுடியாது; மாறாக உடல், உள, மன அலைச்சல் அதிகரித்து தற்கொலையில் முடிவடையும் சம்பவங்களும் எமது பகுதிகளில் அரங்கேறியுள்ளன. சாதாரணமாகச் சிந்தித்து

[11] Cf., *Ibid.*, p.357.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

009950

உடனடியான தீர்வை வழங்க முற்படுபவர்கள் கருவழிப்பை ஊக்குவிப்பார்கள். ஆனால் ஆழமாக தியானிக்கையில் முன்னையதைவிடப் பின்னைய நிலை மிக மோசமாக மாறுவதை நாம் அவதானிக்கலாம்.

விபச்சாரமானாலும் சரி, கற்பழிப்பு ஆனாலும் சரி உருவாகும் கரு எத்தகைய தீங்கும் செய்யாதது. இவ்வாறான தீமைகளுக்கும் அக்கருவிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. எனவே எதற்காக அநீதியான முறையில் நாம் அனுபவித்த துன்பத்திற்காக ஒரு உயிரைக் கொல்ல முடியும். இது எந்த விதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாத செயல் ஆகும்.[12]

### I.5.3 சமூகச்சூழமைவுசார் கருவழிப்பு (Social Indication)

ஒரு தாய், தனது வயிற்றிலே உருவாகியுள்ள குழந்தையின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாத காரணத்தாலும், பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் காரணமாகவும் மேற்கொள்ளப்படும் கருவழிப்பு சமூகச்சூழமைவுசார் கருவழிப்பு ஆகும்.[13] இவ்வகையான கருவழிப்பு ஏழைகள் மத்தியிலே அதிகம் எனப் பலரும் கருதுவதுண்டு. ஆனால் யதார்த்தத்தில் இது பணம்படைத்தவர்கள் மத்தியிலே அதிகமாகக் காணப்படுவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.



படம் 2

எமது சமூக அந்தஸ்து, அழகு, பொருளாதார நிலைகளுக்காக ஒருவர் உதவியற்ற கருவைக் கொலை செய்து கொலைக்காரன் ஆவது எந்தளவிற்கு நியாயமானது? இறைவன் எமக்குத் தருகின்ற பிள்ளைச் செல்வங்களை பராமரிக்கும் அருளையும், வல்லமையையும் இறைவனே எமக்கு தருகின்றார். சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை எல்லாம் நாம் திருப்திப்படுத்த முற்படுவோமாயின் எமது இலக்கை, எமது மனச்சான்றை நாம் மறுப்பவர்களாக மாறிவிடுவோம். நாம் சமூகத்தைச் சார்ந்த சமூகப்பிராணிகளாய் இருந்தாலும், எமது மனச்சான்றின் குரலுக்குச் செவிகொடுத்து இறைதிட்டத்தை பூர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.[14]

[12] Cf., Bernard Haring, *The Law of Christ*, p. 207.
[13] Cf., Karl H. Peschke, *Christian Ethics* ,p.357.
[14] Cf., Bernard Haring , *The Law of Christ* , pp.207-208.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

009950

ஒரு நாட்டுச் சட்டமானது கருக்கலைப்பை நியாயப்படுத்தினால் கிறிஸ்தவர்களாகிய நாம் எமது மனச்சான்றிற்கு எதிராகப் போகவேண்டிய அவசியமில்லை. இதையே இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "ஏனெனில் திருமணம் செய்து கொள்ளவும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என ஆய்ந்து தீர்மானிக்கும் பொறுப்பு தாய்தந்தையரின் நேர்மையான முடிவைப் பொறுத்ததேயன்றி, பொது ஆட்சியாளரின் தீர்ப்புக்கு எக்காரணத்தை முன்னிட்டும் விட்டுவிடத்தக்கதன்று. ஆனால் தாங்கள் பெற்றெடுக்க விரும்பும் குழந்தைகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதில் தாய்தந்தையர் நன்முறையில் உருவாகியதொரு மனச்சான்றின் அடிப்படையில் செயல்பட வேண்டும் (GS.87).[15]

## I.5.4 மருத்துவம்சார் கருவழிப்பு (Medical Indication)

ஓர் கருவினுடைய தரிப்பினால் தாயானவள் தனது உயிரை இழக்கும் நிலைக்கு தள்ளப்படும் போது அல்லது ஒரு கருவினுடைய வளர்ச்சியானது ஏதோ ஒரு படிமுறையில் தாயினுடைய உயிருக்கு ஆபத்தாக மாறும் பட்சத்தில் கருவை அழித்து விடும் செயற்பாடானது மருத்துவம் சார் கருவழிப்பு ஆகும்.[16] ஒரு கருவை முழுமனத்தோடு கொலை செய்வதன் மூலம் எந்தவோர் வைத்தியரும் கொலைகாரனாக மாறமுடியாது.

தாயினுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் எனவே கருவை நாம் அழித்துவிடலாம் என இலகுவாக நாம் பொருள் கொள்ளமுடியாது. காரணம் கருவை அழித்தல் ஒரு கொலையாகக் கருதப்படுகிறது (murder). ஆனால் இவ்வாறானதோர் இக்கட்டான நிலையில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்பாடானது "இரட்டை விளைவுக் கோட்பாட்டின் அம்சங்களை பூர்த்தி செய்யுமாயின் கருவழிப்பானது அனுமதிக்கப்படலாம். ஆனால் நேரடியான விளைவாக முன்னதாகவே கொள்ளப்படக்கூடாது. அதாவது தாயினுடைய கருப்பையில் ஏற்படும் புற்றுநோய் (cancer) காரணமாக கருப்பையை அகற்றுகின்ற போது அதனுள் தங்கியிருக்கும் கருவும் அகற்றப்படுகிறது. இங்கு கரு அகற்றலானது உடனடியாகத் தீர்மானிக்கப்பட்ட விளைவு அல்ல (not intended) மாறாக அனுமதிக்கப்படும் விளைவாகும் (but permitted).[17]

[15] Cf., *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், திருச்சிராப்பள்ளி: தேடல் வெளியீடு," "இன்றைய உலகில் திருச்சபை", எண்.87, 2001 . பக் 770-772.*

[16] Cf., Karl H. Peschke, *Christian Ethics*, pp 357-358.

[17] Cf., Bernard Haring, *The Law of Christ* , pp. 208-209.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.6 கருவளர்ச்சி பற்றிய சிறு விளக்கம்:

1. உடல் உறவு கொண்டு ஆணுடைய விந்தும் பெண்ணுடைய முட்டையும் சேர்ந்தவுடன் வாழ்க்கை ஆரம்பிக்கப்படும். இச்செயற்பாடானது 15 நிமிடங்களில் நடைபெறுகிறது.
2. 13 நாட்களில் : இரத்தம், இரத்தநாளங்கள், நாடிகள், மூளை என்பன உருவாகும்.
3. 18 நாட்களில் : இதயம் துடிக்க ஆரம்பிக்கும்.
4. 4ம் வாரத்தில் : கை, கால்கள், உருவாகும்.
5. 6ம் வாரத்தில் : மூளை சிறப்பாகச் செயற்படும்.
6. 7ம் வாரத்தில் : அனைத்து உறுப்புக்களும் உருவாகும்.
7. 8ம் வாரத்தில் : உணரும் தன்மையைப் பெறும், பிடிப்பதற்குக் கொடுக்கும் எதனையும் பிடித்துக்கொள்ளும்.
8. 9ம் வாரத்தில் : சிசுவின் கைவிரல் அடையாளம் வளர்ச்சியடைந்துவிடும்.
9. 10ம் வாரத்தில் : பாதங்கள் சீரான வளர்ச்சியடைந்துவிடும்.
10. 11வது வாரத்திலிருந்து : உடலின் செயற்பாடு முழுமையாகிறது. மூச்செடுத்தல், நீர்ப்பதார்த்தங்களை உட்கொள்ளல், ஜீரணித்தல், சிறுநீர் கழித்தல், ஓசை சத்தங்களை உணர்தல், அனர்த்தம் ஒன்று எனத் தோன்றுமிடத்து தானாகவே அதிலிருந்து விடுபட இலகுவானதோர் இடத்தைக் கர்ப்பப்பையினுள் தேடிக்கொள்ளுதல், கர்ப்பநீரினை சுவைமிக்கதாக மாற்றினால் அதிகமாக அருந்துதல், கசப்பு எனின் குறைவாக அருந்துதல்.
11. 18வது வாரத்தில் : நடத்தை ஆரம்பமாகிறது, மனநிலைகள் மாற்றமடைகிறது, புன்னகைக்கத் தொடங்குகிறது, அழ ஆரம்பிக்கிறது, விரல்நுனியை சூப்ப ஆரம்பிக்கிறது.

இவ்வாறாக மனித உயிர் வளர்ச்சிநோக்கிப் பயணம் செய்கிறது. எந்த இடத்தில் இடையூறு செய்தாலும் முழு வளர்ச்சியும் பாதிப்படையும்.

## I.7 கருவழிப்பு முறைகள்

பல்வேறு வழிமுறைகளில் கருக்கள் அழிக்கப்படுகின்றன. 1983 யூலைக் கலவரத்தின் போது தமிழர்கள் வெட்டி வெறியாட்டம் ஆடப்பட்ட போது எமது மனங்கள் குமுறின, பிந்துனுவேன முகாமில் தமிழ்க் கைதிகள் வெட்டிக் கொத்தி இறைச்சிக் குவியலாகக் காட்சியளித்த போது எமது இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதித்தது, இவற்றை எல்லாம் விட அப்பாவியான, உதவியற்ற, யாருக்கும் எத்தீங்கும் இழைக்காத கருக்கள் முளையிலேயே வெட்டி கூழாக்கப்பட்டு கொலை செய்யப்படும் போது எமது மனங்கள் மௌனித்து இருப்பதன் உண்மைதான் என்ன? உலகின் ஒளியினைக் காணாத இந்தப் பச்சிளம் குழந்தைகளுக்கு சவப்பெட்டிகளோ அல்லது தனியான சவக்குழிகளோ கூட இல்லை. அவர்களுக்கு உரிமையாவது குப்பைத்தொட்டிகளும், கிடங்குகளும் மாத்திரமேயாகும். இறுதியில் இந்தப் பச்சிளம் பிஞ்சுக் குழந்தைகள் நாய்களுக்கு உணவாகின்றன.

### 1.7.1 கருவழிப்பு சிசேரியன் முறையில்



படம் 3

24 வாரங்கள் வயதுள்ள சிசுக்களை சத்திர சிகிச்சை மூலம் தாயினுடைய கருப்பையை வெட்டி சிசுவை வெளியில் எடுத்து கொலை செய்தலே இம் முறையாகும். 24 வாரங்கள் வயதுள்ள சிசுவை கண்ணாடிப் பேழைக்குள் வைத்து தேவையான மருத்துவ வசதிகளைக் கொடுத்து வளர்க்கும் திறன் இன்றைய மருத் துவத் துறைக்கு உண்டு. இவ்வாறான குழந்தை கள் சுவாசிப்பதற்கும் அதிகளவில் அழுவதற்கும் கூடியவர்களாக இருக்கிறார்கள்.[18]

### 1.7.2 உப்பு மூலம் நடைபெறும் கருவழிப்பு



படம் 4

19ஆவது வாரத்திலே தாயின் கருப்பைக்குள் நீண்ட ஊசி ஒன்றின் மூலம் துவாரத்தினை ஏற்படுத்தி உப்பு நீரினை உட்செலுத்தி ஒரு மணித்தியாலம் கழிந்த பின் பிள்ளை இறந்து விடும். ஒரு வீட்டுப்பிராணியை மருந்து தெளித்துக் கொல்லுவதைப் பாவமாகக் கருதி வெறுக்கும் எம்மால் ஒரு அற்புத உயிரை எப்படி இவ்வாறு கொல்லமுடிகிறது? [19]

[18] Cf., Thomas W,Hilgers W. and Dennis J.Horan, *Abortion and Social Justice*, New york: Sheed and Ward, 1972, p.292.

[19] Cf., Annette Shaw ,*Where Have All the Babies Gone ?* Sal Coats: Campaign Printing , 1989. p.48.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## I.7.3 டீ , சி சத்திர சிகிச்சை (D & C Abortion)



படம் 5

இம் முறையானது 12 ஆவது வாரத்திலே மேற்கொள்ளப்படுகிறது. கூர்மையான கொளுக்கியைப் போன்ற கத்தியொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை இதுவாகும். யோனி வழியூடாக உட்செலுத்தப்பட்டு கர்ப்பப்பை வாயிலினைத் திறந்து குழந்தையினைத் துண்டுதுண்டாக வெட்டுதல். இதன் மூலம் இரத்தம் அதிகளவில் வெளியேறும்.[20]


## I.7.4 டீ. எக்ஸ் சத்திரசிகிச்சை



படம் 6

மூன்று தினங்கள் கர்ப்பப்பைக் கதவினை விரிவாக்கி கர்ப்பத்தில் உள்ள குழந்தையின் பாதம் ஒன்றினைப் பிடித்து கீழ் இழுத்தல். பின்பு மற்றைய பாதத்தினையும் கைகளையும் தோள்பட்டைகளையும் உடலையும் கிழித்து துண்டுகளாக வெளியெடுக்கப்படுகின்றது. தலை மண்டையோடு பெரிதானபடியால் கத்தரிக்கோல் ஒன்றினால் இரண்டாகப் பிளந்து மூளையினை குழாய் ஒன்றின் மூலம் உறிஞ்சி குழந்தையினைக் கொல்லுகின்றனர்.

## I.7.5 மாத்திரைப்பாவனையால் கருவழிப்பு



படம் 7

**RU 486** எனப்படும் மாத்திரை இரண்டு அல்லது மூன்று வாரத்தில் பயன்படுத்தப்படுவதால் கருவளர்ச்சிக்குத் தேவையான முக்கிய ஓமோன் கிடைக்காமற் போவதால் கருவானது இறந்து வெளியகற்றப்படுகின்றது.[21]

Director
Lehara Library
Educational Resource Centre
87, Kanahambigaikulam
Kilinochchi.

[20] Cf., *Abortion and Social Justice* ,p. 291.
[21] Cf., *Ibid.*, p. 291.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.6 எமது நாட்டில் நாட்டு வைத்தியர்கள் கையாளும் சில கருவழிப்பு முறைகள்

1. அடிவயிற்றை துணியினால் இறுகக் கட்டியபின் மிகவும் உயரத்திலிருந்து குதித்தல்,
2. மிகவும் கடினமான வேலைகளைச் செய்தல்,
3. மிகநீண்ட தூரத்திற்குத் துவிச்சக்கரவண்டியைச் செலுத்தல்,
4. பழுக்காத பப்பாக்காய், அன்னாசிக்காய், பாகற்காய் போன்றவற்றை அதிகமாகச் சாப்பிடுதல்,
5. அடிமட்டக் கிராமப்புறங்களில் பெண்கள் பென்சில், உட்செலுத்தக்கூடிய வேறு மெல்லிய பொருட்களை உட்செலுத்தி கருவழிப்புச் செய்ய முயற்சிக்கிறார்கள். இவை பாரிய தீமையான விளைவுகளிற்கு இட்டுச் சென்றுள்ளன.[22]

## I.8 கருவழிப்பால் ஏற்படக் கூடிய நோய்கள்

1. பெருமளவான இரத்தப்போக்கு ஏற்படலாம், (heavy bleeding)
2. குருதியமுத்தம் அதிகரிக்கலாம்/குறையலாம்,
3. பாலுறுப்புகள் பாதிப்படையலாம்,
4. உளவியல் நோய்கள் உருவாகலாம்,
5. எதிர்காலத்தில் நோய்கள் உருவாகலாம்,
6. எதிர்காலத்தில் தாய்மைப்பேறு இல்லாமல் போகலாம், (D & C முறையால் ஏற்படலாம்),
7. பாலுறுப்பு நோய்த்தொற்று ஏற்படலாம், (Genital Tract Infection ),
8. கருச்சிதைவு அடிக்கடி ஏற்படலாம் (Miscarriage)
9. சிறுநீர்தொகுதி பாதிப்படையலாம்,
10. மாதவிடாய் சுழற்சி பாதிப்படையலாம்.

## I.9 கருச்சிதைவு (Miscarriage)

கருச்சிதைவானது கருவழிப்பில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இரண்டு செயற்பாடுகளும் கருவோடு தொடர்புபட்டு இருப்பினும் செயற்பாடுகளின் கனாகனம் வேறுபட்டிருக்கின்றது. மனிதனுடைய சுயாதீன புத்திக்கு அப்பாற்பட்ட ரீதியில் ஒர் கருவானது தாயினுடைய கருவறைக்குள்ளே இறத்தல் அல்லது வெளியகற்றப்பட்டு இறத்தல் கருச்சிதைவு எனக் கொள்ளப்படுகிறது. மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ரீதியில்

[22] Cf., M. David, "The Meaning and Morality of Abortion For Today", Unpublished Dissertation, Kandy: National Seminary, 1994, p.15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருச்சிதைவு நடைபெற்றாலும், தாயினுடைய சில பொருத்தமற்ற செயற்பாடுகள் காரணமாகவும் கருச்சிதைவு நடைபெறுகிறது.

### கருச்சிதைவிற்கான காரணங்கள்:

1. திடீர் விபத்து
2. பாரிய அதிர்ச்சி தரக்கூடிய அனுபவம்
3. அதிக போதைவஸ்துப் பாவனை
4. தீவிர நீரழிவு நோய்
5. ஓமோன்களின் சுரப்புக்களில் ஏற்படும் பாதிப்புக்கள்

Director
Lehara Library
Educational Resource
87, Kanahambigaik
Kilinochchi.

### 1.10 ஒழுக்கவியல் போதனை:

கருவழிப்புசார் ஆய்வுகள் பலவடிவங்களிலும், கோணங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சில நாடுகள் இக்கொலைகளை நியாயப்படுத்தி, சட்டபூர்வமாக கருவழிப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால் பின்நவீனத்துவ காலத்தில் மனித ஒழுக்கவியல் விழுமியங்கள் விலை பேசப்பட்டு, மனித இனம் பாலுணர்வுகளால் உந்தப்பட்டு மிருக நிலையைவிட மோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் மனித உயிரின் மகத்துவத்தைப் பாதுகாப்பதோடு, அதைப்பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றியமையாத ஓர் தேவையாக இருக்கிறது. இப்பணியை திருச்சபை செவ்வனே ஆற்றிவருகிறது. கத்தோலிக்கத் திருச்சபையானது எந்த நிலையிலும் கருவழிப்பை முற்றாக நிராகரிக்கின்றது. மனிதமாண்பு அழிக்கப்படும்போது திருச்சபை அமைதியாக இருந்துவிடமுடியாது.[23]

"சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை: வாழ்வோரின் அழிவில் அவர் மகிழ்வதில்லை" (சால. ஞானம் 1:13). ஆண்டவர் மனிதனை வாழவே படைத்துள்ளார். இறைவன் மற்றைய அனைத்துப் படைப்புக்களையும் மனிதனுக்காகவே படைத்துள்ளார். காரணம் மனிதன் இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான், அவனே இறைவனின் மணிமகுடமாக விளங்குகின்றான் (cf. தொடக். 1:26-28 ). "ஆனால் அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. அதைச் சார்ந்து நிற்போர் இறப்புக்கு உள்ளாவர்" (சால. ஞானம் 2:24). பாவத்தின் விளைவால் உருவான சாவு மனுக்குலம் முழுவதையும் பற்றியுள்ளது. சாவானது பாவத்தின் அடையாளமாகவும், கனியாகவும் விளங்குகிறது. ஆனால் பாவத்திற்கு இறுதி வெற்றி இல்லை. கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டுள்ள எமக்கு "அவர் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக வாழ்வோரின் கடவுள்" (மத். 22:32b) என்று கூறுகிறார்.

[23] Cf., Congregation for the Doctrine of the Faith, "Declaration on Procured Abortion" (Nov. 18,1974), Vatican Council II: Constitutions, Decrees, Declarations, Vol. 2, Dublin, 1982, pp. 441-442.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இறப்பு நிச்சயமாக கிறிஸ்துவின் உயிர்ப்பினால் தோற்கடிக்கப்படும் (cf. 1கொரி. 15:20-27). எனவே மனித உயிரானது இந்த உலகத்தில் விலை மதிப்பற்றது. மனிதப் படைப்பின்போது படைத்தவராலே மனித உயிர் கொடுக் கப்படுகின்றது, மனித உயிரானது மீண்டும் அவராலேயே எடுத்துக்கொள்ளப் படுகிறது (cf. தொட.2:7, ஞான.15:11). இறைவனுடைய பாதுகாப்பிலேயே உயிர் உள்ளடங்கியுள்ளது. இன்று மனிதனது இரத்தமானது இறைவனை நோக்கிக் கதறுகிறது (cf.தொட.4:10). இதற்குக் காரணமானவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டும். காரணம் "மனிதன் இறைவனது சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான்" (தொட. 9:5-6).

இறைவனது கட்டளை எமக்குத் தரப்பட்டுள்ளது: "கொலை செய் யாதே" (தொட. 20:13). அதேவேளை மனித உயிரானது இறைவனின் கொடையாகவும், பொறுப்பாகவும் தரப்பட்டுள்ளது. ஓர் ஆற்றலாகவே மனித உயிர் பெற்றுக்கொள்ளப்படுகிறது (cf. மத்.25: 14-30). எனவே இவ்வாற்றலானது நேரிய முறையில் பயன்படத்தப்பட வேண்டும், வழிநடத்தப்பட வேண்டும். அப்போதுதான் மனித உயிர் நற்கனிகளைக் கொடுக்கும். மேலும், பல்வேறு பொறுப்புகள் மனிதனுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை அவன் செவ்வனே ஆற்றவேண்டியவனாக இருக்கிறான். எல்லாவற்றையும் விட மேலான உன்னத வாழ்வானது இவ்வுலகில் மனிதன் தனது வாழ்வை வாழ்வதிலேயே தங்கியுள்ளது.[24]

திருச்சபைப் பாரம்பரியமானது மனித உயிரின் வளர்ச்சியின் அனைத்துப் படிமுறைகளும், குறிப்பாக தொடக்கத்திலிருந்து, பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. முதலாம் நூற்றாண்டிலிருந்து திருச்சபை யானது கருவழிப்பு மேற்கொள்ளுதல் தீமையானது எனக் கற்பித்து வருகிறது. இப்போதனையானது மாற்றமடையவுமில்லை, மாற்றப்படவும் முடியாததாகும்.[25]

தொடக்கத் திருச்சபையின் முக்கியமான ஏடுகளில் ஒன்றான "டிடாக்கே" பின்வருமாறு கூறுகிறது: "கருவழிப்பின் மூலம் உனது கருவறையில் வளரும் கருவைக் கொலை செய்யாதே; உன் வயிற்றிலிருந்து பிறந்த சிசுவைக் கொலை செய்தல் ஆகாது".[26] "தந்தையாம் கடவுள் மனித உயிரைப் பாதுகாக்கும் உயர்ந்த பணியை மனிதனின் கரங்களில் ஒப்படைத்துள்ளார். எனவே மனிதர் களாகிய நாம் இப்புனித பணியை பிரமாணிக்கத்தோடு நிறைவேற்ற வேண்டும். உயிரானது கருக்கட்டல் நிகழும் நிமிடத்திலிருந்து மிகவும் காத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். கருவழிப்பும் குழந்தைக் கொலையும் மாபெரும் தீமைகளாகும்."[27] திருச்சபை வரலாற்றில் திருச்சபைத் தந்தையர்களும், ஆன்ம

[24] Cf., *Ibid*., p. 442-43.
[25] Cf., CCC. No. 2271.
[26] Cf., *Didache* 2, 2:SCh 248, 148; cf. Ef. and cf. CCC.No. 2271.
[27] Cf., CCC. 2271, GS 51,3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ப்பர்களும் மேற்குறிப்பிட்ட கருத்தையே போதித்து வந்துள்ளார்கள். மனித கருவானது ஆன்மாவைப் பெற்றுக் கொள்ளும் நேரம் சார்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் அறிஞர்கள் மத்தியில் நிலவுகிறது. விந்தும், முட்டையும் இணைந்த நேரத்திலிருந்து மனித மாண்பை அக்கரு பெறுகிறது. எனவே எந்த வேளையிலும் கருவழிப்பு மேற்கொள்ளப்பட முடியாது.[28]

மனித உயிருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதை வெறுமனே கிறிஸ்தவ கடமைப்பாடு மாத்திரமன்று. சாதாரண மனித அறிவு இக்கடமையை வலியுறுத்துகின்றது. சுய அறிவைக் கொடையாகப் பெற்றுள்ள மனிதன் தனது மனிதத் தன்மையில் தனது அறிவையும் புத்தியையும் பயன்படுத்தி மனிதன் எவ்வாறு வாழவேண்டும், எவ்வாறு வாழக்கூடாது, எந்தளவிற்கு மனித உயிரை மதிக்கவேண்டும் போன்ற நிலைப்பாடுகளை எடுத்துக் கொள்ளக் கூடியவனாக இருக்கிறான். மனிதன் தன்னுடைய சுய அறிவைக்கொண்டு தனது இருப்பைப் பற்றி தியானித்துக் கொள்ளவும், மனித வாழ்வின் இலக்கை நோக்கிப் பயணிக்கவும் கூடியவனாக இருக்கிறான். மனிதன் தனது சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறாக அறிவைப் பயன்படுத்த அவன் கத்தோலிக் கனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எம்மதத்தைச் சார்ந்திருப்பினும் சுய புத்தியை உடையவன் உயிர்க்கொலை பிழையானது என்ற அறிவுடைய வனாக இருக்கிறான். ஏன் நாத்திகன் கூட இக்கருத்தை ஏற்றுக்கொள்வான்.

இன்று உலக அரங்கில் மனித உரிமைகள் பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பல அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகளில் முதலாவதும், அடிப்படையானதும் உயிர்வாழும் உரிமையாகும். மற்றைய அனைத்து உரிமைகளும் இந்த அடிப்படையான உரிமையில் இருந்தே பிறக்கின்றன. உயிர்வாழும் உரிமையை நிர்ணயிக்கும் உரிமை சமூகத்திற்கோ, வேறு எந்த அதிகாரிகளுக்கோ இல்லை. எனவே சமூக, பால், நிற, மத வேறுபாடுகள் அனைத்தும் தீமையானதே. எந்த மதத்தையோ, இனத்தையோ, பாலையோ, நிறத்தையோ சேர்ந்தவர்களும் இந்த உலகத்தில் வாழ உரிமையுண்டு. காரணம் இவற்றை நிர்ணயிப்பவர் இறைவன் ஒருவரே. இந்த உலகு பொதுவான சொத்தாகும். இறைவன் மனிதனுக்குக் கொடுத்த கொடையே இந்த உலகு. இதில் இறைவன் படைத்த மனிதர் அனைவரும் வாழ உரிமையுடையவர்களாக உள்ளார்கள். எனவே மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக கருக்கள் அழிக்கப்படுதல் அநீதியான கொடூரம் ஆகும். கொலைகளிலே எந்தவொரு கொலையும் பாவமாகும். சுயமான நேரியபுத்தியைக் கொண்ட மனிதன் இக்கொலையைச் செய்ய முன்வரமாட்டான்.

[28] Cf., *Ibid*., p. 443-44.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மாண்பிற்குக் கொடுக்கும் மரியாதையும், கௌரவமும் குழந்தைகளுக்கு வேறுபட்டதாகவும், வளர்ந்தோருக்கு வேறுபட்டதாகவும் இருக்கமுடியாது. மனித உயிரின் தொடக்ககாலத்தில் இருந்தே இந்த மரியாதையும் கௌரவமும் கொடுக்கப்பட வேண்டும். ஓர் விந்தும் முட்டையும் சேர்ந்து கரு உருவாகிய பின்னர், அக்கருவானது, தாயிலிருந்தும் தந்தையிலிருந்தும் வேறுபட்ட புதிய மனித உயிராகும். எனவே மற்றைய மனிதர்களுக்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பும், மதிப்பும் இப்புதிய கருவிற்கும் கொடுக்கப்படவேண்டும். கொடுக்க மறுப்பது பாவமாகும். இறைவனுடைய கட்டளையும், மனித அறிவும் எந்த விதமான நேரடியான கருவழிப்பையும் முற்றாக எதிர்க்கிறது. எனவே கருவழிப்பை நியாயப்படுத்த முற்படும் எல்லாவிதமான சிந்தனைகளும் தீமையானவையாகவும், பெறுமதியற்றவையா கவுமே கணிக்கப்படுகிறது. மனித சமூகம் உயர்வாக மதித்துப் போற்றும் அடிப்படையான கொள்கைகளை, கருவழிப்பு முயற்சி தவிடுபொடியாக்குகிறது. எனவே எந்தவிதமான கருவழிப்புக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல.

"ஏனெனில் உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார்: இப்பணியை மனிதத்தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர் கடமைப்பட்டுள்ளனர். ஆகவே, கருவறையிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும்: கருச்சிதைவு மற்றும் குழந்தைக்கொலை ஆகியவை கொடிய குற்றங்களாகும்" (GS 51). திருச்சபை இவ் விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்தி இச் செயற்பாட்டின் கொடுமையான தன்மையையும், கருவழிப்பால் அப்பாவி உயிருக்கு எதிராகச் செய்யப்படும், ஈடுசெய்ய முடியாத இழப்பையும் எடுத்துரைப்பதோடு இத்தீமையானது சிசுவுக்கு மாத்திரம் எதிரானது அல்ல, மாறாக பெற்றோருக்கும், சமூகத்திற்கும் எதிரானதாகக் காட்டுகிறது.[29]

## I.II வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் - பொறுப்புக்களும் கடமைகளும்

1. இவர்கள் எப்பொழுதும் மனித உயிரின் புனிதத்துவத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும், மனித உயிரின் வளர்ச்சிப்படிகளின் பெறுமதிக்கும் தமது வாழ்வால் குறிப்பாக நோயாளர் மேல் காட்டும் பரிவாலும், கவனத்தினாலும் சான்று பகரவேண்டும்.

[29] Cf., CCC. No. 2272.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இவர்கள் பெண்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் உற்சாகம் கொடுக்க வேண்டும். குறிப்பாக சமூகத்தினால் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் குறைவான மதிப்புக் காரணமாக எழும் பய உணர்விலிருந்து தாய்மார் விடுபட ஊக்குவிப்புக் கொடுக்கவேண்டும். தேவையான வேளையில் வைத்தியசாலை ஆன்மீகத் தந்தையூடாக ஆன்ம உதவியையும், அருட்சாதன உதவிகளையும் வழங்கவேண்டும்.
3. கருவழிப்பு, கருத்தடை உத்திகளை அனுமதிக்கும் வைத்தியசாலைகளில் எமது மனச்சான்றுக்கு எதிராக நாம் செயற்பட மாட்டோமென எழுத்தில் தமது எதிர்ப்பை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரிவிக்கவேண்டும். வலுக்காட்டாயமாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டால் உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் வேண்டும்.
4. கத்தோலிக்க வைத்தியர்கள், தாதிமார், சுகாதார ஊழியர்கள் தமது சகபாடிகளுக்கு தமது உறுதிப்பாடுகளை தெரிவித்துக்கொள்ளுதல் வேண்டும். தமது நம்பிக்கைக்கும், கத்தோலிக்க ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும் பிரமாணிக்கமாய்ச் செயற்படும் போது ஏற்படும் பிழையான தீர்ப்புகளையும், தண்டனைகளையும், புறந்தள்ளி வைக்கப்படும் நிலைகளையும் கத்தோலிக்கர்கள் கிறிஸ்துவுக்காக ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். தற்காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத்திற்கான பரிசு இதுவேயாகும்.
5. கருவழிப்புச் செய்யப்படும் வளர்ச்சியடைந்த கருவில் (foetus) உயிர் இருப்பதற்கான சான்றுகள் தென்படுமானால், கருவின் பெற்றோர் கத்தோலிக்கரானால், திருமுழுக்குக் கொடுக்கப்படவேண்டும்.[30]

Director
Lebara Library
Educational Resource Ce
87, Kanambigaikulam
Kilinochchi.

## I.12 கத்தோலிக்க வைத்தியசாலைகளின் கடமைகள்

1. கத்தோலிக்க வைத்தியசாலைகள் மனித உயிரின் புனிதத்தன்மைக்கும், மனிதனின் ஒருமைப்பாட்டிற்கும், மனித உயிரின் ஒவ்வோர் வளர்ச்சிப்படிகளின் பெறுமதிக்கும் சான்றுபகர வேண்டும்.
2. கத்தோலிக்க வைத்தியசாலைகள் கர்ப்பிணிகளுக்கும், பிறக்காத குழந்தைகளுக்கும் விஷேட பரிவும், பாதுகாப்பும் வழங்க வேண்டும். பிள்ளை பிறப்பதற்கு முன்பும், பிள்ளை பிறக்கும் போதிலும், பிள்ளை பிறந்த பிற்பாடும், ஆற்ற வேண்டிய கருமங்களை இது உள்ளடக்குகிறது. ஆன்மீக உதவிகளையும், அருட்சாதன உதவிகளையும், வைத்தியசாலைகள் வழங்கவேண்டும். பிள்ளைபெறும் காலங்களில்

[30] Cf., Ad Hoc Committee on Pro-Life Activities of the National Conference of Catholic Bishops, "Pastoral Guidlines for the Catholic Hospital and Catholic Health Care Personnel" (April 11, 1973), Pastoral Letters of the United States Catholic Bishops, Vo. 111, 1983, pp. 370-374.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மார் தினமும் திவ்விய நற்கருணை உட்கொள்ள வைத்தியசாலைகள் தேவையான வசதிகளை செய்யவேண்டும்.

3. வேறு வைத்தியசாலைகளில் கருவழிப்பிற்கும், கருத்தடை உத்திகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்து அவ்வைத்தியசாலை நிர்வாகத்தால் புறந்தள்ளப்பட்ட வைத்தியர்களுக்கும், தாதியர்களுக்கும், சுகாதார ஊழியர்களுக்கும் கத்தோலிக்க வைத்தியசாலைகள் தகுந்த இடம் கொடுத்தல் அவசியம்.
4. கத்தோலிக்க வைத்தியசாலைகள் கருவழிப்பிற்கும், கருத்தடை உத்திகளுக்கும் எதிராக பொது அறிவித்தல்களை பகிரங்கமாக வழங்கவேண்டும்.
5. தமது வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதிமார், சுகாதார ஊழியர்களுக்கு கருவழிப்பு, கருத்தடை உத்திகள் சார்பான நல்ல அறிவை வைத்தியசாலை நிர்வாகத்தினர் வழங்கவேண்டும்.[31]

## 1.13 ஒழுக்கவியல் உறுதிப்பாடுகளிலிருந்து பிறக்கும் தடைகள்

1. எந்தவொரு கத்தோலிக்க வைத்தியசாலையும் கருவழிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடாது. இச்செயற்பாட்டிற்காக மனிதர்களையோ வேறு உதவிகளையோ வழங்குதல் தடை செய்யப்பட்டுள்ளது.
2. கத்தோலிக்க வைத்தியசாலையில் பணியாற்றும் அனைவருக்கும் கருவழிப்பு, கருத்தடை என்பன முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்பதுபற்றிய தெளிவு இருக்கவேண்டும்.
3. கருவழிப்பும், கருத்தரிப்பை இடைநிறுத்தும் நோக்கோடு கருவை வெளியகற்றும் செயற்பாடும் பாரதூரமான ஒழுங்கற்ற செயலாகும். கருவழிப்பு மேற்கொள்ளும் கத்தோலிக்கருக்கும், மற்றவர் கருவழிப்பு மேற்கொள்ளத் தூண்டும் கத்தோலிக்கருக்கும் இது கனமான பாவமாகும்.
4. கருவழிப்புச் செயற்பாட்டில் முழுவிருப்போடும், முழு அறிவோடும் உதவிசெய்பவர்களும் அப்பாவத்தின் பங்காளிகளாகவே கணிக்கப்படுவர்.
5. தாதியர்களும், சுகாதார ஊழியர்களும் கருவழிப்புச் செயலுக்கு உதவிசெய்யக் கூடாது.[32]

[31] Cf., *Ibid.*,pp. 370-374.
[32] Cf., *Ibid.*,pp. 370-374.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனித உயிரானது புனிதமானது, ஆணுடைய விந்தும் பெண்ணுடைய முட்டையும் சேருகின்ற போது இறைவனின் படைக்கும் தொழில் நேரடியாக செயலூக்கம் பெறுகிறது. இவ்வொழுங்கு மீறப்படுவதால் இறை மகிமை மீறப்படுகிறது. தனிமனிதனும் ஏன் மனுக்குலம் முழுமையும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது. மனிதருக் கிடையிலான உறவுப் பாலங்களும் ஆபத்துக்குள்ளாகின்றன" என திருத்தந்தை இருபத்து மூன்றாம் யோவான் குறிப்பிடுகிறார்.[33] "மனித உயிர் அதன் கருக் கட்டலில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். கருவழிப்பும் குழந்தைக் கொலையும் மன்னிக்க முடியாத கொடூரமான குற்றங்களாகும்".[34] "மனித உயிர் மட்டிலான மரியாதை கருக்கட்டிய நிமிடத்திலிருந்து அதாவது பெண் முட்டை ஆண் விந்துவோடு சேர்ந்து கருவாக உருவாகின்ற நேரத்திலிருந்து கொடுக்கப்படவேண்டும். எனவே நேரடியான மனித உயிர் கொலை இறைகட்டளையை மீறும் செயலாவ தோடு இயற்கையான மனித அறிவாலும் தடைசெய்யப்படுகிறது."[35] "மனித உயிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களில் கருவழிப்பானது கொடுமையானதும் சகிக்க முடியாததும் ஆகும்."[36] "சிசுவின் தாயும் அவருடன் தொடர்புள்ள பலரும் சிசு கருப்பைக்குள் இறப்பதற்குக் காரணமாயிருக்கிறார்கள்... இவர்கள் அனைவரும் கண்டிக்கப்பட வேண்டியவர்களே."[37] "கருவழிப்பு என்ற செயலாலோ அல்லது பிறந்த பின்னரோ சிசுவைக் கொலை செய்யாதே."[38] "நேரடியான கருவழிப்பானது அதாவது கருக்கொலையானது ஒரு முடிவாகவோ அல்லது ஊடகமாகவோ பயன்படுத்தப்படுதல் மிக மோசமான ஒழுக்கவியலுக்கு எதிரான தீமையாகும்."[39] என்று உரைப்பதன் மூலம் திருச்சபை கருவழிப்பை ஏற்றுக் கொள்ளாது, அவ்வாறான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றது.

Director
Lebara Library
Educational Resource Centre
87,Kanahambigaikulam
Kilinochchi.

[33] Cf., John XXIII, Encyclical letter, "Mater et Magistra", III, 194; cf. CDF, Donum vitae I, 1; CCC, No. 2270.
[34] Cf., Vatican II, Pastoral Constitution on the Church in the Modern World, IV, 51.
[35] Cf.,. Pope Paul VI, (Congregation for the Doctrine of Faith), Declaration on Procured Abortion, III, 12(Dec.5, 1974). p.442.
[36] Cf., Encyclical Letter, "Evangelium Vitae", no. 58.
[37] Cf., Pope John Paul II, Apostolic Letter, "Mulierris Dignitatem" (Aug. 15, 1988), 14: AAS 80, (1988), 1686.
[38] Cf., V. 2. Patres Apostolici, ed., F.X. Funk, 1,17.
[39] Cf., CCC. No. 2271.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக

உலகிலுள்ள எந்த மறையும் ‘உயிரைக் கொல்’ எனப் போதிக்க வில்லை. சிறப்பாக எம்பெருமான் கிறிஸ்து வாழ்வு கொடுப்பதற்காகவே இவ்வுலகில் மனிதனானார். “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்” (யோவா. 10:10). கிறிஸ்துவின் நாமத்தைத் தாங்கியவர்களாக வாழும் நாம், அவரது பணியை இவ்வுலகில் தொடர்ந்து செய்யும் நாம், வாழ்வை மதிப்போம். மற்றவர்கள் வாழ நாம் வழிசமைப்போம்.

இன்று உலகத்திலே நீலத் திமிங்கலங்களைப் (Blue Whales) பாதுகாப்பதற்காக அமைப்புகள் உருவாக்கப்பட்டு விஞ்ஞான ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. அத்தோடு பச்சைக் காட்டுத்திட்டங்கள் (Green Forests) செயற்கையாக உருவாக்கப்பட்டு, அழிந்து போகும் பல இனத்தாவரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் தாவரவியல் நிபுணர்களும் அமைப்புகளும் காலத்தையும் நேரத்தையும் செலவு செய்து வருகின்றனர். இவ்வாறானவர்களோ வீணாக அழிக்கப்படும் கருக்கள் மட்டில் அக்கறையற்று வாழ்கிறார்கள். பாதுகாக்கப்பட வேண்டியதைப் பாதுகாக்காது அதைவிட தரத்தில் குறைந்த படைப்புப் பொருட்களைப் பாதுகாப்பதற்காக அதிக வளத்தையும் காலத்தையும் விரையமாக்குகிறார்கள்.

திறந்து செல்வதற்கு இடமின்றி மரணத்திலிருந்து தப்பிக்க முயற்சிக்கையில் நிரந்தரமான முனகலை அமைதியாக்கி கர்ப்பத்தினுள்ளே குழந்தையின் வாழ்க்கையை அழித்துவிடுகிறார்கள். கருவழிப்பின் மூலம் அழிக்கப்படுபவர்கள் குழந்தைகள் மாத்திரமல்ல. மாறாக பெற்றோரும் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள், அழிக்கப்படு கிறார்கள். மனிதனுக்கு இயல்பாகக் கிடைக்கப்பெறும் சரி, பிழைகளைப் பகுப்பாயக்கூடிய திறன் கருவழித்தலின் மூலம் இல்லாதொழிக்கப்படும். எனவே உயிரின் பெறுமதியை மதிப்போம். மற்றவர்க்காக எம் வாழ்வைக்கொடுப்போம். பாவத்திலும் பெரும்பாவமாகிய கருவழிப்பைச் செய்து கொலைகாரர்களாக நாமும் மாறாது, இறைவனின் பிள்ளைகளாக வாழ முயற்சிப்போம்.

☺


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை முறையிலான கருவூட்டல்
## (Artificial Insemination )

### 2.1 நிகழ்வு

*யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலங்களில் ஒன்றில் நான் பயிற்சிக்காகச் சென்றிருந்தபோது ஒரு குடும்பத்தைச் சந்தித்தேன். இவர்கள் அன்றைய நாள் 'நேர்த்திக்காக' இவ்வாலயத்திற்கு வந்திருந்தார்கள். இவர்கள் திருமணம் முடித்து பதினாறு வருடங்கள் ஆனால், இவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லை. எத்தனையோ வைத்தியர்களை நாடியும், எத்தனையோ பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் சென்றும் தமக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்க வில்லை எனக் கூறிக் கவலையடைந்தார்கள்.*

Director
Lebara Library
...al Resource Centre
Kilinochchi

*இந்தியாவிற்குக் கூட சென்று சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். கணவனுக்கு ஆண் உறுப்பு நேரிய முறையில் தொழிற்படாமையும், விந்துக்களின் வீரியம் போதாமையுமே குழந்தை கிடைக்காமைக்கான காரணமாக வைத்தியர்கள் தெரிவித்தார்கள். தேவையான பல மருந்துப் பொருட்களைக் கொடுத்தார்கள். ஆனால் எந்தவிதமான பலனும் கிடைக்க வில்லை. பணம் பெரும்தொகையில் செலவாகியதே தவிர எதுவும் கைகூட வில்லை. அங்கிருந்த வைத்தியர் ஒருவர் செயற்கைமுறையிலான கருவூட்டல் செய்யும்படி இப்பெண்ணை வற்புறுத்தியிருக்கிறார். காரணம் பெண்ணுக்கு எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால் இவளோ அதற்கு இடம் கொடுக்க வில்லை. வேறு ஒரு மூன்றாம் நபரூடாக நான் எவ்வாறு கருவுற இயலும் என என்னிடம் கூறி தனது விருப்பமின்மையையும், எதிர்ப்பையும் தெரிவித்தார். "எமது வாழ்வு பிள்ளை இல்லையே என்ற சோகத்திலேயே முடிவுறப்போகிறது", என்று கூறி கண்ணீர் வடித்தார். "சமூகம் தம்மை வேறுபடுத்திப் பார்ப்பதாகவும்", கூறினார். (பதிப்பித்தலுக்கான அனுமதி தொடர்புபட்டவரிடமிருந்து பெறப்பட்ட சம்பவம்)*

குடும்பம் என்பது ஒரு கோவில், ஒரு பல்கலைக்கழகம், சமூகத்தின் அடிப்படைக் கரு என்றெல்லாம் குடும்பத்தின் சமூக நிலைப்பாட்டை பலரும் பலவாறு நோக்கி ஆய்வு செய்வர். இவை அனைத்தும் உண்மையே. குடும்பம் என்னும் கோவிலின் இரு பெரும் தூண்கள் கணவனும் மனைவியும் ஆவர். திருமணம் என்னும் அருள் அடையாளத்தின் மூலம் இயேசுக்கிறிஸ்துவால் எக்காலத்திற்கும் இணைத்து வைக்கப்படும் திருமணத்தின் தலையாய இரண்டு தன்மைகள் ஒருமைப்பாடும் (unity) பிரிவுபடாத்தன்மையுமாகும் (indissolubility); திருமணத்தின் நோக்கங்கள் பரஸ்பர அன்பும் (Mutual love) பிள்ளைப் பேறுமாகும் (procreation). பிள்ளைப்பேறாகிய படைத்தல் பணியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையானது, புனிதமானது. இயற்கை ஒழுங்கின் பிரகாரம் இவ்வினப் பெருக்கப்பணி கணவன் மனைவிக்கிடையில் மாத்திரமே இடம்பெறவேண்டும். குடும்பச் சூழலுக்கு வெளியே நிகழக் கூடாது. குடும்பச் சூழலுக்கு வெளியே நிகழும் அனைத்து உடல் உறவுகளும் ஒழுங்கற்றவையும், தீமையானவை யுமாகும்.

திருமணம் ஓர் உடன்படிக்கையாகும். இரண்டு ஆள்களின் தற்கையளிப் பாகும். திருமணம் ஓர் அருள் அடையாளம். புனிதத்தின் வாய்க்கால். "உண்மை யான திருமண அன்பு இறை அன்பால் ஆட்கொள்ளப்பட்டுள்ளது."[40] திருமண உறவு என்பது ஓர் மறையுண்மையாகும். இதையே புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்: "திருமணத்தில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது."[41] " திருமண உடன்படிக்கை தன் இயற்கைப் பண்பிலேயே, மணமக்களின் நலனுக்காகவும் (The good of the spouses), மகப்பேறு, குழந்தை வளர்ப்பிற்காகவும் (The procreation and education of children) அமைந்துள்ளது."[42] என திருச்சபைச் சட்டம் கூறுகிறது. திருமணத்திற்கு அவசியமான இரு மூலக்கூறுகளாக ஒருமைப் பண்பும் (unity) முறிவுபடாப் பண்பும் (indissolubility) இருக்கிறது.

**திருமணத்தின் தன்மைகள் - ஒருமை , பிரிவுபடாத்தன்மை.**
**திருமணத்தின் நோக்கம் - பரஸ்பர அன்பு + பிள்ளைப்பேறு.**

## 2.2 வரைவிலக்கணம்:

இயற்கையான கருவூட்டலானது கணவன் மனைவிக்கிடையில் பரஸ்பர அன்புறவின் விளைவாக எழும் உடல் உறவின் மூலம் நிகழ்கிறது. ஆனால் செயற்கை முறையிலான கருவூட்டலில் இயற்கையாக நிகழவேண்டிய கருவூட்டல் செயற்கையாக சில தொழில்நுட்பச் சாதனங்களின் அல்லது விஞ்ஞானச் செயற்பாடுகளின் உதவியோடு நடைபெறுகின்றது.



படம் 8

## 2.3 செயற்கை முறை கருவூட்டலானது இரண்டு வகைப்படும்.

1. குடும்ப அமைப்பிற்கு உட்பட்ட அல்லது கணவன் மனைவிக்கிடையிலான கருவூட்டல் (Homologous Artificial Insemination)
2. குடும்ப அமைப்பிற்கு வெளியான/ கணவன் மனைவியைவிட மூன்றாம் நபரின் செல்வாக்குள்ள கருவூட்டல் (Heterologous Artificial Insemination)[43]

[40] Cf., இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: "இன்றைய உலகில் திருச்சபை", எண் 48, திருச்சி: தேடல் வெளியீடு, 2001, பக். 702-704.
[41] Cf., எபே. 5:32
[42] Cf., The Code of Canon Law, No. 1055/1, Bangalore: Theological Publications, 1983, p. 189.
[43] Cf., Karl Peschke, Christian Ethics, Vol. II, Bangalore: Theological Publications, 1987, p. 479.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.3.1 குடும்ப அமைப்பிற்குட்பட்ட/ கணவன் மனைவிக்கிடையிலான கருவூட்டல் (homologous)

மனைவியினுடைய கருப்பைக்குள் செலுத்தப்படவிருக்கும் விந்தானது கணவனிடமிருந்து பெறப்படுமாயின் அது குடும்ப அமைப்பிற்கு உட்பட்ட கணவன்/ மனைவிக்கிடையிலான கருவூட்டல் (homologous) என அழைக்கப்படும். இங்கு விந்தானது கணவனின் சுய இன்பச் செயற்பாட்டின் (masturbation) மூலம் பெறப்படுகிறது.[44]

### 2.3.2 குடும்ப அமைப்பிற்கு வெளியான/ கணவன் மனைவியைவிட மூன்றாம் நபரின் செல்வாக்குள்ள கருவூட்டல் (heterologous )

மனைவியின் கருப்பைக்குள் உட்செலுத்தப்படவிருக்கும் விந்தானது கணவன் அல்லாத மூன்றாம் நபரிடம் அதாவது கொடையாளி (donor) ஒருவரிடமிருந்து பெறப்படுமாயின் அது குடும்ப அமைப்பிற்கு வெளியான/ கணவன் மனைவியைவிட மூன்றாம் நபரின் செல்வாக்குள்ள கருவூட்டல் (heterologous ) என அழைக்கப்படும்.[45]

## 2.4 ஒழுக்கவியல் போதனை:

குழந்தைகளைச் செல்வங்கள் என்பர். காரணம் குழந்தைகள் இறைவனால் எமக்குக் கொடுக்கப்படும் கொடைகளாவர். இறைவனின் அன்பினதும், ஆசீரினதும் வெளிப்பாடே குழந்தைகளாவர். ஒழுக்கவியல் நோக்கில் திருமணம் என்னும் இணைபிரியா அன்பின் கனிகளாகக் குழந்தைகள் கணிக்கப் படுகிறார்கள்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கும் 'மாண்பின்' நிமித்தம் மனிதப்பேறு சிறப்பான பல தன்மைகளைக் கொண்டதாக விளங்குகிறது. ஓர் ஆணும் பெண்ணும் இறைவனின் திருவருளால் திருமணம் என்னும் அருள் அடையாளத்தில் இணைந்து வாழ்க்கையில் அவ்விருவருக்கிடையில் மலரும் பரஸ்பர அன்பினதும், இணைபிரியா வாழ்வினதும் அடையாளமாக உருவாகும் கனியே குழந்தை ஆகும். ஓர் மணமகன் தந்தையாகவும், ஓர் மணமகள் தாயாகவும் மாறும் நிலையானது மணமக்களின் நிலையான பிரமாணிக்கத்தில் தங்கியுள்ளது.

---

[44] Cf., *Ibid.*, p. 479.
[45] Cf., *Ibid.*, p. 479.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் குழந்தையின் ஆரம்ப அடிப்படை உரிமைகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1.தனது தாயின் வயிற்றுள் கருவாக உருவாகுதல்,
2.தாயின் உதரத்தில தங்கி வளர்க்கப்படுதல்,
3.உலகத்திலே குடும்ப உறவமைப்பில் வளர்த்தெடுக்கப்படல்,
4.சமூகத்திற்கு நல்ல முறையில் உவந்தளிக்கப்படுதல்.



படம் 9

ஒரு குழந்தையின் சமூக அடையாளப்படுத்தல் முக்கியமான ஓர் யதார்த்த நிகழ்வாகும். படிப்படியாக ஒரு குழந்தை தன்னை சமூகத்திற்கு வெளிப்படுத்தும் தன்மையுள்ளதாக விளங்குகிறது. பெற்றோரின் பாதுகாப்பிலும், அரவணைப் பிலும், உறவிலும் நிலைத்திருப்பதன் மூலமே இவ்வடையாளப்படுத்தல் செயற்பாடு நேரியதாக அமைவதோடு, நல்ல சீரான மனித வளர்ச்சியை அடையக் கூடியதாகவும் இருக்கும்.

பெற்றோர் தமக்கிடையில் மலரும் பரஸ்பர கொடுப்பனவின் உறுதிப் பாடாகவும், நிறைவாகவுமே தமது பிள்ளைகளைக் காண்கிறார்கள். திருமண இணைப்பின் நிலையான அடையாளமாகவும், அன்புறவின் உயிருள்ள மாதிரியாகவும், உறுதியானதும், நிலையானதும், உயிருள்ளதுமான பெற்றோரின் தாய்மையின் வெளிப்பாடாகவும் பிள்ளைச் செல்வங்கள் சான்று பகர்கிறார்கள். இறை அழைப்பின் காரணத்தாலும், சமூகப் பொறுப்புக்கள் காரணமாகவும் பெற்றோரும், பிள்ளைகளும் சமூகத்திற்குப் பல்வேறு பரிமாணங்களில் பங்களிப்புச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். குடும்ப அமைப்பானது சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகத் திகழ்கிறது. தாய்மைப் பேறானது குடும்ப அமைப்பிற்குள்ளேயே உருவாக வேண்டும் என்பதில் திருச்சபையும், சமூகமும் கருத்தாய் இருக்கின்றன.[46]

[46] Cf., Congregation for the Doctrine of the Faith, "Instruction on Respect for Human Life in Its Origin and on the Dignity of Procreation", (Mar. 10, 1987), *Origins* 16:no. 40, Mar. 19, 1987, pp. 698-711.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4.1 குடும்ப அமைப்பிற்குட்பட்ட செயற்கை முறையிலான கருவூட்டல் பற்றிய ஒழுக்கவியல் போதனை:

திருமண அமைப்பிற்குட்பட்ட செயற்கை முறையிலான கருவூட்டலானது அனுமதிக்கப்படமுடியாது; ஆனால் இயற்கையான திருமணச்செயலுக்கு அதாவது உடலுறவுச்செயலுக்கு ஈடாகத் தொழில்நுட்பச் சாதனங்கள் பயன்படுத்தப்படாமல், இயற்கையான இலக்கை அடைவதற்கு இச்சாதனங்கள் அனுசரணையாகப் (facilitate) பயன்படுத்தப்படலாம்.

இப்படிப்பினையானது திருமண ஒன்றிப்பு, மகப்பேறு, திருமணச் செயற் பாட்டின் தனித்துவம், என்பவை சார்பாகத் திருச்சபை கொண்டுள்ள கொள்கைகளின் அடிப்படையிலே பிறக்கிறது. கணவன் மனைவியின் கூட்டுறவில் பிறக்கும் உடலுறவுச் செயலானது தனித்துவமானது. இச்செயற்பாட்டில் ஈடுபடு வோரின் நேரிய நோக்கம் வேதாகமத்தில் குறிப்பிடப்படுவது போல் 'ஓர் உடலாக இணைவதே' (காண்க தொட.நூல் 2:24) ஆகும். எனவே ஒழுக்கவியல் மனச்சான்றானது இவ்வாறான புனித செயற்பாட்டிற்கு சமனாக ஒரு கருவி பயன்படுத்தப்படுவதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. அடைய விருக்கும் இலக்கு நல்லதாகவும், தூயதாகவும் இருந்தாலும், பயன்படுத்தப்படும் ஊடகம் தீமையானதாக இருக்கமுடியாது. பயன்படுத்தப்படும் கருவியானது அனுசரணையாகவிருந்து இயற்கையான இலக்கை அடைய உதவி செய்யுமா யின் அது ஒழுக்கவியல் நோக்கில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும். மாறாக திருமணச் செயற்பாடான உடலுறவுக்குப் பதிலாக கருவி பயன்படுத்தப்படுமா னால் அது சட்டபூர்வமற்றதும், தீமையானதுமாகும்.

## 2.4.2 குடும்ப அமைப்பிற்கு வெளியான கருவூட்டல் செய்கையின் ஒழுக்கவியல் போதனை

குடும்ப அமைப்பிற்கு வெளியான கருவூட்டல் / மூன்றாம் நபரின் கருவூட்டல் செய்கையானது பின்வரும் காரணிகளுக்கு முற்றிலும் முரணானதாகக் காணப்படுகிறது.

1.திருமண இணைப்பு / ஒருமைப்பாடு
2.மணமக்களின் மாண்பு
3.பெற்றோரின் தனிப்பட்ட அழைப்பு
4.திருமண அமைப்பிற்குள்ளே கருவுற்று வளர்க்கப்படவேண்டிய உரிமை

திருமண ஒருமைப்பாடும்/ இணைப்பும், திருமணப் பிரமாணிக்கமும் வேண்டுவது யாதெனில் குழந்தையானது எப்போதும் திருமண அமைப்புக்குள்ளேயே உருவாக வேண்டும் என்பதாகும். மணமகனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளும் தந்தையாக, தாயாக உருவாகும் பாக்கியமானது எப்போதும் திருமண இணைப்பிற்குள்ளேயே கிடைக்கவேண்டும். இவ்விணைப்பிற்கு வெளியில் ஒருபோதும் கருத்தரித்தல் நடைபெறக் கூடாது. மூன்றாம் நபரின் விந்துகள் எடுக்கப்படும் போது திருமணத்தின் அடிப்படைக் கூறான ஒருமைப்பாடு (unity) மீறப்படுகிறது. பரஸ்பர அர்ப்பணிப்பு நிராகரிக்கப்படுகின்றது.

திருத்தந்தை 12ஆம் பயஸ் பின்வருமாறு கூறுகிறார்: திருமண அமைப்பிற்கு வெளியேயான செயற்கைமுறைக் கருவூட்டலானது ஒழுங்கீனமானதும், தடைசெய்யப்பட வேண்டியதுமாகும். சாதாரணமான இயற்கைச் சட்டமும், இறைகட்டளையும் திருமணத்திற்கு வெளியேயான மகப்பேற்றுச் செயற்பாட்டை வன்மையாகத் தடைசெய்கின்றன. திருமணம் ஒன்றே பெற்றோரின் மாண்பைப் பாதுகாக்கின்றது. அத்தோடு குழந்தையின் நலனையும், சீரான வளர்ச்சியையும் திருமணமே பாதுகாத்து வருகிறது. அனைத்துக் கத்தோலிக்கரும் திருமண அமைப்பிற்கு வெளியான குழந்தை உருவாக்கலை ஏகமனதாக எதிர்க்கிறார்கள். அவ்வாறு பிறக்கும் குழந்தையானது சட்டபூர்வமற்றதாகவே கணிக்கப்படுகிறது.[47]



படம் 10

அதேவேளை செயற்கை முறையிலான கருவூட்டலானது குழந்தையின் அடிப்படை உரிமையை மீறுகின்றது. தனது பெற்றோர் ஊடாகக் கிடைக்கும் பிள்ளை-பெற்றோர் உறவுமுறை குழந்தைக்குக் கிடைக்காது போகிறது. இவ்வுரிமை மீறலானது குழந்தையின் தனிப்பட்ட அடையாளப்படுத்தல்சார் வளர்ச்சியை இடையூறு செய்து குழப்புகிறது. அத்தோடு தாயாகத் தந்தையாக உருவாக அழைக்கப்பட்ட பெற்றோரின் சிறப்பான அழைப்பிற்கும் குந்தகம் ஏற்படுத்துகிறது. பொதுவாக நோக்குங்கால் திருமண உறவினதும், ஒருமைப்பாட்டினதும், இணைவினதும் பலனாகிய கனியை பெறமுடியாத நிலை ஏற்படுகிறது. இயல்பாக மரபார்ந்த பாலுறவுச் செயற்பாட்டின் மூலம் குடும்ப உறவுக்குள் கிடைக்கும் தாய்மைப் பேறுக்கும் செயற்கை முறையிலான கருவூட்டலின் விளைவாகக் கிடைக்கும் தாய்மைப் பேறுக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. செயற்கை முறையிலான கருவூட்டலின் விளைவாக குடும்ப அமைப்புக்குள் உருவாகும் பிரச்சனைகள், பிளவுகள் சமூகத்தில் பல

[47] Cf., Pope Pius XII, "Christian Norms of Morality" (Sep. 29, 1949), *The Human Body: Papal Teachings*, pp. 117-119.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. திருமண இணைப்பையும், நிலையான தன்மையையும் பயமுறுத்தும் சச்சரவுகளும், ஒழுங்கீனமான செயற்பாடுகளும், அநீதியான காரியங்களும் சமூக முழுமையை வெகுவாக பாதிக்கின்றன.

மேற்கூறப்பட்ட காரணிகள் அனைத்தும் செயற்கைமுறையிலான கருவூட்டல் பற்றிய எதிர்மறையான ஒழுக்கவியல் நியாயத்தைத் தருகிறதை நாம் அவதானிக்கலாம். சாதாரணமாக திருமணமாகிய பெண் ஒருவர் தனது கணவனின் விந்தூடாக கருத்தரிப்பதற்கும், வேறு ஒரு மூன்றாம் நபருடைய விந்தூடாகக் கருத்தரிப்பதற்கும் வேறுபாடு உண்டு. இது இயற்கை நியதிக்கு முரணான செயலாகும். திருமணமாகாத பெண்ணோ அல்லது விதவையோ வேறு ஒர் நபரின் விந்தூடாகத் தாய்மையடைவதை எந்தவகையிலும் நியாயப் படுத்த முடியாது.



படம் 11

பிள்ளை பெறவேண்டும் என்ற பிரியம், கணவன் மனைவிக்கிடையில் நிலவும் ஆழமான பரஸ்பர அன்பு, மலட்டுத்தன்மையைப் போக்க வேண்டும் என்கிற நோக்கு என்பன நேரிய காரணிகளாக இருந்தாலும், இவ்விலக்கை அடைவதற்காக நாம் கைக்கொள்ளும் வழிமுறை பிழையானதாக அமையக் கூடாது. குடும்ப அமைப்பிற்கு வெளியான செயற்கை முறைக் கருவூட்டல் செயற்பாடானது திருமணத்தின் அடிப்படைக் கூறுகளை மீறுவதோடு, பிள்ளையின் அடிப்படை உரிமைகளையும் நிராகரிக்கின்றது. எனவே கத்தோலிக்க திருச்சபையானது இவ்வகையான செயற்கைமுறைக் கருவூட்டல் செயற்பாட்டை முற்றுமுழுதாகத் தடைசெய்கிறது.[48]

## முடிவாக

இறைவனாலே நிறுவப்பட்ட குடும்ப அமைப்பு தற்கால உலகியல்வாதப் போக்குகளாலும், பொருள்முதல்வாத நாட்டத்தினாலும் உடைந்து சின்னாபின்னமாகிப் போகின்றமை கண்கூடு. திருமணத்தின் கட்டுக்கோப்புகளை உடைத்து மனித மாண்பை கீழ்த்தரப்படுத்தும் முயற்சியில் பலரும் முன்னின்று செயற்படுகின்றனர். படைத்தவரின் கீழ், பணிவோடு செயலாற்ற வேண்டிய விஞ்ஞானிகளும் தொழில்நுட்பவியலாளர்களும் பாதைமாறி தாமும் செல்வதோடு, மற்றவர்களையும் அழைத்துச் செல்வது பரிதாபத்துக்குரியதாகும். இவ்வாறான எதிர்மறை உலகியல் யதார்த்தங்களில் இருந்து எதிர் நீச்சல்போட்டு

[48] Cf., Congregation for the Doctrine of Faith, "Instruction on Respect for Human Life in Its Origin and on the Dignity of Procreation", pp. 698-711.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் புனிதத்துவத்தைக் காத்து புத்துயிர் கொடுக்க வேண்டியது எம் ஒவ்வொருவருடைய தலையாய பொறுப்பாகும். விரைந்து செய்வோம். குடும்பத்தை கட்டிக்காப்போம். நல்ல குழந்தைகளைப் பெற்று சமூகத்திற்குக் கொடுப்போம். இதன் வழியாக புதிய சமூகம் படைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்புமாற்றல் சிகிச்சை
## (Organ Transplantation)

இன்று மனிதர்கள் மத்தியில் தியாகமானது பல்வேறு பரிமாணங்களில் செயல்வடிவம் பெற்றுவருகின்றது. மனித தியாகத்திற்கான தேவையும் அதிகமாக காணப்படுகிறது. சிலுவையிலே தன்னையே முழுமையாகத் தியாகம் செய்து தனது இரத்தத்தால் மனுக்குலத்தை மீட்டெடுத்த இறைமகன் இயேசுவின் பாதச்சுவடுகளைப் பின்பற்றிப் பலா் திருச்சபையிலே முழுமையாகத் தம்மை அர்ச்சனையாக்கியுள்ளார்கள். தனது சகோதரனின் நல்வாழ்வுக்காக பலரும் தமது இரத்தத்தைத் தானம் செய்துவருகிறார்கள். திருச்சபை இவர் களின் கொடையார்வத்தை மெச்சுவதோடு, ஏனையோரையும் இவ்வாறான செயலில் ஈடுபட வரவேற்கின்றது. பலர் தமது உடல் உறுப்புக்களைக் கூட தாம் வாழும் போதும், இறந்த பிற்பாடும் தமது அயலவரின் நல்வாழ்வுக்காகத் தியாகம் செய்ய முன்வருகின்றனர். தற்கொடை ஆர்வமானது புனிதமானதும், பயனளிப்பதும் ஆகும். இறைவனின் புதிய கட்டளையாக வரைவிலக்கணம் செய்யப்படவேண்டிய செயற்பாடும் இதுவாகும்.

'ஒழுக்கமில்லா' (ethics free) உலகத்தின் போக்கு பல மனிதர்களை நோயாளர்களாக உருவாக்கியுள்ளது. பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியும் மனித உடலின் சீர்த்திட நிலையை பெரிதும் பாதித்துள்ளது. பணமுதலைகள் மனித நலனில் அக்கறைகொள்ளாது விசத்தன்மையுள்ள பொருட்களை உற்பத்தி செய்து, பொய்யான விளம்பரப்படுத்தல் மூலம் மக்களின் மனநிலை களை விலைக்கு வாங்கி, தமது பொருள்களை விற்பனை செய்கின்றார்கள். போதுமான சிந்தனைத் தெளிவின்றி இப் பொருள்களை நுகர்ந்து உட்கொள்ளு வோர் தமது உடலை நோய்க்குள்ளாக்குகிறார்கள். இதன் காரணமாக பல உடல் உறுப்புகள் செயல் இழக்கின்றன. இவ்வாறான இக்கட்டில் மனித நலனில் அக்கறையுள்ள, அன்புள்ளங்கள் பாதிக்கப்பட்ட மனிதர்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருகின்றார்கள். இவர்கள் உவந்தளிக்கும் இரத்தத்தை யும், உடல் உறுப்புகளையும், உடல் இளையங்களையும் விட இவர்களது தாராள மனம் மதித்து பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இயேசுவின் தூய இதயத்தின் அன்பிலிருந்து இது பிறப்பெடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.1 மனித உடலின் உயர்நிலை

இறைவன் படைத்த படைப்புக்கள் அனைத்தும் நான்கு பகுப்புக்குள் உள்ளடக்கப்படலாம்:

1. தாது,
2. தாவரம்,
3. விலங்கு,
4. மனிதன்.

மேற்கூறப்பட்ட படிமுறையில் மனிதனே படைப்பின் சிகரமாகவும் கொடுமுடியாகவும் திகழ்கிறான். எனவே மனித உடலை வெறும் சடப்பொருளாகக் கருதும் மனப்பான்மை ஒழுக்கவியல் அணுகுமுறையில் பிழையானதாகும். சாதாரண விலங்கின் உடலோடு மனித உடலை நாம் சமநிலைப்படுத்த முடியாது (1 கொரி.15:39).

மனித உடலானது உயர்ந்த ஆன்மாவின் உறைவிடமாக விளங்குகிறது. இறைவனின் சாயலைத் தாங்கிய மகுடமாகத் திகழ்கிறது. எனவே மனித மாண்பில் உடலுக்கு உயரிய இடமுண்டு. மனித ஆன்மா உடலைவிட்டுப் பிரிந்த பின்னரும் உடலுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உயர்மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும். இதையே புனித பவுல் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது. நீங்களே அக்கோவில்" (1 கொரி. 3:16-17).

"... இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர்; நாமும் மாற்றுருப் பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும்" (1கொரி. 15:52-53). இறுதியாக இறந்த உடலானது நித்திய வாழ்வுக்கு உரித்தானதாகும். உலகமுடிவில் நாம் உடலோடும் ஆன்மாவோடும் எழுப்பப்படுவோம் என்பது எமது விசுவாச சத்தியமாகும். இந்நிலை சாதாரண விலங்குகளுக்கு உரித்தானதல்ல.

## 3.2 இறந்த உடலின் பயன்பாடு

இறந்த மனித உடல்கள் எதிர்கால வைத்தியர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மருத்துவர்களின் கற்றல் செய்கைக்காக இறந்த மனித உடல்கள் பாவிக்கப்படுவதை திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கவில்லை. இறந்த பின்னர் தமது உடலை கற்றல் பணிக்காக அல்லது உறுப்பு மாற்றலுக்காக அல்லது இளையங்கள் மாற்றுவதற்காகக் கையளிப் போர் தமது உடலுக்கு இழுக்கு வராது, உடலின் புனிதத்தன்மையைக் காத்துக் கொள்ள வேண்டும். இக்கொடையார்வமானது நல்ல தூயநோக்கோடு மேற் கொள்ளப்படவேண்டும்.

ஒருவருடைய இறந்த உடல் மேற்கூறிய தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படும் போது மூன்று காரணிகள் கவனம் செலுத்தப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

1. **இறப்பு உறுதி செய்யப்படவேண்டும்:** குறிப்பாக இருதய மாற்றுச் சிகிச்சையின் முன், இருதயம் தானம் செய்பவரின் இறப்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வைத்தியர்களால் உறுதி செய்யப்படவேண்டும்.

2. **இறந்த நபரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும:** ஒருவர் தான் இறப்பதற்கு முன்னர் தனது முக்கிய உறுப்புகளை வேறு ஒருவருக்குக் கொடுக்கும்படி அல்லது தனது இறந்த உடலை மருத்துவக் கல்விக்காக பயன்படுத்தும்படி எழுத்திலோ அல்லது வாய்மொழியாகவோ அனுமதி கொடுத்திருத்தல் வேண்டும்.

3. **மூன்றாம் நபரின் அதாவது குடும்ப உறுப்பினர்களின் அல்லது உரித்துடையவர்களின் அனுமதி வேண்டும்:** இறந்த நபரின் நெருங்கிய உறவினராகிய சகோதரர்களின் சம்மதமும் அவசியமாகும். இவர்களின் அனுமதியின்றி எந்தவிதமான செயற்பாடுகளும் இறந்தவரின் உடலின்மேல் மேற்கொள்ளப்படலாகாது.

## 3.3 இறந்த மனித உடலும் பொது உத்தியோகத்தர்களும்

உறுப்பு மாற்றல் சிகிச்சை நடைமுறையில் பல்வேறு துஷ்பிரயோகங்கள் இடம்பெற வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. வைத்திய நிலையங்களில் அனுமதிக்கப்படும் ஏழை நோயாளர்களின் எவ்வித அனுமதியுமின்றி அவர் களுடைய உறுப்புகள் மாற்றப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. நோய்வாய்ப்பட்ட எல்லோரும் நோயாளர்களாகக் கணிக்கப்படவேண்டும். அங்கே ஏழை நோயாளர், பணக்கார நோயாளர் என்ற பாகுபாடு நலமானதல்ல.

பொதுமக்களுக்கு இப்பிரச்சினை சார்பான பூரண அறிவு வழங்கப் படவேண்டும். மனித உடலின் ஒருமைப்பாடு பற்றிய விளக்கம் கொடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை சில நேரியகாரணங்களுக்காக சுத்தகருத்தோடு சில உறுப்பு களைத் தானம் செய்யலாம் என்பது பற்றிய அறிவார்ந்த விளக்கம் கொடுக்கப் படவேண்டும். இவை எல்லாவற்றின் மத்தியிலும், இவ்வாறான செயலைச் செய்கின்றபோது உடன் உறவுகளுக்கு மனக்கவலை உருவாவது இயல்பாகும். ஆனால் இவ்வாறான தியாகமானது புனிதமானது என்பதால் உயர்வடைகின்றது.

பொதுச்சேவை உத்தியோகத்தர்களும், நாட்டின் சட்டதிட்டங்களும் மனித மாண்பைக் கருத்தில் கொள்ளவேண்டும். பொது அதிகாரிகள் மனிதனின் இறப்பு சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்படுமுன், உறுப்புக்கள் அகற்றப்படுவதை எந்த வகையிலும் அனுமதிக்காது, கண்காணிக்க வேண்டும். குற்றவியல் காரணத்திற்காக அல்லது பொதுநலனுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இறப்பு நடந்தால் இறந்த உடலானது பொது உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்வேளை இறந்த உடல் மட்டிலான நெருங்கிய உறவினருக்கிருக் கும் உரிமைக்கு பங்கம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். பொது உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைப்பதன் மூலம் மனித மாண்பைக் கட்டியெழுப்பலாம்.

## 3.4 ஒழுக்கவியல் போதனை:

மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி பல நன்மைகளைக் கொண்டிருந் தாலும், சில தீமைகளை மறுபக்கத்தில் கொண்டிருக்கின்றது. ஆய்வுகள், மருத்துவ அனுபவங்கள் ஊடாக அறிவதற்கு இன்னும் ஏராளம் உண்டு. அதேவேளை இனவியல், சமூகவியல், சட்டவியல், ஒழுக்கவியல் பார்வையில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் அதிகமாக உண்டு என்றே கொள்ளலாம். சில மனவருத்தப்படக்கூடிய துஷ்பிரயோகங்கள் வைத்திய நிலையங்கள், தற்கொடைசெய்ய முன்வருவோர், சட்டமியற்றும் நிறுவனங்கள் மத்தியில் இடம்பெறுவது கவலைக்குரியதாகும். இவ்வாறான இடர்பாடுகள் மத்தியில் 4ம் நூற்றாண்டு வைத்தியர் புனித பெரிய பசிலின் வார்த்தைகளைக் கவனிப்பது பயன்தரக்கூடியதாகும். “மக்கள் முன்னெடுக்கும் தவறான பயன்பாடு காரணமாக இறைவன் எமக்குத் தரும் சிறப்பான கொடையாகிய மருத்து வத்தை நாம் மறுக்க முடியாது. மாறாக தவறான பயன்பாடு மட்டில் எமது கவனத்தைத் திருப்பி அவற்றைக் களைய உழைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்”. (Great Rules, 55:3, MIGNE, PG.31:1048).

‘இரத்த மாற்றல்’ (blood transfusion) சிகிச்சையில் தளிர்விட்டு இன்று ‘உறுப்பு மாற்றல்’ (organ transplantation) சிகிச்சை வரை மருத்துவம் வளர்ந் துள்ளது. தமது சகோதர, சகோதரிகளின் வாழ்நாட்களைக் கூட்டக்கூடியவாறு மனிதர்கள் தமது இரத்தத்தை, உறுப்புகளை மற்றவர்களுக்குக் கொடையாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கக் கூடியவர்களாக மாறியுள்ளார்கள். புதிய புதிய பரிமாணங்களில் பிறரன்புச் செயல்களை மேற்கொள்ள எம் அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. உறுப்புக்கள் தற்கொடை செய்கின்ற நற்செயலானது வெளிப்படையான, சுதந்திரமான, முழுச்சம்மதத்தினுடைய தெரிவாக இருத்தல் அவசியம். கொடையாளியே இவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்ளலாம், அல்லது சட்டபூர்வமாக கொடையாளியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் அதாவது நெருங்கிய உறவினர் ஒருவர் இவ்வாறான தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். பிரதிபலன் எதிர்நோக்கா உதவியாக இது கருதப்பட வேண்டும். அயலவருடைய நல்வாழ்வின் நிமித்தம் தற்கொடை மேற்கொள்ளப்படுகின்றது. தன்னையே முழுமையாக மற்றவருக்காக தியாகம் செய்யும் உயர்ந்த செயல் சுயகொடையாக கொடையாளியால் மேற்கொள்ளப்படுகிறது. இறைவனோடும், அயலவரோடும் நாம் கொண்டுள்ள அன்பினதும், ஒன்றிப்பினதும் ஆழத்திலிருந்தே இது பிறப்பெடுக்கிறது.

அன்பு, ஒன்றிப்பு, இனங்கானல், மனித ஆளுக்கான சுயமரியாதை போன்ற கூறுகளே உறுப்பு மாற்றலுக்கான அடிப்படை அம்சங்களாகும். மற்றவர்களுடைய நல்வாழ்வுக்கான முழுவிருப்பத்தோடும், சுதந்திரத்தோடும் முழுமனித ஆளுக்கான மாண்பை மதித்து மேற்கொள்ளப்படும் உறவு தற்கொடைச் செயற்பாட்டின் ஒழுக்கவியல்சார், ஆன்மீகம்சார், கருத்துக்களை நாம் உதாசீனம் செய்துவிட முடியாது.

சாதாரணமாக மனித உடலானது ஒருவருக்குரிய தனிப்பட்ட கூறாகவே கருதப்படுகிறது. எனவே இதை வெறுமனே சதைசார்ந்த ஒன்றாகவோ அல்லது மருத்துவம்சார் கூறாகவோ கருதிவிட முடியாது. உடலின் உறுப்புகளை அல்லது இளையங்களை விற்பனை நோக்கில் அல்லது பண்டமாற்று நோக்கில் பயன்படுத்துவது தடை செய்யப்பட வேண்டிய காரியமாகும். இவ்வாறான பொருள் முதல்வாத நோக்கில் மனித உடலை நாம் அணுகும் போது இது ஓர் பாவனைப்பொருளாக பயன்படுத்தப்படும் நிலை உருவாகிறது. இத்தகைய மனநிலையில் பார்க்கும் போது உறுப்பு, இளைய மாற்றல் மனித உடல் மீதான கொள்ளை (stealing) எனவே கருதப்படுகிறது.

நேரியதும் விகிதாசாரத்தில் உண்மையானதுமான காரணங்களுக்காக, கொடையாளியின் மனித மாண்புக்கோ, உடலுக்கோ எவ்வகையான தீங்கும், ஆபத்தும் ஏற்படாவண்ணம் உறுப்புத் தற்கொடை நடைபெறலாம். மிகவும் முக்கியமான உறுப்புகள் இறப்பின் பிற்பாடே மாற்றப்படலாம். இறப்பின் பின்னர் இது ஓர் அன்புச் செயலாகவே அதாவது மற்றவருக்கு வாழ்வு கொடுக்கும் செயலாகவே மேற்கொள்ளப்படவேண்டும். மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது இறப்பின் பின்னும் தம்மை மற்றவர்களுக்கு தியாகம் செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இயேசுக்கிறிஸ்துவின் இறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுக்குலம் அனைத்திற்கும் வாழ்வு கொடுத்த மாபெரும் கொடையார்வத்தின் ஊற்றிலிருந்து நாமும் எம் இறப்பின் பின்னரும் மற்றவர் வாழ வழிவகுக்கும் தியாகிகளாக வாழ அழைக்கப்படுகிறோம். இன்று சுயலாபங்களுக்கும், பொருள்முதல்வாதப் போக்கிற்கும் அடிமைப்பட்டிருக்கும் மனுக்குலத்திற்கு, உண்மை அன்பின்பால் தூண்டப்பட்ட உறுப்புத் தற்கொடைகள் சாலச் சிறந்ததும், மக்களை நல்வழிப்படுத்த சிறந்த ஆயுதமாகவும் விளங்குகிறது.

## 3.5 உறுப்பு அல்லது இளைய மாற்றலானது மூன்று வகைப்படும்:

### 3.5.1 ஒருவருடைய உடலுக்குள்ளேயே மாற்றல் (autografts)

ஒருவருடைய உடலுக்குள்ளேயே ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு தோல், எலும்புகளை மாற்றுவதை இது குறித்து நிற்கிறது. இவ்வகையான மாற்றலை திருச்சபை ஏற்றுக்கொள்கிறது.

### 3.5.2 விலங்கிலிருந்து மனிதனுக்கு (heterografts)

விலங்கிலிருந்து இளையங்களைப் பெற்று மனிதனுக்குப் பொருத்தும் செய்கையை இது குறித்து நிற்கிறது. இவ்வாறான மாற்றல் மனிதனுடைய ஆளுமையில் மாற்றத்தை ஏற்படுத்துமாயின் அது தடைசெய்யப்படவேண்டும். உதாரணமாக விலங்கொன்றின் பாலியல் இளையங்களை மனிதனுக்கு மாற்றுவதால் விளைவுகள் பாரதூரமாகும். இவ்வாறான செய்கை ஒழுக்கமற்றதும் தீமையானதுமாகும். திருச்சபை இவ்வகையை வன்மையாகக் கண்டிக்கிறது.

### 3.5.3 மனிதனிடமிருந்து மனிதனுக்கு (homografts)

ஒரு மனிதனிடமிருந்து இன்னொருவருக்கு இளையங்களை மாற்றுவதை இது குறிக்கிறது. அதாவது இறந்த ஒருவரின் இளையங்களை உயிரோடு வாழ்பவருக்கு பொருத்துவதாகும். இங்கே முன்னர் குறிப்பிட்டது போன்று இறப்பானது சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட வேண்டும்.

உறுப்பு மாற்றல் சிகிச்சையை நடைமுறைப்படுத்தும் வைத்தியர்களும், மருத்துவ உதவியாளர்களும் தமது செயலை ஆழமான தியானத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உறுப்பு மாற்றல் அல்லது இரத்த மாற்றல் சிகிச்சை சாதாரண சத்திரசிகிச்சையோடு ஒப்பிடப்படமுடியாதது. கொடையாளியின் தற்கொடையானது இன்னொருவருக்கு வாழ்வு கொடுக்கிறது. இவ்வுயர்பண்பு மதிக்கப்பட வேண்டும். இங்கு அரங்கேறும் அன்பின் மறைபொருள் போற்றப்படத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இன்று விஞ்ஞானம் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. குறிப்பாக மருத்துவத் துறையில் பல்வேறு பிரிவுகளில் உயர்ந்த வளர்ச்சி காணப்படுகிறது. மனித உறுப்புகளை, இளையங்களை வெற்றிகரமாக ஒருவர் ஒருவருக்கு மாற்றும் தொழில்நுட்பம் பயன் தருகிறது. இவ்வாறான கண்டுபிடிப்புக் கள் மத்தியில் திருச்சபை மகிழும் அதேவேளை பாராட்டையும் வழங்குகிறது. உறுப்புகள் மாற்றப்படுவதால் குறுகிய காலத்தில் இறக்கவிருக்கும் நோயாளர்கள் நீண்டகாலம் வாழக்கூடியதாக இருக்கிறது. எனவே மருத்துவத் துறைசார் வல்லுனர்கள் உறுப்பு மாற்றல் சிகிச்சை மூலமாக மனித உயிரின் மட்டிலான தமது பணியை சிறப்பாக மேற்கொள்கின்றனர். மக்கள் மத்தியில் உண்மையான அர்ப்பணிப்பும், தியாக சிந்தையும் ஊற்றெடுக்கும் செயலாக இச்செயல் அமைவதால் கிறிஸ்துவின் தியாகம் உயர்வுபெற்று பலரை உண்மையான தியாகத்திற்கு அழைத்து நிற்கிறது.

😐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கக்கொலை (Euthanasia)

## 4.1 நிகழ்வு

*என்னோடு பாடசாலையில் சிறுபராயத்தில் கல்விகற்ற மாணவன் ஒருவன் சிறுவர் பூங்காவிலே விளையாடிக்கொண்டிருந்த போது தவறி கீழே விழுந்ததன் காரணமாக அவனுடைய மூளை நரம்பு தாக்கப்பட்டது. எனவே அவன் படுத்த படுக்கையானான். அவனால் பேசக்கூட முடியவில்லை. எழுந்து நடக்கவும் முடியவில்லை. பல நீண்ட ஆண்டுகளாக இந்நிலையிலேயே வாழ்ந்தான். இவனு டைய தாயானவள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் தனது பிள்ளையை பாசத்துடன் உணவூட்டிக், குளிப்பாட்டி, மற்றும் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்து பராமரித்து வந்தாள். இவர்களுடைய குடும்ப வறுமையும் இவர்களை வெகுவாக வாட்டியது.*

*இந்நிலையில் இவ்விளைஞனை காலத்துக்குக் காலம் வைத்தியசாலைக் குக் கொண்டு போகவேண்டும். பல சிறந்த வைத்தியர்களைக் கூட நாடி தனது மகனை முன்னைய நன்நிலைக்குக் கொண்டுவர உதவும்படி பெற்றோர் வேண்டினர். ஆனால் அவர்களாலும் முடியவில்லை. சில வைத்தியர்கள் 'இரக்கக்கொலை' செய்து கொள்ளலாம். காரணம், இவர் தப்பிப்பிழைக்கப் போவதில்லை. இவரை வைத்திருந்து எதுவித பயனும் இல்லை. இவரால் உங்களுக்கும் எங்களுக்கும் சிரமம் தான் எனக் கூறினர். ஆனாலும் இந்தத் தாய் "எனது பிள்ளையை இறுதிவரை நானே வைத்திருப்பேன். எனது பிள்ளைக்கு இவ்வாறானதொரு கொலையை நான் செய்யவும் மாட்டேன், யாரும் செய்யவும் நான் அனுமதிக்க மாட்டேன்" எனக் கூறிவிட்டாள். தாய்ப்பாசம் என்னவென்று தாய்க்குத்தான் தெரியும். (பதிப்பித்தலுக்கான அனுமதி - தொடர்புபட்டவரிடமிருந்து பெறப்பட்ட சம்பவம்)*

## 4.2 அறிமுகம்

இரண்டு தசாப்தகாலத்திற்கு மேற்பட்ட உள்நாட்டுப்போரானது தமிழர்களாகிய எம்மத்தியில் உயிரின் பெறுமதியை குறைத்துவிட்டது என்றே கூறவேண்டும். ஆயிரக்கணக்கில் மனித உயிர்களை இப்போரானது காவுகொண்டுள்ளது. மீண்டுமொரு போர் வெடிக்குமோ என்ற பீதியில் மக்கள் வெதுவெதுப்பான நிலையில் வாழ்க்கை நடாத்துகின்றனர். அத்தோடு பலர் விபத்துக்களாலும், வெட்டுக்கொத்துக்களாலும், அன்றாடம் இறந்து கொண்டே இருக்கிறார்கள். அத்தோடு 'இனம் தெரியாத நபரால் சுட்டுக்கொலை' என்ற தலைப்பில் பல உயிர்கள் நாளுக்கு நாள் மாய்க்கப்படுகின்றன. இவ்வாறான ஓர் சூழமைவில் வாழ்க்கை நடத்தும் நாம் உயிரின் உன்னத தன்மையை அறிந்து, மதிக்கத் தெரிந்தவர்களாக வாழவேண்டியவர்களாக இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உயிரை எந்த விலையும் கொடுத்து நாம் பெற்றுவிட முடியாது. இறைவன் எமக்குத் தந்த உயர்ந்த, சிறப்பான கொடை மனித உயிர் ஆகும். இறைவனே மனித உயிரின் பிறப்பிடமாக இருக்கிறார். மனித உயிரானது விளங்கிக்கொள்ள முடியாத புதிராக விளங்குகிறது. எனவே உயிரைக் கொடுக்கும் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் தன்னுடைய உயிரையோ அல்லது மற்றவருடைய உயிரையோ எடுக்கும் உரிமை கிடையாது. அவ்வாறு யாரும் மற்றவருடைய உயிரையோ அல்லது தன்னுடைய உயிரையோ எடுத்துக் கொள்ள முற்படுகிறார்களானால் அவர்கள் தமது வாழ்வில் மாபெரும் தவறைச் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் தத்தமது உயிரைப் பாதுகாத்து வாழவேண்டிய கடமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

## 4.3 பதவிளக்கம்

இரக்கக்கொலையைக் குறிப்பதற்கு கிரேக்க மூலத்திலுள்ள 'Euthanasia' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இப்பதமானது ஆரம்ப காலத்தில், சமூகத்தில் அந்தஸ்துள்ள, மரியாதையான, உயர்வான ஓர் சாவையே குறித்து நின்றது. ஆனால் இப்பதமானது இன்று வேறுபட்ட விளக்கத்தையே கொண்டதாகப் பயன்படுத்தப்படுகிறது. 'இரக்கக்கொலை' என்ற பதமானது தன்னிலேயே முரணான கருத்துடையதாகக் (Self Contradictory) காணப்படுகிறது.[49]


படம் 12

இறப்பின் உச்சத்தை அண்மித்த ஒரு நபரை அல்லது ஒரு சிசுவை, இரக்கத்தை முன்னிட்டுக் கொலை செய்தல் அல்லது இறக்க அனுமதித்தல் இரக்கக்கொலை என சுருக்கமாக வரையறுக்கலாம்.[50] இன்று இப்பிரச்சினையானது உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நிலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையிலே ஒழுக்கவியல்சார் கருத்துகளையே நாம் ஆய்வு செய்ய முற்படுகிறோம். ஒழுக்கவியல் சார்பாக இரக்கக்கொலை என்ற செயற்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதா? என்ற கேள்விக்கு உடனடியாகவே 'இல்லை' என்ற பதிலே கூறவேண்டும். காரணம் இப்பதம் தன்னிலேயே தீமையானதாகக் காணப்படுகிறது. கொலையானது எப்போதுமே தீமையான செயலே ஆகும். எனவே இரக்கக்கொலை என்ற பதமானது தன்னிலேயே முரணான கருத்துக் களைக் கொண்டுள்ளது.

[49] Cf., Congegation for the Doctrine of the Faith, "Declaration on Euthanasia", (May 5, 1980), Vatican Council II, Vol. 2, p. 512.
[50] Cf., Karl H. Peschke, *Christian Ethics*, p. 531.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படம் 13


இறையியலாளர்கள் இரக்கக்கொலையை இரண்டு வகையாக நோக்குவர்:

1. நேரடியான இரக்கக்கொலை
2. மறைமுகமான இரக்கக்கொலை

### 4.3.1 நேரடியான இரக்கக்கொலை

தீராத நோயினால் வருந்தி பிழைப்பதற்கான அறிகுறியே இல்லாது இறப்பை அண்மித்த நோயாளியை அல்லது மருத்துவ வசதிகள் எதுவும் பயனளிக்காது வேதனைப்படும் ஒரு சிசுவை மருந்து கொடுத்துக் கொலை செய்தல் நேரடியான இரக்கக்கொலை ஆகும். இச்செயற்பாடானது நேரடியான கொலை ஆகும். கொலையானது எச்சந்தர்ப்பத்திலும் ஈடுசெய்ய முடியாத கொடூரமான தீமையாகும். யாரும் இவ்வாறான செயற்பாட்டில் இறங்குதல் ஆகாத செயல் அகும். உயிருக்கு ஊற்று இறைவனே ஆவார். இறைவன் யாதும் அறிந்தவர். ஓர் உயிரை தன்னிடம் அழைத்துக்கொள்ளும் நேரத்தை இறைவன் மட்டுமே அறிவார்.

### 4.3.2 மறைமுக இரக்கக்கொலை


படம் 14

தீராத நோயினால் வருந்தி பிழைப்பதற்கான அறிகுறியே இல்லாத ஒரு நபரையோ அல்லது மருத்துவ வசதிகள் எதுவும் பலனளிக்காத நிலையில் வேதனைப்படும் ஒரு சிசுவையோ மேலதிக மருத்துவ வசதிகளை வழங்கி வாழ்வின் நாட்களைக் கூட்டாது, மருத்துவ உதவிகளை வாபஸ் பெறுவதன் மூலம் இறக்க அனுமதித்தல் (letting to die) மறைமுக இரக்கக்கொலை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 15

## 4.4 ஒழுக்கவியல் போதனை

வாழ்வில் பெலவீனமானவர்களும், வாழ்க்கையை முன்னெடுக்க நாதியற்றிருப்பவர்களும் விஷேட அன்புக்கும், பராமரிப்பிற்கும் உரியவர்களாயிருக்கிறார்கள். நோயாளர்களும், ஊனமுற்றவர்களும் தமது வாழ்வியல் செயற்பாடுகளை சீராக மேற்கொள்ள உதவி செய்யப்பட வேண்டியவர்களாவர்.[51]

ஒரு மனிதன் எந்த நிலையிலிருந்தாலும் - கருவாயிருந்தாலும், சிறுவனாயிருந்தாலும், இளைஞனாகவிருந்தாலும், முதியவராகவிருந்தாலும், குணமாக்க முடியாத நோயாளியாகவிருந்தாலும், இறப்பை அண்மித்தவனாயிருந்தாலும் - அவனுடைய உயிரில் தலையிடுதல் கொலை ஆகும். இச்செயற்பாடானது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது. எந்தவொரு நபரும் தமக்காக அல்லது தமது உறவினருக்காக அல்லது தமக்கு வேண்டியவர்களுக்காக இரக்கக்கொலையைச் செய்யும்படி கோரிக்கைவிட முடியாது. சட்டபூர்வமாக எவரும் இச்செயற்பாட்டுக்கு அனுமதி வழங்க முடியாது. காரணம் இச்செயற்பாடானது இறைகட்டளையை (divine law) மீறும் செயலாகும். மனித மாண்பைப் புதைக்கும் செயலாவதோடு மனுக்குலத்திற்கு துரோகம் விளைவிக்கும் செயற்பாடாகவும் அமைகிறது.[52]

ஒவ்வோர் மனிதனும் இயல்பாகவே நீடியகாலம் வாழ விரும்புகிறவனாகக் காணப்படுகிறான். நீடிய வாழ்வு என்பது மனிதன் தனது அன்றாட வாழ்வில் சிந்தித்து எடுக்கும் முடிவு அல்ல மாறாக மனிதத்தன்மையிலே ஊறிப்போன ஓர் இயல்பு ஆகும். எடுத்துக்காட்டாக மனிதன் தனது உயிரை எதிரியிடமிருந்து காத்துக்கொள்வதற்காகப் போராடுகிறான், காட்டு விலங்குகளைக் கண்டால் ஓடுகிறான், வீதியால் வாகனங்கள் வரும் போது இடம் விட்டு ஒதுங்குகிறான். தனது உயிரைக் காத்துக் கொள்வதற்காகவே இவ்வாறு பிரயத்தனம் செய்கிறான். மனிதன் தனது முழுச்சுதந்திரத்தோடு அல்லது சுயாதீனத்தோடு இறப்பிற்கான தெரிவை எடுப்பதில்லை. காரணம் இறைவன் மனிதனை தொடர்ந்து வாழ விரும்புபவனாகப் படைத்துள்ளார்.

---

[51] Cf., CCC, No. 2276.

[52] Cf., Congregation for the Doctrine of the Faith, "Declaration on Euthanasia", pp. 512-513.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் உடலும் இயற்கையாகவே தொடர்ந்து வாழக்கூடியதாகவே படைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக கையில் காயம் ஏற்படுகிற போது இரத்த ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக இயல்பாகவே ஓர் பதார்த்தம் மனித உடலில் இருந்து வெளிப்பட்டு இரத்த ஓட்டத்தைக் கட்டுப்படுத்துகிறது. அவ்வாறே உடலில் ஏற்படும் காயத்தை ஆற்றக் கூடியவாறு புதிய கலன்கள் தோன்றி காயத்தைக் குணப்படுத்தும் தன்மை இயல்பாகவே காணப்படுகிறது. மனித உடலை கிருமிகள் தாக்கும் போது இயற்கையாகவே பிறபொருள் எதிரிகள் உருவாகி மனித உடலைக் காத்துக்கொள்கின்றன. எனவே மனிதனது இவ்வுலக வாழ்வானது முடிவைக்கொண்டதாக இருந்தாலும், இயற்கையாகவே மனிதன் தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரை, வாழ வேண்டியவனாக இருக்கிறான். ஆனால் இரக்கக்கொலை என்ற செயற்பாடானது இயற்கையாகவே தப்பிப்பிழைத்து வாழ விரும்பும் உயிரைக் கொலை செய்கிறது.


படம் 16

மனிதன் மாண்புடையவனாகக் காணப் படுகிறான். "மனிதன் இறைவனது சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான்" (தொ. நூ. 9:5-6). மனிதன் மாண்புள்ளவன் என்று கூறும் போது மனிதனுக்கு இறைவனோடு உள்ள தொடர்பு எண்பிக்கப்படுகிறது. எனவே மனிதன் தனது வாழ்விலே ஓர் இலக்கு நோக்கிப் பயணிக்கவேண்டியவனாக இருக்கிறான். இவ்விலக்கு நோக்கிய பயணத்திலே தனது உயிரை இறுதிவரை காத்துக்கொள்ள வேண்டிய கடப்பாடு மனிதனுக்கு உண்டு. ஆனால் இரக்கக்கொலை மேற் கொள்ளப்படுவதால் அம்மனிதனின் மாண்பு இலக்கற்று சிதறடிக்கப்படுவதை நாம் காணலாம். மிருகங்கள் மாண்புள்ளவை அல்ல; மாறாக மனிதர்கள் மாண்புள்ளவர்கள். ஆனால் மனித மாண்புக்கெதிராக நாம் செல்லும் போது நாமும் மனித நிலையிலிருந்து பிறழ்ந்து மிருக நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

தனது அன்றாட மனித வாழ்வில் இறைவனைத் தேடாத நாத்திகன் கூட வேதனையின் கொடூரத்தில் இயற்கையாகவே இறைவனை நோக்கிப் புலம்பி வேண்டுபவனாகக் காணப்படுகிறான். தனது வாழ்வில் ஏதாவது ஒரு புதுமை நிகழ்ந்து குணமடைய மாட்டேனா, என்ற ஆதங்கம் மனித உள்ளங்களில் வேரூன்றி இருக்கிறது. இரக்கக்கொலை மேற்கொள்ளப்படுவதால் இவ்விருப்புக்கான வாய்ப்பு வழங்கப்படாது போகிறது. பல நோயாளிகள் இறைவன் மேல் கொண்ட தளராத நம்பிக்கையால் மருத்துவ வசதிகள் பலனளிக்காத போதும் குணமடைந்த வரலாறுகள் நிறையவே உண்டு. மனித உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோடியுள்ள உள்ளரங்க அவாவை இச்செயல் முற்றாக மழுங்கடிக் கின்றது. எனவே இரக்கக்கொலையானது பிழையானதாகக் காணப்படுகிறது.

மருத்துவத் தொழிலானது மனித உயிரைக் காப்பதற்காகவும், சேவை செய்வதற்காகவுமே உருவாக்கப்பட்டது. எல்லா மருத்துவர்களும் இறைவனின் கருணையாலேயே தமது தொழிலை மேற்கொள்கிறார்கள். எனவே உயிரின் மட்டில் பணியாற்ற அழைக்கப்பட்டவர்கள் உயிரை அழிக்கும் செயற்பாட்டில் இறங்கக் கூடாது. வேலியே பயிரை மேய்ந்த கதையாக வைத்தியர்களின் செயல்கள் மாறக்கூடாது. அவ்வாறு செய்வார்களாயின் அது அவர்களின் மருத்துவத் தொழிலுக்கு அவமானமாகவே அமையும்.

இன்று பலரும் 'இரக்கக்கொலை' என்ற செயலை ஆதரிக்க முற்படுகிறார்கள். காரணம் மனித உயிர் பற்றிய பின்நவீனகாலத்து மனிதனின் சிந்தனைப் போக்குகள் சிலவேயாகும். அவை பின்வருமாறு:

1. மனித உயிரானது சாதாரண சடப்பொருளோடு ஒப்பிடப்பட்டு மதிக்கப்படுதல்,
2. சொத்து ஈட்டுவதற்கும், உணர்வூட்டங்களைப் பகிர்ந்து கொள்வதற்குமே மனித உயிர் தேவைப்படுகிறது,
3. இவ்வுலக நல்வாழ்வும், ஆசாபாசங்களுமே உயர்வான இலக்குகள் என்று கணிக்கப்படுவதால் அதற்குத் தடையாகவிருக்கும் துன்பங்களை எவ்வகைப்பட்டாவது அகற்றிவிட வேண்டும் என்ற மனநிலை,
4. மனித வாழ்வின் இறுதி முடிவு இறப்பே ஆகும். மனித உயிர் இவ்வுல கில் துன்பத்தையே அனுபவிக்கின்றது. பொருளற்ற வாழ்வில் இருந்து விடுதலை பெறும் வழியே இறப்பு ஆகும் என்ற மனநிலை.[53]
5. மருத்துவ சிகிச்சை "விலை வினைத்திறன் மிக்கதாக இருக்க வேண்டும்"[54] என்ற சிந்தனைப் போக்கு.

எனவே அவ்வாறான மனநிலைகளை வளர்த்து வரும் மனிதன், இன்னோர் மனிதனோ ஏன் தானோ துன்பப்படும் போது உயிரையே இலகுவாக எடுத்துவிட முயல்கிறான். இச் செயற்பாடானது மனித நிலை பிறழ்ந்த செயலாகும். இவ்வா றான ஓர் சூழமைவில் வாழ்க்கை நடத்தும் நாம் வெறுமனே 'இரக்கக் கொலையை' தடை செய்வதோடு மாத்திரம் நின்றுவிடாது மனித உயிரின் உன்னத நிலையை எமது சமூகத்திற்கு வழங்குபவர்களாக மாறவேண்டும். இதுவே எமது அழைப்பாகும்.[55]

[53] Cf., Pope John Paul II, "Opposing Euthanasia" (Sep. 6, 1984), The Pope Speaks 29: No. 44, pp. 353-354.
[54] Cf., விலை வினைத்திறன் என்ற பதமானது தற்கால மக்கள் மத்தியில் காணப்படும் ஒரு வகை மனநிலையைக் குறித்துக் காட்டுகிறது. நிறையப் பணம் கொடுத்து, பெரிய தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை மிகுந்த பலன் அளிக்க வல்லது என்ற மனப்போக்கு ஆகும். இத்தகைய மனநிலை அறியாமை காரணமாகவும், சமூக அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்வதை நோக்காகக் கொண்டும், தொடர்பு சாதனங்களின் விளம்பரப்படுத்தல்கள் காரணமாகவும் உருவாகலாம்.
[55] Cf., *Ibid*., pp. 353-354.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமானது கிறிஸ்தவர்களால் கொடையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். எம்மைப் புனிதப்படுத்த, புடமிட இறைவன் அனுமதிக்கும் ஊடகமே துன்பமாகும். தாய்த்திருச்சபையில் புனிதர்களாக வணக்கம் செலுத்தப்படுபவர்கள் எல்லாம் தமது வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து இறை அன்பைச் சுவைத்தவர்கள் ஆவர். துன்பங்களைக் கண்டு இவர்கள் பயந்து ஓடவில்லை மாறாக துன்பங்களை நல்மனதோடு ஏற்றுக்கொண்டார்கள். துன்பதுயரங்கள் இடையே இறைசித்தத்தை உணர்ந்து அறிந்து இறைவனை அன்பு செய்தார்கள் அதன் பரிசாக நிலையில்லா வாழ்வை சுவீகரித்துக்கொண்டார்கள் (காண்க. யாக.1:1-4, 1பேதுரு.1:6-7, யோவா.16:20, திருவெளி.7:14).

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக். 9:23) என இயேசு அழைப்புவிடுக்கிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது எம் தலைவராம் கிறிஸ்து காட்டிய வழியில் மீட்பை அடைதலாகும். மீட்பிற்கான ஒரே வழி சிலுவை வழியாகும். எனவே எமது வாழ்வில் கிறிஸ்துவின் பொருட்டு நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு மீட்பின் வல்லமையுண்டு. எனவே தான் இயேசு கூறுகிறார் "... உலகில் உங்களுக்கு துன்பங்கள் உண்டு..." (யோவான் 16:33). வாழ்வின் துன்பங்களை அனுபவிக்க மனமில்லாதவன் கிறிஸ்துவின் சீடனாக இருக்க முடியாது. ஒரு மனிதன் தனது வாழ்வில் தாங்கமுடியாத துன்பத்தை, இறைவன் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார் (காண்க. 1கொரி.10:13). மனித வாழ்வில் துன்பங்கள் வரும் போது அதைத் தாங்கும் இறை அருளும் ஒருங்கே வழங்கப்படுகிறது. எனவே தாங்கொணாத் துன்பங்களின் நிமித்தம் நாம் இரக்கக் கொலையைச் செய்து கொள்ள முடியாது. காரணம் துன்பமானது வாழ்வின் கூறுகளில் ஒன்று ஆகும்.

**நோக்கம், ஊடகம் எதுவாயிருந்தாலும் நேரடியான இரக்கக் கொலை யானது ஊனமுற்ற, நோயாளியான அல்லது இறப்பை அண்மித்த ஒரு வருடைய உயிரைக் கொலை செய்வதாகும். இச்செயற்பாடானது ஒழுக்க வியல் ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாத தீமையாகும்.**[56]

## முடிவாக

இன்று எமது பகுதிகளில் இவ்வாறான இரக்கக்கொலை ஆங்காங்கே நடைபெறுகின்றது. ஆனால் இவை தொடர்புசாதனங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை. காரணம் இன்று இறப்பும் கொலைகளும் மலிந்துவிட்டது. இன்று பலரும் இச்செயல் பற்றிய பூரண அறிவு அற்றவர்களாகவே வாழ்கிறார்கள். இக்கட்டுரையைப் படிப்பவர்கள் தமது வாழ்விலும் இவ்வாறான தவறை இழைக்காது மனித உயிரை நேசிப்பவர்களாகவும், உயிரைக் காப்பவர்களாகவும்

[56] Cf., CCC, No. 2277.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற வேண்டும். உயிர் உன்னதமானது, விலை மதிப்பிட முடியாதது. உயிரின் உன்னதமான தாற்பரியத்தை மனிதர்கள் அறிந்து வாழவேண்டும். எந்தவோர் மனிதனுக்கும் இக்கட்டான வேதனையின் நேரத்தில் தேவைப்படுவது அன்பும் அரவணைப்புமே ஆகும். இறுதி நேரத்தில் வேதனையின் கொடுமையால் அவர்கள் மேற்கொள்ளும் வேண்டுதல்கள் நேரியதெரிவாகவும் (right option) முழுச்சுதந்திரத்தோடு மேற்கொள்ளப்பட்ட தெரிவாகவும் இருக்க முடியாது. ஒருவர் தீராத நோயால் வருந்துகிற போது அவரைக் காப்பாற்ற இரக்கக்கொலை என்ற வடிவத்தைவிட வலி நிவாரணிகளைத் தெரிந்து அவரது வேதனையைக் குறைத்துக் கொள்ளலாம். இறப்பை அண்மிக்கும் நோயாளி மனச்சோர்வு காரணமாக தற்கொலை எண்ணம் கொண்டிருந்தால் மனச்சோர்வை நீக்கும் வழிமுறைகளைக் கையாண்டு தற்கொலை எண்ணத்தைக் குறைக்கலாம். இறுதிவரை தான் அன்பு செய்யப்படுவேன் என்ற உணர்வு ஒரு நோயாளியின் தற்கொலை எண்ணத்தைக் குறைக்கிறது.

😐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை (Suicide)

## 5.1 நிகழ்வு

*நான் எனது பங்குப் பயிற்சிக்காக ஒரு பங்கிற்கு அனுப்பப்பட்டேன். அப்பங்கின் பங்குத்தந்தை என்னோடு பகிர்ந்து கொண்ட ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறவிரும்புகிறேன். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பங்கு ஒன்றிலே ஓர் இளைஞனும் இளம் பெண்ணும் மிகவும் நெருங்கிப் பழகினார்கள். இப்பழக்கம் காலகட்டத்தில் காதலாக மலர இருவரும் ஒருவரை ஒருவர் தேடித்திரிந்து காதலிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தோ பரிதாபம், இதே காலத்தில் இவ்விளைஞனுக்கும் வேறோர் பெண்ணுக்குமிடையே தொடர்பு ஏற்படவே இவன் தனது முதல்க் காதலியோடு நேரம் செலவிடுவதைக் குறைக்க ஆரம்பித்தான். விடயம் அறிந்து கதிகலங்கிய இப்பெண், காதலிக்கும் காலங்களில் தாம் பரிமாறிய பொருட்களோடு அவ்விளைஞனைச் சந்தித்து தன்னை மணம் முடிக்குமாறு கேட்டுக் கொண்டாள். ஆனால் அவனோ, எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, மணம் முடிக்க மறுத்துவிட்டான்.*

*பெண்ணுடைய பெற்றோரும் உறவினரும் எடுத்த முயற்சியின் பயனாக இளைஞன் சம்மதித்து; திருமணநாளும் குறித்தாயிற்று. ஆனால் இப்பெண்ணின் மனதில் இளைஞன் மீதான கோபம் அனலென எரிந்தவண்ணமாயிருந்தது. திருமண ஆயத்தங்கள் தடல்புடலாக நிகழ்தேறின. கல்யாண எழுத்து, திருமண முன்விசாரணை, திருப்பலியிலும் கைகள் இணைக்கப்பட்ட நிலையில் 'ஆம்' என சம்மதம் கூறப்பட்டது. திருமணத்திருப்பலியில் குருவானவர் மாங்கல்யத்தை ஆசீர்வதித்து மணமகனிடம் கொடுக்க அவனும் அதை மணமகளின் கழுத்தில் கட்ட நெருங்கிய போது அப்பெண் தன் கையால் அதைப் பறித்துத் தூக்கி எறிந்துவிட்டாள். அப்பெண் தனது பழிவாங்கும் செயலை வெற்றிகரமாக முடித்து விட்டாள். எல்லோர் மனங்களிலும் கவலை. யார் யாரைத் தேற்றுவது எனத் தெரியாத நிலை. இறுதியில் அவமானம் தாங்க முடியாத இளைஞன் நஞ்சு உட்கொண்டு. தன்னைத் தானே அழித்துக்கொண்டான். (பதிப்பித்தலுக்கான அனுமதி - தொடர்புபட்டவரிடமிருந்து பெறப்பட்ட சம்பவம்)*

எமது நாட்டில் மனித உயிருக்குக் கொடுக்கப்படும் பெறுமதி மிகவும் குறைந்து கொண்டே போகிறது. மனித உயிரை மதிப்போர் தொகை குறைவாகவே காணப்படுகிறது. தினமும் எத்தனையோ கொலைகள் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. நாட்டின் சீரில்லா நிலை காரணமாக சமூகத்திலும் குடும்பங்களிலும் ஏன் தனி மனித வாழ்விலும் கூட பல பிறழ்வுகள் உருவாகின்றன. இப்பிறழ்வுகள் சில வேளைகளில் தற்கொலையாகவும் மாறிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல பாகங்களிலும் ஏதோ காரணங்களுக்காகப் பலரும் தற்கொலை செய்து கொள்வதை காணக்கூடியதாக இருக்கிறது.




படம் 17

இன்று உலகில் தற்கொலை அதிகளவில் செய்துகொள்ளும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வருடந்தோறும் 10,000 பேர் வரை தற்கொலை செய்கின்றார்கள். ஏறக்குறைய 100,000 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். சுருங்கக்கூறின், ஒரு மணித்தியாலத்திற்கு ஒருவர் என்ற ரீதியில் இங்கு தற்கொலை நடைபெறுகிறது. உலகில் நாளாந்தம் ஆயிரத்திற்கு அதிகமானோர் தற்கொலை புரிகின்றனர். உலகில் தற்போது சராசரி தற்கொலை விகிதம் 100,000 பேருக்கு 10-25க்கு உட்பட்டதாக இருக்க, இலங்கையில் சராசரி தற்கொலை விகிதம் 100,000 பேருக்கு 55 ஆகும். தற்கொலைக் குள்ளானோர் மரணமடைகிறார்கள். தற்கொலை முயற்சியில் தப்பியோர் உடல், உள பலவீனமுடையவர்களாக வாழ்கிறார்கள். இலங்கையில் தற்கொலை முயற்சியானது, தண்டனைக்குரிய குற்றமாதலால் முயற்சிப்பவர்கள் பலர் இதை மறைக்கின்றனர்.

தனி மனிதன் ஒருவன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் செயற்பாடானது தற்கொலை எனக் கருதப்படுகின்றது. தற்கொலை என்ற செயற்பாட்டிலே பின்வரும் மூன்று அம்சங்களும் உள்ளடங்குகின்றன:

1. ஒருவர் சுயமாகச் செய்யும் செயற்பாடாகும்,
2. இறப்பு நிகழும் எனத் தெரிந்தும் அதை எதிர்கொள்ளல்,
3. இறப்பிலே முடிவடையும் செயலாகும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சமூகவியல் அறிஞர் எமில் டுர்கேம் (Emil Durkheim) என்பவர் தற்கொலையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: தற்கொலை செய்ய முற்படுபவர் ஒரு குறித்த பலனைத் தரும் என அறிந்த நிலையில் அவரின் செயலால் நிகழும் மரணத்தையே தற்கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து நிற்கின்றது. இவர் தற்கொலையை மூன்று வகையாக பிரித்து நோக்குகின்றார்:

1. தன் முனைப்பான தற்கொலை ( Egoistic Suicide)
2. பொதுநலப்பண்புசார் தற்கொலை (Altruistic Suicide)
3. முரண்பாட்டு நிலைசார் தற்கொலை (Anomic Suicide)

இவற்றில் தன்முனைப்பான தற்கொலை என்பது தனது புகழ்ச்சிக்காக அல்லது சுயநலத்திற்காக செய்து கொள்வதாகும். உதாரணமாக: தீராத நோயாளி தற்கொலை புரிதல். இது தனித்து வாழ்பவர்களினால் தான் செய்து கொள்ள முடிகிறது. பொதுநலப்பண்புசார் தற்கொலை என்பது பிறருக்காக ஒரு குழுவாக, சமுதாயமாக நாட்டின் நன்மை கருதி தற்கொலை செய்து கொள்வதாகும். இதைவிட முரண்பட்ட நிலைசார் தற்கொலைகள் எதிர்பாராத நிகழ்வுகள், பொருளாதாரச் சுமை, பிரிவினை, வறுமை என்பவற்றினால் தற்கொலை செய்தலைக் குறித்து நிற்கிறது.

*'தற்கொலை'* என்ற சொல்லானது *'தற்கொலை முயற்சியில்'* இருந்து வேறுபட்டதாகும். தற்கொலை செய்ய முயன்று அம்முயற்சியில் இருந்து தவறுவதோ அல்லது தோற்றுப் போவதோ தற்கொலை முயற்சி எனப் பொருள்படும். தற்கொலை முயற்சிக்குப் பல நோக்கங்கள் இருக்கலாம்:

1. பிரச்சினைகளில் இருந்து தற்காலிகமாக விடுபட முயற்சிப்பதாக இருக்கலாம்,
2. உயிரை அழித்துக்கொள்ளும் நோக்கம் தற்செயலாக நிறைவேறாமற் போயிருக்கலாம்,
3. நோக்கம் இறப்பதா அல்லது பிழைப்பதா என்பதை நிச்சயமாகக் கூற இயலாத நிலையாய் இருக்கலாம்,
4. ஏனையோரது கவனத்தைப் பெற்றுக்கொள்வதாக இருக்கலாம்.

## 5.2 பலரும் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலை செய்துகொள்கிறார்கள்:

1. சமுதாயக் காரணிகள்,
2. ஆரோக்கியமற்ற அல்லது சுகாதாரக் காரணிகள்,
3. உளவியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்,
4. மற்றைய காரணிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.2.1 சமுதாயக்காரணிகள்

1. ஒருவர் தான் தங்கிவாழும் சமூகத்திலிருந்து தன்னைத் தானே அன்னியப்படுத்தி வாழும் நிலையில் அல்லது சமுதாயம் ஒருவரை அந்நியப்படுத்திவிடுகின்ற நிலையில்,
2. சமூகத்துடன் நேரிய அல்லது ஆரோக்கியமான முறையில் தொடர்புகொள்ள முடியாத நபர் அல்லது தொடர்பு முறிவு,
3. குடும்ப உறவு முறைகளை சீரான முறையில் கையாளத் தெரியாதவர்.

### 5.2.2 ஆரோக்கியம் சார்பான காரணிகள்

சகலவிதமான மனநோய்களும் (mental disorders) முக்கியமானவை.

1. மனச்சோர்வு (depression)
2. சில ஆளுமை சம்பந்தப்பட்ட குறைபாடு (personality disorder)
3. பதகளிப்பு நோய் (anxiety disorder)
4. உளப்பிளவு நோய் (schizophrenia)
5. பதார்த்தங்களின் துஷ்பிரயோகம் (substance abuse)
6. கதியற்ற நிலை (hopelessness)
7. இறப்பைத் தரக்கூடிய நோய்கள் (terminal illness)


### 5.2.3 உளவியல் காரணிகள்

1. தாழ்வுணர்வு (low-self-esteem),
2. குற்றப்பழியுணர்வு (guilt feeling),
3. தோல்வி மனப்பான்மை (feeling of failure),
4. நிராகரிக்கப்படல் (rejection),
5. கோபக் கனல் அதனால் மனவிரக்தி (rage and frustration),
6. வெட்கம் (shame),
7. மற்றவர்களின் கவனத்தைப் பெறல் (to get attention),
8. மாற்றத்தை எதிர்த்தல் (to avoid change),
9. தாங்க முடியாத நெருக்கீட்டில் இருந்து விடுதலை ( to relieve unbearable tension)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2.4 ஏனைய காரணிகள்



படம் 18

1. வாழ்வில் ஏற்படும் மிகவும் பெரிய நெருக்கீடு (major life crisis),
2. வேலை மாற்றங்கள் (job changes),
3. பிறப்பு (birth),
4. பொருளாதார பின்னடைவுகள் (financial reversals),
5. மணமுறிவு (divorce),
6. ஓய்வு பெறல் (retirement),
7. நீண்ட நாட்களாக நிலவும் குடும்ப முரண்பாடுகள் (long-standing intense conflict with family members).

## 5.3 பரிசுத்த வேதாகமத்தில் தற்கொலை

உயிரின் அதிபதியாக இறைவன் ஒருவரே திகழ்கிறார். எனவே உயிரின் மேல் அதிகாரமும் வல்லமையும் இறைவனுக்கே உண்டு என்ற கருத்து மிகவும் ஆழமான முறையில் வேதாகமத்தில் இழையோடுவதை நாம் காணலாம். "நானே இருக்கிறவர்! என்னைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லை என்பதை இப்பொழுது உணர்ந்து கொள்ளுங்கள்! கொல்பவரும் நானே; குணமாக்குபவரும் நானே! என் கைகளிலிருந்து விடுவிப்பார் எவரும் இரார்"(இணை. சட். 32:39). உயிர் இறைவனாலேயே கொடுக்கப்படுகிறது. "வாழ்வின் மேலும் சாவின் மேலும் உமக்கு அதிகாரம் உண்டு. மனிதர்களைப் பாதாளத்தின் வாயில் வரை கொண்டு செல்கின்றீர்; மீண்டும் அங்கிருந்து கொண்டு வருகின்றீர்" (சால.ஞனம்.16:13). "அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே..."(திரு.பணிகள்17:25). எமது உயிரானது இறைவனாலேயே இயக்கம் பெறுகின்றது. "அவரைச் சார்ந்து தான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம்..."(திரு. பணிகள் 17:28).

'தற்கொலை' என்ற பதமானது குறிப்பாக வேதாகமத்தில் பயன்படுத்தப்படாவிட்டாலும் உயிரின் தனித்துவம், மாண்பு பற்றிப் பல இடங்களிலும் குறிப்பிடப்படுகிறது. வாழ்வை அளிக்கும் உரிமையும், எடுக்கும் உரிமையும் இறைவன் ஒருவருக்கே உண்டு (cf. யோபு 1:21). இறைவன் இஸ்ராயேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு மோசே வழியாக உவந்தளித்த பத்துக்கட்டளைகளில் ஐந்தாவது கட்டளை "கொலை செய்யாதே" (வி.ப.20:13) எனக் கூறுகிறது. இக்கட்டளை யிலே உயிரின் மகத்துவம் எடுத்தியம்பப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலே சவுலும் அவனுடைய படைவீரர்களும் எதிரியின் பிடியில் சிக்குண்டு வேதனையோடு இழிவான முறையில் இறப்பதை விடுத்து தம்மைத் தாமே வாளால் குத்தி உயிரை மாய்த்துக்கொள்கின்றனர் (cf. 1 சாமு. 31:34). அப்சலோமின் ஆலோசகர் அகிஸ்தோபல் அரசியல் காய்மகாரம் காரணமாக தன்னைத்தானே நான்றுகொண்டு இறந்தான் (cf. 2 சாமு. 17:23). பெலிஸ்தியர் கையில் சிக்குண்ட சிம்சோன் மூவாயிரம் பெலிஸ்தியரோடு தன்னுயிரையும் மாய்த்துக்கொண்டான் (cf. நீதி. தலை. 16:23-31). மக்கபேயர் இரண்டாம் நூலில் குறிப்பிடப்படும் இராட்சி தனது உயர்குடிப் பிறப்புக்குத் தகாத இழிவு அடைவதைவிட மானத்தோடு இறக்க விரும்பி தன் வாளின் மேலேயே வீழ்ந்து இறந்தான் (cf. 2 மக்க. 14:37-46). புதிய ஏற்பாட்டிலே ஒரே ஒரு சம்பவம் மாத்திரமே தரப்படுகிறது. அதாவது "ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் தன்னைத் தானே கொலை செய்து கொள்கிறான்"(cf. மத். 27:6).

தியாகமானது இறைமகன் இயேசுவால் அதிகம் வரவேற்கப்பட்டு அழுத்திக் கூறப்பட்ட விடயமாகும். மற்றவர்களுக்காக நாம் எம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என இயேசு எமக்கு வெறுமனே போதித்து விடவில்லை மாறாக வாழ்ந்து காட்டியிருக்கிறார். தமது நம்பிக்கைக்காகவும், தம் அயலவருக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்த பலரை நாம் வேதாகமத்தில் காண்கிறோம். ஒருவன் தன்னுயிரைவிட மேலாக கிறிஸ்துவை அன்பு செய்ய வேண்டியவனாக இருக்கிறான். "என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், ஆகியோரையும் ஏன் தன் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடனாய் இருக்க முடியாது" (லூக். 14:26).

மறுவுலகிலே இறைவனோடு ஒன்றிக்க வேண்டுமாயின் இவ்வுலகிலே நாம் எமது உயிரை இறைவனுக்காக அர்ப்பணிக்க வேண்டுமென்று இயேசு கற்பித்தார். "தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரிமையாக்குவர்" (யோவா. 12:25). தன் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா. 15:13). மனுக்குலத்தை அளவுகடந்த விதமாக அன்பு செய்ததன் பயனாக இயேசு தம் உயிரையே எமக்காகப் பலியாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.4 ஒழுக்கவியல் போதனை

ஒவ்வொருவரும் தத்தமது உயிரின் மட்டில் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். உயிரின் அதிபதி இறைவன் ஒருவரே. நாம் அனைவரும் இறைவன் எமக்குத் தரும் கொடையாகிய உயிரை மகிழ்வோடு ஏற்று, பாதுகாத்து இறைவனின் மகிமையை முன்னிட்டும் மீட்பை நோக்கியும் வழிநடத்த வேண்டும்.[57] கத்தோலிக்கத் திருச்சபையானது அனைத்து நேரடிக் கொலைகளையும் வன்மையாகக் கண்டிப்பதோடு, அவை முற்றிலும் தீமையானது என வாதிடுகின்றது. உயிரின் ஊற்றாகத் திகழும் பரம்பொருளைத் தவிர வேறு எவருக்கும் தம்முடைய உயிரையோ அல்லது மற்றவருடைய உயிரையோ எடுக்கும் உரிமை இல்லை.

"ஏனெனில், உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார்; இப்பணியை மனிதத்தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர் கடமைப்பட்டுள்ளனர்."[58] மனிதனுக்கு உயிர் கொடையாகவே கொடுக்கப்படுகின்றது. "மனிதரின் உயிரும், உயிரை வழிவழியாக வழங்க அவர்கள் பெற்றிருக்கும் பொறுப்பும் இவ்வுலகை மட்டும் சார்ந்தவையல்ல; அவற்றை இவ்வுலக எல்லைகளுக்குள் மட்டுமே அளந்து ... மாறாக, அவை மனிதரின் நிலைவாழ்வுடன் எப்போதும் தொடர்பு கொண்டுள்ளன என்பதை யாவரும் அறிந்திருப்பார்களாக."[59] தான் நினைத்தவாறு தனது உயிரைப் பயன்படுத்தும் அதிகாரம் மனிதனுக்கு இல்லை.[60] மாறாக தனது உயிரைப் பாதுகாத்து, உயிரைக் கொடுத்தவரிடமே, உரிய காலத்தில் திருப்பிக்கொடுக்கும் பாரிய பொறுப்பும், கடமையும் மனிதருக்கு உண்டு. உயிரின் மட்டிலான கடமையானது இவ்வுலகத்தில் இறைதிட்டப்படி வாழ்ந்து உன்னத நிலையை அடைவதே ஆகும்.[61] "... படைப்பை நிறைவுக்குக் கொணரவேண்டும் எனக் காலங்களின் தொடக்கத்திலேயே கடவுள் வெளிப்படுத்திய திட்டத்தை..."[62] செயற்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

மனிதனை இறைவன் தனித்தனித் தீவுகளாகப் படைக்கவில்லை. மனிதனை சமூகப்பிராணியாக சமூகவியலாளர்கள் ஏற்றுக்கொள்வர். "ஒரே ஆளிலிருந்து அவர் மக்களினம் அனைத்தையும் படைத்து அவர்களை மண்ணுலகின் மீது குடியிருக்கச்செய்தார்" (தி. ப. 17:26). "இதன் காரணமாகவே கடவுள் மீதும் பிறர் மீதும் அன்பு செய்வது முதன்மையான, மிகப்பெரிய

[57] Cf., CCC, No. 2280.
[58] Cf., இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், "இன்றைய உலகில் திருச்சபை", இல. 51, திருச்சி: தேடல் வெளியீடு, 2001, பக். 709.
[59] Cf., *Ibid.*, இல. 51. பக். 710.
[60] Cf., CCC, No. 2281.
[61] Cf., *Ibid.*, இல. 51. பக். 710.
[62] Cf., இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், "இன்றைய உலகில் திருச்சபை", இல. 51, பக். 710.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையாகும். இறையன்பை பிறரன்பிலிருந்து பிரிக்க முடியாது என்பதை விவிலியம் நமக்குக் கற்பிக்கிறது."[63] இவ்வாறு மனிதர்கள் பரஸ்பர உறவில் ஒருவர் ஒருவரில் தங்கிவாழும் நிலையை உருவாக்கியுள்ளார். மற்றைய மனிதனின் உதவியின்றி யாரும் நிலைத்து வாழ்ந்துவிட முடியாது. "மனிதரின் முன்னேற்றமும் சமூகத்தின் வளர்ச்சியும் ஒன்றின் மேல் ஒன்று சார்ந்திருக்கின்றன என்பது மனிதரின் சமூகப்பண்பிலிருந்து தெளிவாக விளங்குகிறது."[64] எனவே சமூகத்தின் மட்டில் ஒவ்வோர் மனிதருக்கும் உரிமையும் கடமையும் உண்டு. எவன் தனது உரிமைகளைப் பயன்படுத்த அல்லது பெற்றுக்கொள்ள விரும்புகிறானோ அவன் தனது கடமைகளையும் நேரிய முறையில் கடைப் பிடிக்க வேண்டும். "இம் மனிதரே எல்லாச் சமூக நிறுவனங்களின் முதலும், பொருளும், முடிவுமாக இருக்கின்றனர்; அவ்வாறே இருக்கவும் வேண்டும். இச்சமூக வாழ்க்கை மனிதருக்குப் புறம்பேயிருந்து வரும் ஒன்றன்று; மாறாக மற்றவரோடு தாம் கொள்ளும் தொடர்பாலும், ஒருவர் ஒருவருக்கான கடமைகளை ஆற்றுவதாலும், சகோதர உரையாடலாலும் இது பிறக்கின்றது."[65]

எனவே தற்கொலையானது ஒருவர் தனது சமூகத்திற் எதிராகச் செய்யும் தீமையாகும். சமூகத்தின் மட்டில் தமக்கு இருக்கும் பொறுப்புகளையும், கடமைகளையும் அலட்சியம் செய்கின்ற ஒரு செயலாகும். "சமூகத் துரோகம்" என்று கூட நாம் அழைக்கலாம். எனவேதான் சமூகத் தொடர்பை அறுத்து வாழ்வோர் இலகுவாக தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.[66]

"மனிதர் ஒருவர் ஒருவரோடு கொள்ளும் சார்பு மென்மேலும் நெருங்கியும் படிப்படியாகப் பாரெங்கும் பரவியும் வருகின்றது. இதன் விளைவாகப் பொதுநலன் இன்று மென்மேலும் அனைத்துலகத் தன்மை கொண்டதாக மாறிவிட்டது; இதன் காரணமாக அது மனிதகுலம் முழுவதையும் சார்ந்த உரிமைகளையும் கடமைகளையும் உள்ளடக்குகிறது"[67] என இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் பொதுநலனின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது. 'பொதுநலனுக்காக' தமது உயிரைப் பலர் தியாகம் செய்துள்ளார்கள், செய்யவேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு நாட்டின் உளவாளி, இக்கட்டான சூழ்நிலையில் தனது மக்களையும், தனது நாட்டையும் பாதுகாக்கும் உயர்ந்த நோக்கிற்காக இரகசியங்களைக் கசியவிடாது தமது உயிரை மாய்த்துக் கொள்கிறான்.

மனிதர் ஒவ்வொருவரும் தன்னை அன்பு செய்து மதித்து நிறைவாழ்வை அடைவதே இறைவனின் நோக்கமாகும். தற்கொலைச் செயற்பாடானது இக்கடமையை மீறும் செயலாகிறது. மனிதன் புனிதத்துவத்தின் வழிநடக்க வேண்டியவனாயிருக்கிறான். "ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்

[63] Cf., "இன்றைய உலகில் திருச்சபை", இல. 24. பக். 668.
[64] Cf., *Ibid.*, இல. 25. பக். 669.
[65] Cf., *Ibid.*, இல. 25, பக். 669; cf. CCC, No. 2281.
[66] Cf., CCC, No. 2281.
[67] Cf., *Ibid.*, இல. 26, பக். 670.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்.5:48). எனவே இப்புனிதத்துவம் நோக்கிய பயணம் திடீரென நடப்பது இல்லை. இது படிப்படியாக மனித வாழ்வின் முடிவுவரை நிகழவேண்டிய செயற்பாடாகும். மனிதன் தற்கொலை செய்வதால் இப்பயணத்தை இடைநிறுத்தி இறை கட்டளையை மீறுகிறான்.

சாதாரண மனித, சமூக வாழ்வில் தற்கொலையைத் தடுக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும். ஒருவர் ஒருவரை விளங்கிக் கொண்டு, புரிந்துணர்வோடு செயற்படும் பழக்கத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். மன அழுத்தத்திலிருந்து விடுபடும் திறனை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டு அதிகாரிகள் மக்கள் அனைவருக்கும் தேவையான அடிப்படையான வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல் நன்று. அத்தோடு வேலையில்லாப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய ஆவன செய்தல் வேண்டும். வாழ்வில் வரும் பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்ள வேண்டிய பயிற்சியை பெற்றுக் கொள்ளவேண்டும். சமூகத்துடன் உறவாடும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனூடாக சமூக முறிவு ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம். எமது பகுதிக்கடைகளில் நச்சுப் பொருட்கள் இலகுவில் கிடைப்பதைத் தடை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு உத்தரவுப்பத்திரம் மூலம் அவற்றை விநியோகம் செய்யலாம். தற்கொலை முயற்சியைத் தூண்டும் சந்தர்ப்பங் களைக் குறைக்கக் கூடிய சமூக கலாச்சார அமைப்பைத் தோற்றுவிக்கலாம்.

## முடிவாக

தற்கொலையானது மிகப்பெரிய பாவமாகும். உயிரின் அதிபதியாகத் திகழும் இறைவனைத் தவிர உயிரை எடுக்கும் உரிமை வேறுயாருக்கும் இல்லை. ஆனால் பலரும் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலை செய்கின் றார்கள். தற்கொலை முயற்சியிலிருந்து தப்பிப் பிழைத்தோர் தமது மடமைத் தனத்தை நினைத்து காலம் பூராகவும் வருந்தி வருவது கண்கூடு. எனவே இறை வழியில் வாழ அழைப்புப்பெற்ற நாம் உயிரை மதித்து அன்பு செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். மனிதர் 'கடவுளின் உருவில்' படைக்கப்பட்டவர்கள். "மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப்பிறவிகளை ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம் மாத்திரம்? ஆயினும் அவர்க ளைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர்; மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்; எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்கு கீழ்படுத்தியுள்ளீர்" (தி.பாடல் 8:4-6). எனத் திருப்பாடல் மனித மான்பை எடுத்தியம்புகிறது. எனவே இவ்வாறான மனித உயிரைக் கொலைசெய்யாது பாதுகாத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை முறையிலான குடும்பக்கட்டுப்பாடு

## 6.1 நிகழ்வு

*அண்மையில் ஒரு குடும்பப் பெண் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பெண்ணின் வயது 43. இவர் எட்டுப்பிள்ளைகளின் தாய். தனது வீட்டு வறுமை நிலையையும், தனது பிள்ளைகளை வளர்க்க முடியாத நிலையையும் பற்றி என்னோடு பகிர்ந்து கொண்டார். இவருடைய பிள்ளைகளின் வயது வித்தியாசம் ஒரு வயதாகக் காணப்பட்டது. அதாவது இப்பெண் ஒவ்வோர் வருடமும் பிள்ளை பெற்றிருக்கின்றாள். இன்னும் ஆழமாக அவருடன் உரையாடிய போது இவர் டியூபெக்டமி எனப்படும் சிகிச்சையைச் செய்துள்ளது தெரியவந்தது. அதாவது இவருடைய கருப்பையின் இரண்டு பக்கத்திலிருக்கும் குழாய்களை கருக்கட்டாமல் அறுத்து விடுவது அல்லது மின்சாரத்தினால் எரித்துவிடும் செயலே டியூபெக்டமி எனப்படும். இதனால் பெண் முட்டை வெளியே வராமல் தடைசெய்யப்படுகிறது. ஆண் விந்தும் குழாயில் வந்து தடைசெய்யப்படுகிறது. இத்தாய் மேற்கொண்ட செயலின் தாற்பரியம் பற்றி அவருக்கு எடுத்தியம்பினேன். "கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு?" என்ற கூற்று எனது மனதில் இளையோடியது. அத்தாய்க்கு நான் இயற்கைமுறைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை விளக்கியபோது "இதை எனக்கு முன்னதாகச் சொல்லியிருந்தால் எவ்வளவோ நல்லாயிருக்கும் என்ற பதிலே அத்தாயின் உதட்டால் வெளிவந்தது.*

## 6.2 அறிமுகம்

இயற்கைமுறைக் குடும்பக் கட்டுப்பாடானது இயற்கையான மனித பாலியல் தொகுதியின் இயக்கத்தையும் அதன் வளத்தையும் ஆய்ந்தறிந்து கொள்ளும் செயலாகும். இதனூடாக பெண்ணானவள் தனது மகப்பேற்று வாய்ப்பு விபரணங்களை அறிந்து கொள்கிறாள். இம்முறையை தமது தாம்பத்திய உறவில் நடைமுறைப்படுத்தும் குடும்பங்கள் பொறுப்புள்ள, சீரான குடும்ப வாழ்க்கையை முன்னெடுக்கிறார்கள் என்பது கண்கூடு. அண்மையில் இறைபதம் அடைந்த எமது அன்புக்குரிய திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், இயற்கை முறைக் குடும்பக்கட்டுப்பாடு பற்றி அனைத்து திருமணமான ஆண்களும் பெண்களும் அறிந்து அதனூடாக தத்தமது மகப்பேற்று விதிமுறைகளை/நியதிகளை விளங்கிக் கொள்ள அழைப்பு விடுத்திருக்கிறார். மனிதனையும் சாதாரண சடப்பொருளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் இவ்வுலக பொருள்முதல்வாதப் போக்குக் காரணமாக, மனித உடல் வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைப்பொருளாகப் பாவிக்கப்படுகிறது. பல செயற்கைமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், கருவிகளின் உதவியோடு உடலுறவு மேற்கொள்ளப் படுகிறது. இதற்கு எதிராக திருச்சபையானது இறைவன் இயற்கையாகக் கொடுத்த இயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாட்டுச் செயலை ஊக்குவித்து மனிதத்தின் மாண்பை நிலைநாட்ட முயற்சிக்கிறது.

## 6.3 நோக்கம்

பெண்ணின் மாதவிடாய் சுழற்சியில் சாதாரணமாக இடம்பெறும் நிகழ்வுகளைக் கவனித்து, பதிவு செய்து, விளங்கிக் கொள்வதே இயற்கைமுறைக் குடும்பக் கட்டுப்பாட்டில் அவசியமாகிறது. இம்முறையானது மணமக்கள் பிள்ளை பெறுவதற்கும், பிள்ளைப்பேற்றை தவிர்த்துக் கொள்வதற் கும், பயன்படுத்தப்படலாம். ஆனால் பரிதாபகரமாக பலரும் எதிர்மறையான பாவனையையே விரும்புகிறார்கள். அநேகர் பிள்ளைப் பேற்றை தவிர்த்துக் கொள்வதற்கு மாத்திரமே இம்முறையைப் பயன்படுத்துகின்றனர். இதனூடாக ஒரு பெண் தனது பிள்ளைப்பாக்கிய படிமுறைகளை ஒழுங்கமைத்துக் கொள் ளலாம். கணவன் மனைவிக்கிடையிலான கூட்டுறவும், ஒருங்கிணைப்பும், அதிகம் வளர இம்முறை உதவி செய்கிறது. இதன் விளைவாக மகிழ்ச்சியான நிலைத்த குடும்பம் உருவாகும்.

## 6.4 சில இயற்கையான குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள்

### 6.4.1 தாய்ப்பால் ஊட்டல் முறை

நேரிய நோக்கங்களுக்காக நல்ல செயல்களை ஆற்றுவது கட்டாயமா கும். குழந்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வளர்ச்சியடையவும், உயிர்த் துடிப்புடன் செயற்படவும், நிறைவுடன் வாழவும் தாய்ப் பால் அவசியமாகிறது.[68]

இயற்கையான குடும்பக்கட்டுப்பாட்டு முறையில் தாய்ப் பாலூட்டல் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தாய்ப்பால் மிகச்சிறந்த நிறை உணவாயி ருந்து குழந்தையின் உணர்ச்சி நிலைகளின் சீர்மிகு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. குழந்தையின் அடிப்படைத் தேவைகள் உணவும் அன்புமாகும். இவை இரண்டும் தாய்ப் பாலூட்டலில் குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறது. தாயின் கருவறைக்குள் குழந்தை அனுபவித்த பாதுகாப்பும், பயமற்ற சூழமை வும் தாய்ப்பால் ஊட்டலின் வழியாக தொடர்ந்தும் குழந்தைக்குக் கொடுக்கப் படுகிறது. தாய்ப்பாலூட்டல் செய்கையானது வேறு எந்தச் செய்கையாலும்

[68] Cf., Thomas Pazhypzllil, *Pastoral Guide: Moral-Canonical-Liturgical*, Vol. 2, Bangalore: KJC Publications, 1977, pp. 699.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுசெய்யப்பட முடியாத உயர்வான செயலாகும். தொடர்ச்சியான பாலூட்டல் தாய்க்கோ குழந்தைக்கோ எந்தவிதமான தீங்கையும் விளைவிக்காது; மாறாக தாயின் வளமற்ற காலத்தை (infertile period) அதிகரிப்பதோடு, மாதவிடாய் ஏற்படாத காலத்தையும் அதிகரிக்கச் செய்யும். குழந்தை அடிக்கடி தாய்ப்பாலை உறிஞ்சுவதனால் தாயின் முட்டை வெளியேற்றம் அமுக்கப்படுகிறது. இதன் காரணமாக வளமற்ற காலமும் அதிகமாகிறது. எனவே தாய்மார் குழந்தைக்குப் பாலூட்டுவதை அதிகரிப்பதன் வாயிலாக தமது இயற்கையான வளமற்ற காலத்தையும் அதிகரித்துக் கொள்ளலாம். இரவில் கூட குழந்தைகளுக்குப் பாலூட்ட வேண்டும். தாய்மார் தமது குழந்தையை தம்மோடு கூடவே வைத்து உறங்க வேண்டும்.[69] ஆனாலும் இம் முறையிலான குடும்பக்கட்டுப்பாட்டு முயற்சி 100% வினைத்திறன் மிக்க ஒன்றல்ல.

உடலியல், உளவியல் காரணங்களுக்காக தாயானவள் தனது குழந்தைக்குப் பாலூட்டாமல் விடலாம். இன்று பல தாய்மார் தமது குழந்தை களுக்குப் பாலூட்டுவதில் அக்கறை செலுத்தாமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தமது உடல் அழகு குறைந்துவிடும் என்ற தப்பான எண்ணமே இதற்கான காரணமாகும். பாலூட்டல் வெட்கப்படவேண்டிய செயல் என்ற மனப்பாங்கு இன்றைய பெண்கள் மத்தியில் நிலவுகிறது. சிலர் கிறிஸ்தவ ஒழுங்கிற்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதற்காக, குறிப்பாக தமது உடல் வெளியார்ந்த அழகைத் தக்கவைத்துப் பல ஆடவர்களைக் கவர்ந்து கொள்வதற்காக, இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். இவ்வாறான மனநிலை முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.[70]

## 6.4.2 வெப்பநிலை முறை (Temperature Method)

சாதாரணமாக மனிதனுடைய உடல் வெப்பநிலை 98.4°F ஆகும். ஒருவர் உணவு, நீர், ஏனைய செயற்பாடுகளால் செல்வாக்குச் செலுத்தப்படாமல் ஓய்வில் இருக்கும் போது எடுக்கப்படும் உடல் வெப்பநிலையே அவருடைய சாதாரண உடல் வெப்பநிலையாகக் கணிக்கப்படுகிறது.[71]

பெண்ணின் சாதாரண உடல் வெப்பநிலையானது அவளுடைய முட்டை வெளியேற்றப்பட்ட பின்னர் 0.4 F ஆக அதிகரித்துச் செல்லும். அவளது சூலகத்தில் முட்டை உற்பத்திக் காலத்திலிருந்து முட்டை வெளியேற்றப்பட்ட பிற்பாடு உடலின் 'புறோஜெஸ்ரரோன்' (progesterone) என்னும் 'ஓமோனின்' சுரப்பு அதிகரிப்பதாலேயே வெப்பநிலை உயர்வடைந்து செல்கிறது. அடுத்த

[69] Cf., John Kipply, *The Art of Natural Family Planning*, Cincinnati: The Couple to Couple League International Inc., 1985, pp. 130-133.
[70] Cf., வி. மா. தாசன், *அவன், அவள், அவர், (கிறிஸ்தவ திருமணம்)*, யாழ்ப்பாணம்: குடும்ப மேய்ப்புப்பணி நிலையம், 1981, பக். 189.
[71] Cf., John Kipply, p. 49.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவிடாய் ஆரம்பிக்கும் நாள் வரை இவ்வுயர் வெப்பநிலை தொடரும். அடுத்த மாதவிடாய் சுழற்சி தொடங்கும் போது மீண்டும் சாதாரண வெப்பநிலை காணப் படும். மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக இவ்வுயர் வெப்பநிலை அதாவது 0.4 F - 0.6F வரை வெப்பஉயர்வு காணப்படுமாயின், முட்டை உடைக்கப்பட்டு விட்டது என்பதில் பெண்கள் உறுதியாகலாம். இக்காலமானது வளமற்ற காலமாகும். இந்நாட்களில் உடலுறவு கொண்டால் கருக்கட்டல் நடைபெறாது.[72]

### 6.4.2.1 எப்போது வெப்பநிலை எடுக்கவேண்டும்

ஒவ்வோர் நாளும் காலையில் கண்விழித்தவுடன் 5 அல்லது 7 நிமிடங்களுக்கு ஒருமுறை சாதாரண உடல் வெப்பநிலை எடுக்கப்படவேண்டும். ஒவ்வோர் அரை மணித்தியாலத்திற்கும் 1 பாகை F க்கு 1/10 வீத வெப்பநிலை உயர்வு காணப்படுமாயின், அதாவது காலை 5.30 இக்கு முதல் வெப்பநிலை எடுக்கப்படுமாயின் இரண்டு மணித்தியாலங்களின் பிற்பாடு அதாவது 7.30 க்கு வெப்பநிலை உயர்வு 4/10 வீதமாகக் காணப்படுமாயின் முட்டை உடைக்கப்பட்டதற்கு இது அறிகுறியாகும். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கே வெப்பமானி வாசிப்பு மேற்கொள்ளப்படவேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக சில மாற்றங்கள் செய்துகொள்ளலாம். இவ்வாறு வெப்பநிலை வாசிப்பு மேற்கொள்ளப்படவில்லையாயின் இம்முறை தோல்வியையே சந்திக்கும்.[73]

### 6.4.2.2 எவ்வாறு வெப்பநிலை எடுக்கப்படவேண்டும்

வெப்பநிலையானது வாய்மூலமாகவும் மலவாசல் மூலமாகவும், யோனி வழி மூலமாகவும் பெறப்படுகிறது. வாய் மூலமாகப் பெறப்படும் வெப்பநிலை புறக்காரணிகளின் செல்வாக்கால் அடிக்கடி மாற்றமடைய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. உதாரணமாக வாயைத் திறந்து வைத்திருக்கையில் வெப்பநிலை யில் மாற்றம் காணப்படும். ஆனால் யோனி வழி, மலவாசல் போன்றவற்றிலிருந்து பெறப்படும் வெப்பநிலை சீரானதாகவிருக்கிறது. சாதாரணமாக வாய்மூலம் பெறப்படும் வெப்பநிலையைவிட மற்றைய இரு இடங்களிலுமிருந்து பெறப்படும் வெப்பநிலை சற்று உயர்வாகவே பதிவுசெய்யப்படுகிறது. எனவே வெப்பநிலை பெறப்படும் முறையை ஒரு குறிப்பிட்ட மாதச் சுழற்சிக்குள் பெண்ணானவள் மாற்றிக்கொள்ளக் கூடாது. பெண்குறிக்குள் வெப்பமானியை ஆழமாக உட் செலுத்தக் கூடாது - காரணம் வெப்பமானி இடையிலேயே உடையும் தன்மை உருவாகலாம். வாய் மூலமாக வெப்பநிலை பெறப்படும் போது நாக்கின் கீழ் வெப்பமானி வைக்கப்படவேண்டும்.[74]

---

[72] Cf., Thomas Pazhyampallil, p. 701.
[73] Cf.,. John Kipply, p. 112.
[74] Cf., *Ibid.*, p. 112.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.4.2.3 வெப்பநிலைப் பதிவு

வெப்பநிலைப் பதிவானது மனைவியால் அல்லது கணவனால் மேற் கொள்ளப்படலாம். இதன் மூலம் கணவன் மனைவிக்கிடையிலான கூட்டுறவு, இணைப்பு ஆழமடையும். வெப்பநிலைப் பதிவு வரைபு இருக்குமாயின் அதிலே குறித்துக் கொள்ளலாம். இல்லாது போனால் சிறிய குறிப்புக் கொப்பியில் குறித்துக்கொள்ளலாம். பதிவு மேற்கொள்ள முன் வெப்பநிலை மாற்றமடையக் கூடிய இடங்களில் வெப்பமானியை வைக்கக்கூடாது. வெப்பமானியை இறுக் கமாக உதறுகிற போதுதான் ரசம் கீழே இறங்குகிறது. ஆனால் வெளியில் வெப்பம் அதிகமாயிருக்குமாயின் இயல்பாகவே ரசம் உயர்வடையும். வெப்ப மானியானது வெப்பமான பாத்திரங்கள் உள்ள இடங்களிலிருந்தும், சிறுவர்கள் நடமாடும் இடங்களிலிருந்தும், சூரியக்கதிர் நேரடியாகப்படும் இடங்களிலிருந்தும் தூர வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும். பதிவு மேற்கொண்ட பிற்பாடு வெப்ப மானியை உதறிய பின் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

### 6.4.3 மாதவிடாய் சுழற்சிக் கணிப்பு முறை (Rhythm Method)

கிறிஸ்தவ யுகத்திற்கு முன்பாகவே மாதவிடாய் சுழற்சிக் கணிப்பு முறைபற்றிய அறிவை யூதர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்றுகள் வேதாகமத்தில் காணக்கிடக்கின்றது. தூய்மைப்படுத்தல் முழுக்கோடு (bath of purification) பெண்ணேருத்தி கருவுறக்கூடிய நிலையைப் அடைகிறாள்.[75] இம் முறையானது ஆஸ்திரியாவைச் சேர்ந்த கனாவுஸ் என்ற வைத்தியராலும், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓஜினோ என்ற வைத்தியராலும் ஆய்வுக்குட்படுத் தப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதை முதன் முதலில் திருத்தந்தை 12ஆம் பயஸ் திருச்சபையில் அறிமுகப்படுத்தி ஆதரித்தார். இம்முறை முன்னைய மாதவிடாய் சுழற்சி பற்றி அறிதலின் வாயிலாக எதிர்கால மாதவிடாய் சுழற்சியில் முட்டை வெளியேறும் அறிகுறிகள், நாள் என்பவற்றை அறிந்து கொள்ளும் முறையாகும்.[76]

கனாவுசின் கருத்துப்படி 26 நாட்களைக் கொண்ட மாதவிடாய் சுழற்சியில் 12வது நாளிலே முட்டை வெளியேறுகிறது. அதேவேளை 28 நாட்களைக் கொண்ட சுழற்சியில் 14வது நாளிலே முட்டை வெளியேற்றப் படுகிறது. ஆனால் ஓஜினோவின் ஆய்வின்படி 26 நாட்களைக் கொண்ட சுழற்சியில் 11வது நாளிலே முட்டை வெளியேற்றப்படுகிறது. அதாவது 15வது நாளுக்கு முன்பாக இச்செயல் நடைபெறும். 28 நாள் சக்கரத்தில்


[75] Cf., J. John Billings, The Ovulation Method, The Advocate Press, Melbourn, 1966, p. 27.
[76] Cf., J. John Billings, The Ovulation Method: Natural Family Planning, Minoesota: The Liturical Press, 1987, p.7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக் குறைந்தது 13வது நாளிலும் ஆகக் கூடியது 17வது நாளிலும் நிகழ்கிறது. ஓஜினோவைப் பொறுத்தவரையில் கருக்கட்டலை தடுத்தல் இலகுவாகும். முட்டை வெளியேற்றத்தைக் குறிக்கும் அறிகுறிகள் ஐந்து நாட்களுக்குத் தென்படும், இவை வளமற்ற நாட்களாகும். உடலுறவின் பின் விந்து மூன்று நாட்களுக்கு உயிர்வாழக்கூடியது. முட்டையானது 24 மணித்தியாலங்களே உயிர் வாழும். ஒரு மாதவிடாய் சுழற்சியில் ஒரு முட்டையே சாதாரணமாக வெளியேற்றப்படும். முட்டை வெளியேற்றல் அறிகுறி தென்படும் முதல் நாளிலிருந்து முதல் மூன்று நாட்களுக்கு உடலுறவு கொண்டால் கருக்கட்ட வாய்ப்பு இருக்கிறது.[77]

பெண்ணின் யோனிவாசல் ஊடாக விந்து உட்செலுத்தப்பட்டு முட்டையும் விந்தும் சந்திக்கும் போது கருக்கட்டல் நிகழ்கிறது. ஒரு மாதவிடாய் சுழற்சிக்குள் நான்கு நாட்களில் மாத்திரமே கருக்கட்டல் சாத்தியமாகும். ஆனாலும் எட்டு நாட்கள் வளமான நாட்களாகக் (fertile period) கணிக்கப்படுகின்றன. மிகுதி நாட்கள் பாதுகாப்பான அல்லது வளமற்ற நாட்களாகும் (safe or infertile days). ஆனால் பெண்ணுக்குப் பெண் மாதவிடாய் சுழற்சி மாறுபடுகிறது. 26 நாட்களிலிருந்து 35 நாட்கள் வரையான சுழற்சியைக் கொண்டோரும் உளர். மாதவிடாய்க்கு முன்னர் 19-12 இக்கு இடைப்பட்ட நாட்களிலேயே கருக்கட்டல் ஏற்பட வாய்ப்புண்டு. ஏனைய நாட்களில் வாய்ப்பு இல்லை என்ற முடிவையே இவ்விரண்டு மேற்கூறிய வைத்தியரும் கொடுத்தனர்.[78]




படம் 19

[77] Cf., J. John Billings, The Ovulation Method, p. 27.
[78] Cf., *Ibid.*, p. 27.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.4.4 கருச்சினை கனிவு முறை (Ovulation Method)/ டாக்டர் பில்லிங்ஸ் முறை அல்லது வெண்கசிவு முறை

நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 50 கோடிக்கு மேல் தம்பதிகள் பயன்படுத்தி மனத்திருப்தி அடைந்துவரும் சிறந்த முறையாக இம்முறை கருதப்படுகிறது. மாதவிடாய் ஆரம்பமான முதல் நாளிலிருந்து அடுத்த மாதவிடாய் முன்தினம் வரை உள்ள நாட்களைக் கொண்டது மாதவிடாய் சுழற்சி ஆகும். சூலகத்தில் முழுவளர்ச்சி அடைந்த முட்டையானது முட்டைப்பையை உடைத்து வெளிவருவதற்கு கருச்சினைக்கனிவு என்று பெயர்.[79]

### கருவுறுவதற்கு மூன்று அம்சங்கள் தேவை:

1. விந்து (sperm)
2. முட்டை (ovum)
3. பெண்ணின் வெண்கசிவு (mucus)

பெண்ணின் வெண்கசிவு கருத்தரித்தலுக்கு மிக முக்கியமானது. பெண்ணின் வெண்கசிவு இல்லையாயின் விந்து முட்டையைச் சந்திக்கும் செயற்பாடு நடைபெற வாய்ப்பு குறைவாகவே இருக்கும்.[80]

### 6.4.4.1 பெண்ணின் வெண்கசிவின் முக்கியத்துவம்

1. வளமற்ற வெண்கசிவு விந்தை உள்ளே போகவிடாமல் கருத்தரித்தலைத் தடுக்கிறது.
2. வளமான வெண்கசிவு விந்தை ஏற்று யோனிப் பாதையிலுள்ள அமிலத்திலிருந்து காப்பாற்றி, உள்ளே போவதற்கு உதவி செய்கிறது.
3. பலமற்றதும், சக்தியற்றதுமாகிய வலிமையற்ற உயிர் நீக்கும் நிலையிலுள்ள விந்துகளை சல்லடை போல அரித்துத் தடைசெய்கிறது.
4. விந்துக்குப் பிராணவாயுவும் (oxygen) உணவும் கொடுத்து சக்தியும், ஊக்கமும் கொடுக்கிறது.
5. கருவுற உதவி செய்கிறது.
6. கருப்பையின் வாய்ப்பகுதி மற்ற உறுப்புகளை மென்மையாக்கி ஆண்விந்து உள்ளே போவதற்கு உதவி செய்கிறது. உடல் உறவிற்கும் உதவி செய்கிறது.[81]


[79] Cf., ஜன் ஐப், *ஆணா பெண்ணா: விருப்பத்திற்கேற்ப பெற்றுக்கொள்வது எப்படி?* ஈரோடு: காவலர் பப்ளிகேஷன்ஸ், 1999, பக். 17.
[80] Cf., *Ibid*., p.18.
[81] Cf., *Ibid*., p.18.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.4.4.2 மாதவிடாய்

மாதவிடாய் நாட்கள் சாதாரணமாக 4 முதல் 5 நாட்கள் நீடிக்கும். மாதவிடாய் ஆரம்பித்த நாளை, 'முதல் நாளாகவும்' அடுத்து வரும் நாட்களை இரண்டு, மூன்று எனக் கணக்கிடவேண்டும். மாதவிடாய் நாட்கள் 2 அல்லது 5 அல்லது 7 நாட்களாக இருந்தாலும் முதல் நாளை முதல் நாளாகக் கணக்கிடவேண்டும். மாதவிடாய் நின்ற பிறகு முதல் நாள், இரண்டாம் நாள் எனக் கணக்கிடுதல் தவறு.




படம் 20

## 6.4.4.2.1 முதல் வறண்ட நாட்கள்

மாதவிடாய் நின்ற பிறகு 2,4 நாட்கள் பெண்ணின் உறுப்பைச் சுற்றிலும் வறட்சியாக இருக்கலாம். வெண்கசிவே இருக்காது. இது முன் வறட்சி நாட்கள் என்று கூறப்படுகிறது. எந்த வித ஈர உணர்வும் இல்லாமல் இருக்கும் வறண்ட நிலத்தில் விதை முளைக்காது, அதைப்போல் இங்கேயும் ஆண்விந்து பலனளிக்காது.

வறண்ட நாட்களுக்குப் பிறகு வளமற்ற வெண்கசிவு ஆரம்பமாகிறது. முதலில் குறைவாகவும் பிறகு அதிகமாகவும் இருக்கலாம். மேகமூட்டமாகவோ, தடிப்பாகவோ, ஒட்டக்கூடிய மஞ்சல் நிறமாகவோ, வெண்மையாகவோ கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். இது நூல் போல இழுக்க முடியாதது. அறுந்து போகக் கூடியது. (அறிகுறி நெஞ்சிலிருந்து வரும் கெட்டியான சளி போன்ற திரவம்). இத்தகைய வெண்கசிவு முதல் நான்கு நாள்வரை இருக்கலாம்.[82]

### 6.4.4.2.2 வளமான வெண்கசிவு நாட்கள்

படிப்படியாகத் தொடர்ந்து மாறுதல் ஏற்படுகிறது. வெண்கசிவு தெளிவாக வழவழப்பாக நூல்போல் இழுக்கக் கூடிய பச்சைமுட்டையின் வெண்கரு போல, கண்ணாடி போல காணப்படும். வளமிக்க நாட்களில் தனிப்பட்ட ஈர உணர்வை இத்திரவம் உண்டாக்குகிறது. சளி பிடிக்கும் பொழுது மூக்கிலிருந்து சளி ஒழுகுவது போல, அல்லது வெண்டைக்காய் அறுத்தால் கையில் வழுவழுப்பாய் இருப்பது போல, இந்த வெண்கசிவு 2 முதல் 4 நாட்கள் அல்லது அதற்கு மேலும் இருக்கலாம். சான்றாக மாடு போன்ற மிருகங்களுக்குக் கூட வளமான வெண்கசிவு சினைப்பிடிக்கக் கூடிய நாட்களில் வருவதைப் பார்த்திருப்பீர்கள். வெண்கசிவு என்பது முட்டையானது முழுவளர்ச்சியை அடையப்போகிறது என்பதற்கு அறிகுறியாகும்.[83]

### 6.4.4.2.3 உச்ச அறிகுறி நாள் (Peak Day)

இந்த வளமான வெண்கசிவு அதிகமாகிக்கொண்டே இருக்கும். கடைசி நாள் அதாவது ஈர உணர்வின் இறுதிநாள் உச்ச நாளெனக் கூறப்படுகின்றது. இந்தக் கடைசிநாளில் தான் பெண்முட்டை வெளியில் வருகிறது. முக்கிய மாகக் கருத்தரிக்கக் கூடிய நாள் இந்த நாள் தான்.

### வெண்கசிவு நின்றுவிடுகின்றது

உச்ச நாட்களுக்கு அடுத்த நாள் அப்பெண்ணின் ஈர உணர்வு முழுவதும் நீங்கி வறட்சியை உணர்கிறாள். வெண்கசிவு முடிந்ததற்கு முந்தின நாள் உச்ச நாளாக இருக்கும்.

### 6.4.4.2.4 பின் வறட்சிக்காலம்


உச்ச நாளுக்கு அடுத்த நாளிலிருந்து அடுத்த மாதவிடாய் வரைக்கும் வறண்ட நாட்களாக இருக்கும். இது பின் வறண்ட நாட்கள் எனப்படும். சில பெண்களுக்கு அசாதாரணமாக வளமற்ற வெண்கசிவு இந்தப் பின்வறண்ட நாட்களுக்கு இடையிலும் வரலாம். பெண்முட்டை 2 நாட்களில் இறந்துவிடுவ

[82] Cf., *Ibid.*, pp. 19-20.
[83] Cf., *Ibid.*, p. 20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் பிறகு வெண்கசிவு இருந்தாலும் கருத்தரிக்கும் வாய்ப்பு இல்லை. அதற்குப் பிறகு அடுத்த மாதவிடாய் ஏற்படுகிறது. வறண்ட நாட்கள் முடிந்து வெண்கசிவு ஆரம்பிக்கும் பொழுது அன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் உச்ச நாள் வரப்போகிறது என்று முன்னதாகவே தெரிந்து கொள்ளலாம்.[84]




படம் 21

## இம் முறையில் கவனிக்க வேண்டியவை

1. மாதவிடாய் நாட்களை கணக்குப் போடுதல்
2. வறட்சியான நாட்கள் - வெண்கசிவு இல்லை, வறண்ட உணர்வு இன உறுப்புகளில் தோன்றுகிறது.
3. வளமற்ற வெண்கசிவு நாட்களில் கருத்தரிக்க வாய்ப்பு மிகவும் குறைவு.
4. வறட்சியான நாட்களில் கருத்தரிக்க வாய்ப்பு மிகவும் குறைவு.
5. ஈரமான உணர்ச்சி உள்ள நாட்களில் கருத்தரிக்க வாய்ப்பு உண்டு.
6. வளமான வெண்கசிவு நாட்களில் நூல்போல் இழுக்கக் கூடிய தன்மை இருக்கும்.
7. வளமற்ற வெண்கசிவு வளமான வெண்கசிவாக மாறும் பொழுது இரண்டும் கலந்த வெண்கசிவாக இருக்கலாம். இது திடீரென்று மாறுவதில்லை. சில நாட்களில் தான் மாற்றம் அடைகின்றது.

[84] Cf., *Ibid*., p. 21.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.4.4.2.5 கருத்தரிக்க வாய்ப்பு உள்ள நாட்கள்

வளமான வெண்கசிவு நாட்களிலும் அதன் பின்னர் வரும் இரண்டு மூன்று நாட்களிலும் வாய்ப்பு உண்டு. முட்டை சாதாரணமாக சில மணிநேரத்தில் இறந்துவிடுகிறது. சில சூழ்நிலைகளில் 1 முதல் 3 நாள் வரை உயிரோடு இருக்கலாம். அதிக நாட்கள் இருந்தாலும் கருத்தரிக்க சக்தி இல்லை.

### 6.4.4.2.6 கருத்தரிக்காத நாட்கள்

கருத்தரிப்பை தவிர்க்க விரும்புபவர்கள் முதல் வறண்ட நாட்கள், வளமற்ற வெண்கசிவு உள்ள நாட்கள், வறண்ட உணர்வு உள்ள நாட்கள், உச்சநாளுக்கு 3 நாட்களுக்குப் பின்னர் வரும் வறண்ட நாட்கள் எவை என்று அறிதல் வேண்டும். இந்நாட்களில் கருத்தரிக்க வாய்ப்பு மிகவும் குறைவு.

### 6.4.4.2.7 ஆண்பிள்ளை, பெண்பிள்ளை

மனித உடலில் உள்ள கலங்களில் 46 நிறமூர்த்தங்கள் எனப்படும் உயிரணுக்கள் உண்டு. அவற்றில் இரண்டு உயிரணுக்கள் மட்டும் இனப்பாகு பாட்டை ஏற்படுத்தும். இவை X நிறமூர்த்தங்கள், Y நிறமூர்த்தங்கள் ஆகும். எல்லாப் பெண்களும் X, X நிறமூர்த்தங்கள் பெற்றுள்ளார்கள். அதே போல் எல்லா ஆண்களும் X ,Y நிறமூர்த்தங்கள் பெற்றுள்ளார்கள். தந்தையின் X நிறமூர்த்தம் தாயின் X நிறமூர்த்தத்துடன் சேரும் பொழுது X+ X = X X; பெண்குழந்தை உருவாகிறது. தந்தையின் Y நிறமூர்த்தம் தாயின் X நிறமூர்த்தத்துடன் சேரும் பொழுது Y+ X= Y X; ஆண் குழந்தை உருவாகிறது. எனவே X Y ஐக் கொண்டிருக்கும் தந்தையே ஆண் அல்லது பெண் குழந்தை உருவாகக் காரணமாக இருக்கிறார்.[85]

Y நிறமூர்த்தங்கள் எப்பொழுதும் காரத்தன்மையில் சுறுசுறுப்பாகவும், நீண்ட நேரம் உயிர் நீடித்தும் இருக்கும் (Alkaline Medium); அதேவேளை அமிலத்தன்மையில் வெகு சீக்கிரமாக அழியும் தன்மை பெற்றுள்ளது. மாறாக X நிறமூர்த்தங்கள் அமிலத்தன்மையில் சுறுசுறுப்பாகவும், நீண்ட நேரம் உயிர் நீடித்தும் இருக்கும். அதே சமயம் காரத்தன்மையில் வெகுவிரைவில் அழியும் தன்மை பெற்றுள்ளது.

பெண்ணின் யோனியில் எப்பொழுதும் அமிலத்தன்மை அதிகமாக இருக்கும். இது நிறமூர்த்தங்களுக்கு உதவி செய்வதில்லை. வெண்கசிவுக்கு

[85] Cf., *Ibid.*, p. 118.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்தன்மை அதிகமாக இருப்பதால் உச்ச நாளில் அமிலம் குறைந்து காரத் தன்மை அதிகமாகும். ஆகவே உச்சநாளன்று Y நிறமூர்த்தங்களுக்குச் சாதகமாக அமையும். Y நிறமூர்த்தம் சுறுசுறுப்பாகவும் வளமையாகவும் காணப்படுவதால் ஆண்குழந்தை உருவாவதற்கு இயற்கையாகவே வாய்ப்பு உள்ளது. எனவே உச்சநாளில் உடல் உறவு கொள்வதால் ஆண்குழந்தை பிறக்க வாய்ப்பு இருக்கிறது.[86]

உச்சநாளுக்கு முதல் மூன்று நாட்களும் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட டால் பெண் குழந்தையும், உச்ச நாளுக்கு அடுத்த இரண்டு நாட்களும் தாம்பத்திய உறவில் ஈடுபட்டால் ஆண்குழந்தையும் பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்பு உண்டு.

### 6.4.4.2.8 உச்சநாளுக்குரிய சில அறிகுறிகள்

1. சிலருக்கு சில மணிநேரம் சிறிதளவு இரத்தப்போக்குக் (Spotting) காணப்படும்.
2. அடிவயிற்று வலி, இடுப்புவலி, விலாவலி - இவை இழுப்பது போலவும், குத்துவது போலவும் ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கமும் இருக்கலாம்.
3. வயிற்றுக்குள் ஏதோ இறங்கி வருவது போல் ஒரு உணர்ச்சி.
4. மனதுக்குள் மாறுதல் : கோபம், கவலை, சந்தோஷம், முதலியன.
5. மார்பகத்தில் வலி கனமாகத் தோன்றுதல்.
6. சோர்வாகவும் அதிக தூக்கமாகவும் இருக்கலாம்.
7. உடல் சற்றுக் கதகதப்பாக இருக்கும்.

## 6.5 ஒழுக்கவியல் போதனை

இறைவன் இயற்கையாகவே மனிதனுக்குத் தேவையான அனைத்தை யும் படைத்து அவற்றை ஆண்டு, பயன்படுத்தும் பொறுப்பையும் மனிதனுடைய கைகளிலேயே கொடுத்துள்ளார். “கூடி வாழும் குடும்பம்” (Familiaris Consortio) என்னும் திருமடலில் திருத்தந்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார்: இயற்கை ஒழுங்கமைப்பானது மனிதனை அடிமைப்படுத்தும் சங்கிலியல்ல; மாறாக பலவகையிலும் மனிதனுக்குப் பதிலிறுத்து, மனிதன் தனது மனிதத்தன்மையை பாதுகாத்து வளர்த்துக்கொள்ளும் அதியுயர் ஊடகமாக் காணப்படுகிறது. இயற்கை ஒழுங்கானது மனுக்குலத்தின் மட்டிலான பணியிலேயே தங்கியுள் ளது. ஆழமான அன்பிலே அடித்தளமிடப்பட்டு, நிறைவாழ்வை நோக்கிய புனிதப் பயணத்தை நோக்கியே மனுக்குலத்தை இட்டுச் செல்கின்றது.[87]

---

[86] Cf., *Ibid.*, pp. 119-121.
[87] Cf., Pope John Paul II, “Natural family Planning”, (Dec. 13, 1985), *The Pope Speaks*, 31:no. 1,1986, pp. 60-61.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுக்கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற செயலாகிய பாஸ்கா மறைபொருளோடு தாம்பத்திய அன்புறவை விளங்கிக் கொள்வது அவசியமாகிறது. கணவன் மனைவியுடைய துன்பமும் தியாகமும் - வெற்றியாகவும் மகிழ்ச்சியாகவும் புத்துருப் பெறுகிறது. ஏனெனில் இச்செயலானது குடும்ப இணைப்பிற்கு ஒளியேற்றி, தூய்மைப்படுத்தி, உயர் நிலைக்கு இட்டுச்சென்று மீட்பின் இலக்கு நோக்கி பயணிக்க உதவுகிறது. இறைவன் எமக்குத் தந்த அறிவு என்னும் கொடையாலும், சுதந்திரமான புத்தியாலும் எமது இயற்கையான இயல்பூக்கங்களை நாம் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்த நாம் பழகிக்கொள்ள வேண்டும். இதன் பயனாக சுயமறுப்பை எம் வாழ்வில் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் திருமண அன்பானது நேரிய முறையில் உறுதிப்படுத்தப்படும். காலத்துக்குக்காலம் நாம் உடல் உறவிலிருந்து விலகியிருத்தல் தேவையான ஒன்றாகும் எனத் திருத்தந்தை 6ஆம் பவுல் குறிப்பிடுகிறார்.[88]

கணவன் மனைவி தமது கற்பைப் பாதுகாத்துக்கொள்ள சுயகட்டுப்பாடு இன்றியமையாதது. சுயகட்டுப்பாடானது கணவனும் மனைவியும் தத்தமது ஆளுமையில் வளர்ச்சியடைந்து, தமது இருப்பைப் பொருளுள்ளதாக மாற்றிக் கொள்வதற்கு உதவிசெய்கிறது.

பெற்றோரின் உள்ளார்ந்த வாழ்வுக்கு அடிப்படையானது செபமும் இறை நம்பிக்கையும் ஆகும். இயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாடானது இவ்வாறான உள்ளார்ந்த வாழ்விலிருந்து பிரிக்க முடியாததாகும். இயற்கைமுறை குடும்பக் கட்டுப்பாட்டை முன்னெடுக்க வேண்டுமாயின் கணவன் மனைவியுடைய உள்ளாந்த வாழ்வு நேரியதாகவும் சிறப்பானதாகவும் அமைதல் நன்று. செபமும் இறைநம்பிக்கையும் வளர்ந்து வரும் குடும்பவாழ்வில் உள்ளார்ந்த வாழ்வை இன்னும் ஆழப்படுத்த இயற்கைமுறைக் குடும்பக்கட்டுப்பாடு உதவிசெய்கிறது. இக்கட்டுப்பாட்டுக்கு இறையருள் மிகவும் அவசியமாகும். திவ்விய நற்கருணையால் ஊட்டம் பெறும் நிலையும், ஒப்புரவு அருட்சாதனத்தால் கழுவப்படும் வாழ்வும் தேவைப்படுகிறது. இங்கே பிறரன்பு வளர்ச்சியடைகிறது. ஒருவர் ஒருவரைப் புரிந்து, ஏற்றுக்கொள்ளும் நிலை உயர்வடைகிறது.

இயற்கைமுறைக் குடும்பக்கட்டுப்பாட்டில் வாழ்வுக்கான வழி திறந்ததாகவே இருக்கிறது. ஓர் புதிய வாழ்வு இறைவனின் அளவிடற்கரிய நன்மைத்தனத்தை வெளிப்படுத்துகிறது. இறைவனின் படைக்கும் பணி கணவன் மனைவியூடாக தொடர்ந்து ஆற்றப்படுகிறது. இப்படைக்கும் பணியிலே மணமக்களும் பங்காளிகள் ஆகிறார்கள். படைப்பின் முழுமைக்கு அவர்களும் துணையாளராகிறார்கள். இம்முறை கணவனையும் மனைவியையும் மிகவும் நெருக்கமாக்கு

[88] Cf., *Ibid*., pp. 61-62.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. அவர்களுக்கிடையே ஒளிவு மறைவு இல்லா பரஸ்பர உறவு வளர்ச்சியடைகிறது. இதன் வழியாக தொடர்பாடல் இலகுவடைந்து திருமண அன்பு உயிர்த்துடிப்புள்ளதாகிறது. இத்தகைய வாழ்வு அவர்களின் வாழ்வின் முடிவு வரை நீடிக்கும் தன்மையுள்ளது.[89]

பலவகையான இயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வோர் குடும்பமும் தமக்கு இலகுவான முறையைப் பயன்படுத்தி பலனடையலாம். திருமணக் கட்டுக்குள்ளேயே (wed-lock) இம்முறை சாத்தியமாகும். இதனூடாக ஒருமைப்பாடு, பரஸ்பர மரியாதை, சுயகட்டுப்பாடு என்பன வளர்ச்சியடைகின்றன. இம்முறையூடாக கணவனும் மனைவியும் திருப்தியடைவதால் பரத்தமை போன்ற தீச்செயல்களில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது.[90]

[89] Cf., Pope John Paul II, "Responsible Procreation", (June 8, 1984), *The Pope Speaks*, 29:no. 3, 1984, pp.244-247.

[90] Cf., Pope Pius XII, "Fundamental Laws Governing Conjugal Relations" (Oct. 29, 1951), *The Human Body: Papal Teachings*, 1960, pp. 163-165.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளோனிங் (Cloning)

## 7.1 அறிமுகம்

மானிடரை நம் உருவிலும் சாயலிலும்.... (தொட. 1:26). படைப்பு அனைத்தின் சிகரமாகவும் கொடுமுடியாகவும் இருப்பவன் மனிதனாவான். விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சி கண்டு உயர்ந்தோங்கியுள்ளது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் நன்மையும் உண்டு அதேவேளை தீமையும் உண்டு. இன்று நாம் எய்ட்ஸ், சார்ஸ், பாலைவனப் போர், அணுகுண்டுப் பரிசோதனை என்றெல்லாம் பேசுகிறோம். இவை எல்லாம் விஞ்ஞானத்தின் விளைவுகளே ஆகும். விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் திருச்சபை மகிழ்கின்றது, பாராட்டுகின்றது. ஆனால் மனிதனின் தனித்துவத்தையும், மாண்பை யும் பாதிக்கும் எந்த ஒரு செயலையும் திருச்சபை ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வகையில் 'மனிதக் குளோனிங்' திருச்சபையின் எதிர்ப்பைப் பெற்றுள்ளது.


எந்த ஒரு நாட்டிலும் 'மனிதக் குளோனிங்' சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குளோனிங் மனிதன் இதுவரையிலும் சட்டபூர்வமாக உருவாக்கப்படவுமில்லை. ஆனாலும் சில நாடுகளில் குளோனிங் மனிதன் சட்டபூர்வமல்லாது உருவாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இவற்றின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. குளோனிங்கில் பல முறைகள் உண்டு. குறிப்பாக விலங்குக் குளோனிங், தாவரக் குளோனிங் என்பவற்றைக் குறிப்பிடலாம். திருச்சபை மனிதக் குளோனிங் தவிர்ந்த ஏனைய குளோனிங் முறைகளை ஏற்றுக்கொள்கின்றது. இக்கட்டுரையில் குளோனிங் என்றால் என்ன? என்பது பற்றியும், குளோனிங் மட்டில் திருச்சபை கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் ஆராய்வோம்.

## 7.2 குளோனிங் என்றால் என்ன

விஞ்ஞான அபிவிருத்தியினதும் உற்பத்தியினதும் ஓர் விளைவே குளோனிங் ஆகும். மிக நீண்ட நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆய்வுகளின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முறை தான் குளோனிங். மனித கலன்களோடு நேரடியாகத் தொடர்புள்ள ஓர் பொறிமுறை இது ஆகும். 1950இற்குப் பிற்பாடே பாலியல் செயற்பாடு இல்லாத மனிதக்கலங்களை மாத்திரம் கொண்டு மனித உயிர்களை உருவாக்கும் தொழிற்பாட்டிற்கு 'குளோனிங்' என்ற பதத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். மரபு ரீதியாக ஒத்த உயிருள்ள கலங்களை உருவாக்கும் தொழிற்பாடே குளோனிங் ஆகும். ஒரு பெண்விலங்கின் கரு அகற்றப்பட்ட முட்டை மென்சவ்வினுள் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 22

விலங்கின் நிற மூர்த்தங்களைச் செலுத்துவதன் மூலம் குளோனிங் இடம்பெறுகின்றது. இப்பொறிமுறையானது அனைத்துப் படைப்புகளிற்கும் பயன்படுத்தப்படலாம்.

சாதாரணமாக இனவிருத்திச் செயற்பாடு மூலமாகவே புதிய கலங்கள் உருவாகப்படுகின்றன. இவ்வினவிருத்திச் செயற்பாட்டை இரண்டு வகையாக நோக்கலாம்:


### 7.2.1 பாலியல் சாராத இனவிருத்தி (asexual procreation)

இவற்றிற்கு குறிப்பிட்டதொரு இனவிருத்திக் கட்டமைப்பு இருக்காது. தனியான மரபுக்கலத்திலிருந்து புதிய கலன்கள் தோன்றுகின்றன. இங்கு ஆண் பெண் தேவையில்லை. பெற்றோர் என்ற ஓர் நிலைமை இருக்காது. இம்முறை குறைந்த வர்க்கத்தைச் சார்ந்த தாவர, விலங்கினங்களுக்கிடையே நிகழ்கின்றது.

### 7.2.2 பாலியல் சார்ந்த இனவிருத்தி (sexual procreation)

சாதாரணமாக இரண்டு இனப்பெருக்க கலங்கள் பாலியல் செயற்பாடு மூலம் ஒன்று சேர்வதால் புதிய கலங்கள் (உயிர்) தோன்றுகின்றன. இம்முறைக் கென்று பிரத்தியேகமான கட்டமைப்பு ஒன்று உண்டு. இவ்விரண்டு கலங்களும் பெற்றோரிடமிருந்து பெறப்படுகிறது. இச்செயல்முறை உயர்வர்க்கத்தைச் சார்ந்த தாவர விலங்குகளிடையே நிகழ்கின்றது.

குளோனிங் தொழில்முறையானது முதலாம் வகுப்பிற்குள்ளேயே உள்ளடக்கப்படலாம். இத் தொழில் முறை மூலம் தனியான ஒரு கலத்திலிருந்து அதை ஒத்த இன்னோர் கலத்தை உருவாக்குதலே நடைபெறுகிறது. இம்முறை மூலம் பெறப்படும் உயிர்கள் மூலத்தை ஒத்த ஒரு பிரதியாகவே (duplicate) காணப்படும். குளோனிங்கின் வளர்ச்சிப் படிகளில் Dolly என்னும் செம்மறியின் இன உருவாக்கம் சிறந்த வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால் இந்த Dolly இப்போது இறந்துவிட்டது. Dolly இன் இறப்பு பல்வேறு ஆய்வுகளை முடக்கிவிட்டிருப்பதாகத் தெரிகிறது.



படம் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை குளோனிங் மூலம் மனிதன் சட்டபூர்வமாக உருவாக்கப்படாத போதும் Dolly இன் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட தொழில்முறை மூலம் மனிதனையும் உருவாக்கலாம் என்பதில் விஞ்ஞானிகள் உறுதியாயிருக்கிறார்கள். சாதாரண கருக்கட்டல் செயல்பாட்டில் மனித கருவறையில் நிகழும் பொறிமுறை எதிர்வு கூறமுடியாததும், இரகசியமானதுமாக இருக்கிறது; மாறாக குளோனிங் செயற்பாட்டில் இவ்விணைப்பானது செயற்கை முறையானதும் உபகரணம் சார்ந்த ஒரு செயற்பாடாகவும் இருக்கிறது.



படம் 24

## 7.3 ஒழுக்கவியல் போதனை

குளோனிங் மூலம் மனித உயிர்கள் தோற்றுவிக்கப்படுவதை திருச்சபை வன்மையாக எதிர்க்கிறது. எந்த ஒரு பயங்கரமான அல்லது இக்கட்டான சந்தர்ப்பத்திலும் மனித உயிருக்குக் கொடுக்க வேண்டிய முழுமரியாதையும், மதிப்பும் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் திருச்சபை உறுதியாக நிற்கின்றது. இந்நிலையில் மனித உயிரை அழிவின் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய அனைத்துவிதமான ஆராய்ச்சிகளையும், செயற்பாடுகளையும் திருச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. உதாரணமாக இரக்கக்கொலை (euthanasia), கருவழிப்பு (abortion), போன்றவற்றைக் குறிப்பிடலாம். குளோனிங் மூலம் மனித உயிர்களை உருவாக்கல் என்பதனை மேற்கூறிய பகுப்பிற்குள் உள்ளடக்க முடியாது காரணம் இச்செயல்முறையானது புதிய உயிர்களைத் தோற்றுவிக்கும் ஓர் செயற்பாடாகும். ஆனாலும் இச்செயற்பாடு மனித உயிருக்கு அவமரியாதையையே கொடுக்கின்றது. காரணம் ஓர் தூய்மையான, உயர்ந்த அன்புறவில் வளர்க்கப்படவேண்டிய உயிர் வெறுமனே இயந்திரங்களின் செயற் பாட்டால் உருவாக்கம் பெறமுடியாது. கணவன் மனைவிக்கிடையே உருவாகும் அன்பு இணைப்பின் விளைவாகவே புதிய உயிர் ஒன்று தோற்றம் பெறுகின்றது. குளோனிங் செயற்பாட்டில் மனித உயிரானது அதற்குக் கொடுக்கப்படவேண்டிய தனித்துவம், உரிமை என்பன இல்லாது வெறும் பொருளாகவே கணிக் கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு உறவு அவசியமாகும். மனிதனின் பிறப்பே ஒரு உறவாக இருக்கின்றது. உறவின் விளைவாகவே மனிதன் உருவாகின்றான். குளோனிங் செயற்பாட்டில் இவ்வுறவுத் தொடர்பே இல்லாத நிலை காணப்படுகிறது. பெற்றோர் பிள்ளை உறவு, இரத்த உறவு, சகோதர உறவு, எதுவுமே இல்லாத நிலையிலேயே குளோனிங் மூலம் மனிதன் உருவாக்கப்படுகிறான். இச்செயற் பாட்டின் மூலம் ஓர் பெண்குழந்தை பிறக்கிறது என்றால் அக்குழந்தை தாயின் சகோதரியாகவே கணிக்கப்படும். இக்குழந்தைக்கு இரத்த உறவு மூலமான தந்தை இருக்கமாட்டார். உடலுறவுச் செயற்பாடு இல்லாத கருக்கட்டும் முறையே பல்வேறு ஒழுக்கவியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கும் இக்காலத்தில் குளோனிங் மூலம் மனித உயிர்கள் தோற்றுவிக்கப்படுவதால் அனைத்துப் பிரச்சினைகளையும் மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்றால் அது மிகையாகாது.

லேயோன் காஸ் (Leon Kass) என்னும் பேராசிரியர் குளோனிங் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:மனித குளோனிங்கானது ஓர் அரக்கத்தனமான செயல் முறையாக வளர்ந்து வருகின்றது. மனித உயிகள் தோற்றுவிக்கப்படுவதற்குப் பதிலாக தயாரிக்கப்படுகின்றது. இனவிருத்திக்குப் பதில் உற்பத்தி செய்யப் படுகின்றது. மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு உற்பத்தி செய்யும் பொருட்களில் ஒன்றாக மனித உயிரும் உற்பத்தி செய்யப்படும் அபாயம் இச்செயற்பாட்டின் மூலம் தோன்ற வாய்ப்பு உண்டு. மனிதனின் மாண்பை இழிவாக்கும் இத்தொழிற்பாட்டால் பல குழப்பமான விளைவுகள் ஏற்படுகின்றன. குளோனிங் மூலம் உயிர் உருவாக்கப்படும்போது அங்கு அன்பு உறவு இல்லாத நிலை காணப்படும், தனிப்பட்ட மூலதனம் இடப்படாது, ஓர் உயிருக்கு இருக்க வேண்டிய் பொறுப்பு இருக்காது, மாறாக வெறும் ஆய்வுகூடத் தொழில்நுட்பமே இங்கு காணப்படும். மனித வர்க்கத்தில் இரண்டாம் தர வகுப்பில் வைத்து இவர்கள் கணிக்கப்படுவார்கள்.

சிலர் மனிதக் குளோனிங் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வாதிடுகிறார்கள்:

1. மிகவும் வீரியம் கூடிய, ஆற்றல் மிகுந்த மனிதப் பிரதிகளை உருவாக்கலாம்,
2. இறந்த மனிதர் ஒருவரை மீண்டும் உருவாக்க முடியும்,
3. மனித உதிரிகளை உற்பத்தி செய்து கொள்வதன் மூலம் நோய்களைக் குணப்படுத்தலாம்.

மேற்கூறப்பட்ட முறைகளில் ஓர் மனிதனின் முடிவை நிறைவு செய்வதற்கு இன்னோர் மனித உயிர் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் மனித உயிரும் தனித்துவமானது, ஒவ்வொன்றும் தனக்கே உரிய பிரத்தியேகமான முடிவை அல்லது குறிக்கோளைக் கொண்டுள்ளது. எனவே இச்செயற்பாடானது பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கவியல் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றது. மனிதன் மனிதனை அடிமைப்படுத்தும் ஓர் நிலையே இங்கு உருவாகின்றது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஓர் மனித உயிர் ஓர் பொருளாக அல்லது மாதிரியாக கணிக்கப்பட முடியாது. மனிதனின் தோற்றம் எவ்வாறாக இருந்தாலும் மனித உயிருக்குக் கொடுக்கப்படவேண்டிய முழு மரியாதையும் மாண்பும் கொடுக்கப்படவேண்டும். மனித நிலை இல்லாது வெறும் தொழில்நுட்ப முறையிலான உற்பத்தியாக இருக்கும் குளோனிங் செயல் முறையானது மனித மாண்பை இல்லாது ஒழித்து, மனித மாண்பின் அழிவிற்குக் காரணமாயிருக்கிறது. குளோனிங் மூலம் உருவாக்கப்படும் கரு மனித மாண்பு அற்றதானால் குளோனிங் பிழையாகாது; மாறாக குளோனிங் மூலம் உருவாக்கப்படுவது ஒரு மனிதனாக இருப்பதால் மனிதனுக்குரிய மாண்பைக் கொண்டிருப்பதால் குளோனிங் பிழையானதாகும். ஒவ்வோர் சிசுவிற்கும் தனது பெற்றோரிடமிருந்து பிறப்பதற்கும், பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படவும், அன்பு செய்யப்படவும், இனங்காணப்படவும் உரிமையுண்டு.

விஞ்ஞான வளர்ச்சியில் சாதாரண குளோனிங் செயற்பாட்டின் மூலம் பெறப்படும் நன்மைகள் மட்டில் திருச்சபை அக்கறையாக இருக்கிறது. இச்செயற்பாடு மனித குலத்திற்கு நன்மை பயக்கின்றபோது அவை வரவேற்கப்படுகின்றது. உதாரணமாக, விலங்குக் குளோனிங், தாவரக் குளோனிங், போன்றவை நன்மையானவையே.

மனிதனை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படும் விஞ்ஞான ஆய்வுகள் சில மனித மாண்பை அழிக்க முற்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

பல்வேறு நோய்களை குணப்படுத்துவதற்கு குளோனிங் செயல் முறையைப் பயன்படுத்துவது சார்பான ஆய்வுகள் மிகவும் வேகமாக நகர்த்திச் செல்லப்படுகின்றன. ஆனால் இவ்வாறான செயல்முறையில் ஓர் மனித உயிரை உருவாக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது. உயிருள்ள ஓர் கருவைக் கொண்டு மனித நோய்களை தீர்ப்பதற்குப் பதிலாக நேரடியாக மனிதக் கலன்களைக் கொண்டு இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்வது சிறந்ததும் விரும்பத்தக்கதும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக

'குளோனிங்' எனகிற பதம் இன்று விஞ்ஞான வட்டத்தில் மாத்திரமல்ல பல்வேறு நிலைகளிலும் பரவலாகப் பேசப்படுவதும், விமர்சனத்திற்கு உள்ளாவதுமாக இருக்கிறது.



படம் 25
**Dolly**

Dolly என்கிற செம்மறியின் உருவாக்கம் 'குளோனிங்' செயல் முறையின் வெற்றிக்கு உதாரணமாக இருந்தபோதிலும் அவ்விலங்கின் இறப்பு பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. குளோனிங் மனிதன் இது வரையிலும் சட்பூர்வமாக உருவாக்கப்படவில்லை, உருவாக்கப்பட்டாலும் அவனுடைய வாழ்க்கைக்காலம் (life span) எவ்வளவாக இருக்கும் என்பது கேள்விக்குரியதே. வளர்ச்சியடைந்த நாடுகளிலே இவ்விடயம் பரவலாக ஆராயப்பட்டாலும் எமது நாடுகளில் இது பற்றிப் பெரிதாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்த நாடுகளின் செல்வாக்கு இங்கு அதிகமாக இருப்பதால் நாமும் இதைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். குளோனிங் தொழிற்பாடு பிழை என்பதற்கு திருச்சபை பல்வேறு எடுத்துக் காட்டுகளைக் காட்டியுள்ளது. இது பற்றிய திருச்சபையின் நிலை ஒழுக்கவியல் ஆய்வில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக எமது நிலைகளில் இருந்து சிந்திக்கின்றபோதும் இவ்வாறான ஓர் முடிவிற்கே நாம் வருகின்றோம்.

😐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தடை (Contraception)


## 8.1 நிகழ்வு

*நான்காம் ஆண்டு இறையியல மாணவர்களாக 'குடும்ப அப்போஸ்தலப் பணிப்' (Family Apostolate) பயிற்சிக்காக நாம் சென்றபோது எம் ஒவ்வொரு வருக்கும் இரண்டு குடும்பங்கள் தரப்பட்டன. நாம் இக்குடும்பங்களைச் சந்தித்த சம்பவத்தையும், எமது கற்றல் அனுபவங்களையும் எம்மை வழிநடத்திய அருட்தந்தையோடு பகிர்ந்து அக் குடும்பங்களை ஒன்று சேர்க்கும் பணியில் உழைக்க அழைக்கப்பட்டோம். ஒரு பிரிந்த குடும்பமும் இன்னொரு குடும்பமும் தரப்பட்டது. எனது சக சகோதரன் ஒருவர் தாம் சந்தித்த குடும்பம் பற்றிய அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.*

*கணவனுக்கு வயது 24. மனைவிக்கு வயது 20. இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் தற்போது கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்கிறார்கள். இவர்களுக்கு ஒரு பிள்ளை. பிள்ளையின் வயது ஒன்று. கணவன் தற்போது தனது தாய் வீட்டில் தங்கியிருக்கிறார். மனைவியை அணுகி கதைத்த போது பின்வருமாறு கூறினார்: "இவர் ஒரு மனிதனா? இவர் முழு மிருகம். மனிதத்தன்மை என்றால் என்ன என்று இவருக்குத் தெரியாது. ஒவ்வொரு நாளும் என்னோடு உடலுறவு கொள்கிறார். சில வேளைகளில் ஒரு நாளில் இரண்டு தடவைகளும் உறவு கொள்கிறார். ஒழுங்காக குடும்பத்தைக் கவனிப்பதில்லை. தனது சகபாடிகளோடு சேர்ந்து திரிந்த பின்னர் வீடுவருவதும், உடலுறவு கொள்வதும் தான் அவருடைய ஒழுங்கான வேலை. அதுவும் ஏதோ 'பலூன்' போன்ற ஒரு உறையை உடலுற வின் போது அவர் தனது ஆண் உறுப்பில் போட்டுக்கொள்வார். அவர் உறவு கொள்ளும் போது நான் அனுபவிப்பது நரக வேதனை. நான் இந்த நரக வேதனையை நான்கு வருடங்களாக அனுபவித்துவிட்டேன். இனிமேலும் என்னால் இயலாது. இதனால் தான் நான் பிரிந்து இருக்கிறேன்" எனப் பகிர்ந்து கொண்டார். (பதிப்பித்தலுக்கான அனுமதி தொடர்புபட்டவரிடமிருந்து பெறப்பட்ட சம்பவம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 26

## 8.2 அறிமுகம்

அண்மைக் காலங்களில் விவாகரத்துக்கள் அதிகரித்து வருவது மிகவும் வேதனை தரக்கூடிய விடயமாகும். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக் கின்றன. முக்கியமானதும் பலரும் தெரிந்து கொள்ளவேண்டியதும் யாதெனில் கருத்தடைப் பாவனை காரணமாக பல குடும்பப் பிரச்சினைகள் தோன்றி இறுதியில் விவாகரத்துக்களாக, தற்கொலைகளாக, கொலைகளாக முடிவடை கின்றன. 'பாவித்தலும் தூக்கி எறிதலும் என்ற கொள்கை' (Use and Throw-Away Policy) மனிதர்கள் மத்தியில் திடீரென வளர்ந்து வருவது பல்வேறு ஒழுக்கவியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. இதை மற்றைய நாடுகளுக்கும், மக்களுக்கும் பரப்புவதில் பல்தேசியக் கம்பனிகள் (TNCs) பெரும்பங்கு வகிக்கின்றன. இவர்களுடைய சுயநலப்போக்கு பலருக்கு ஆபத் தாக மாறியுள்ளது. இக் கம்பனிகளின் முழு நோக்கும் இலாபம் ஈட்டலாகும். நன்மையோ தீமையோ அவர்களுக்கு அக்கறையில்லை. எதன் உற்பத்தியி னாவது பணலாபம் வருமானால் அத்தகைய பொருட்களை அவர்கள் அதிகப்படி யாக உற்பத்தி செய்து அனைத்து நாடுகளுக்கும் விற்பனை செய்வார்கள். இவற்றுள் முக்கியமானது கருத்தடைப் பொருட்களாகும். தம்மை சர்வதேச தொண்டு நிறுவனமாக முத்திரை குத்தி பெருமளவு நாடுகளில் இயங்கிவரும் நிறுவனங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவ்வாறான பொருட்களுக்கான விளப்பரப்படுத்தலையும், விற்பனை உத்திகளையும் உருவாக்கிக் கொடுத்தல் வேதனைப்படவும் வெட்கப்படவும் வேண்டிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 27

செயற்கைமுறைக் கருத்தடை சாதனங்களின் பாவனையினால் திருமண உறவின் தனித்துவமும் புனிதத்துவமும் சிதைக்கப்படுகிறது. உறவுகளில் சிறந்ததும் இறைவனின் முக்கிய பணியில் பங்கேற்பதுமான உறவு திருமண உறவாகும். இப்புனிதமான உறவுக்குச் சவாலாக, களங்கமாக இன்று பல்வேறு கருத்தடை பொருட்களும் முறைகளும் பாவனையிலுள்ளன. இவைபற்றிப் பார்ப்போம்.

## 8.3 விந்தை வெளியில் சிந்துதல்/ஓனானிசம் (Coitus Interrupption/ Onanism)

உடலுறவு கொள்கின்ற பொழுது ஆண்விந்து வெளியேறும் உணர்வு உண்டாகின்ற பொழுது ஆண் உறுப்பை வெளியகற்றி விந்தை வெளியில் சிந்தும் செயற்பாட்டை இம்முறை குறித்து நிற்கிறது. இம்முறை ஓனானிசம் (Ornanism) என்றும் அழைக்கப்படுகின்றது. இம்முறையானது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓனான் எனப்படுபவன் தனது சகோதரனின் தாரமிழந்த பெண்ணை மணமுடித்து தனது சகோதரனுக்கு வழிமரபு உண்டாக்க அழைக்கப் பட்டான். ஆனால் பிறக்கும் குழந்தை தன்னுடைய வழிமரபினராக இருக்க மாட்டாது என்பதால் ஓனான் விந்தை வெளியில் சிந்துவதை நாம் காணலாம் (பார். தொட. 38:9ff). இது மிகவும் பழைமையானதும் இலகுவானதுமான முறை ஆகும்.

ஆனால் இம்முறையால் அதிகம் பாதிக்கப்படுபவள் பெண்ணே ஆவாள். உடலுறவு மூலமான திருப்தியை பெண்ணானவள் படிப்படியாகவே அடைகிறாள்; ஆனால் ஆணோ மிக விரைவாகப் பெற்று விரைவாகவே அதாவது விந்து வெளியேற்றத்தோடு இழப்பவனாக இருக்கிறான். எனவே உடனடியாக ஆணுறுப்பை வெளியகற்றல் பெண்ணை வெகுவாகப் பாதிக்கலாம். பெண் உறுப்புள் உட்செலுத்தப்பட்ட ஆண் உறுப்பானது படிப்படியாகவே வெளியெடுக்கப்படுதல் நல்லது. உடனடியாகவும் திடீரெனவும் இழுத்து எடுக்கப்படுவதனால் பெண்ணுக்கு வேதனை அதிகமாக இருக்கலாம். அவளுடைய வாழ்வில் மகிழ்ச்சியின்மையும், மன அழுத்தமும் உருவாகலாம்.

ஆனாலும் சிலவேளைகளில் இம்முறையும் தோல்வியடைவதை நாம் அவதானிக்கலாம். பெண்ணுறுப்புப் பகுதியில் தங்கும் 'ஆண் திரவத்தில்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(distilling fluid) கூட விந்துக்கள் இருக்கலாம். இவை பல வழிகளிலும் உட்செலுத்தப்பட வாய்ப்பு உண்டு. இதன் காரணமாக கருக்கட்டல் நிகழலாம்.

## 8.4 யோனியைக் கழுவும் முறை ( Vaginal Douche )

உடலுறவின் பிற்பாடு நீரோடு சேர்த்து சில மருந்துப் பொருட்களை உட்பாய்ச்சி பெண்குறியைக் கழுவும் செயற்பாட்டை இது குறித்து நிற்கிறது. இம் முறையானது நம்பத்தகுந்த முறையல்ல. சில வேளைகளில் விந்தானது குழாய்க்குள் ஒரு சில நிமிடங்களிலேயே சென்று விடுகிறது. குழாய்க்குள் விந்து செல்லுமாயின் குழாயைக் கழுவுதல் சாத்தியமாகாது.[91]

## 8.5 உறைப் பாவனை

### 8.5.1 ஆண் உறை



படம் 28


விறைப்படைந்த ஆண் உறுப்பைச் சுற்றிப் போடப்படும மெல்லிய இறப்பர் பையானது ஆண் உறை எனப்படும். ஆணுறையின் நுனிப்பகுதியில் மெல்லிய தடிப்பான பகுதி காணப்படும். இப்பகுதியிலே வெளியேற்றப்படும் விந்துகள் சேர்த்து வைக்கப்படுகிறது. இவ்வுறையானது பெண்ணின் கருவறை யில் விந்து சேகரிக்கப்படாது தடை செய்கிறது.

[91] Cf., Thomas Pazhympallil, *Pastoral Guide: Moral-Canonical-Liturgical*, Vol. 2, Bangalore: KJC Publications, 1977, pp. 716-717.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5.2 பெண் உறை



படம் 29

யோனி வாசலுக்குள் உட்செலுத்தப்படக் கூடிய தொப்பி போன்ற இறப்பர் உறையானது பெண் உறை எனப்படும். விந்துகள் குழாயை நோக்கிச் செல்லும் பாதையை இது தடை செய்கிறது. இம்முறையானது வெறுமனே பயன்படுத்தப் படுவதில்லை.இவ்வுறையோடு ஜெலி, கிறீம்கள்,பசைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை ஆண்விந்துக்களை கொல்லும் தன்மையுள்ளனவாகக் காணப்படும்.[92]



படம் 30

## 8.5.3 உறைப்பாவனையால் ஏற்படும் விளைவுகள்

1. உடல் உறவு இயற்கையானதாக அமையாது.
2. இயற்கையான திருப்தியும் உணர்வுகளும் கிடைக்காது.
3. இறப்பர் உறை இடையில் இருப்பதால் தோலும் தோலும் ஒன்று சேர்வதில்லை. இதனால் முழுத்திருப்தியின் உணர்வு பாதிப்படைகிறது.
4. இன உறுப்புகளில் சீழ் பிடித்தலும் வெள்ளைப் போக்கும் அதிகரிக்கிறது.
5. உள் தோல் உரிவதால் இனவுறுப்பில் புண்தோன்றலாம்.
6. உடல் உறவு வேதனையுடன் கூடியதாக அமையலாம்.
7. முக்கியமான உணர்வுகள் இல்லாததனாலும், தவறான உணர்ச்சிகளாலும் உடல் உறவு விரைவில் முடிவடையலாம்.
8. உடல் உறவிற்குக் கட்டுப்பாடு இல்லாமல் போகலாம்.
9. கணவன் விரைவாக தனது உணர்வுகளை திருப்திப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருப்பதாலும், மனைவி திருப்தியை

[92] Cf., Antony Grugni, *Preparing for Marriage*, Bombay: St. Paul Press Training School, 1992, p. 200.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாகவே பெறுவதாலும், பெண்கள் திருப்தியை முழுமையாகப் பெறுவதில்லை. இதன் காரணமாகப் பெண்கள் குறை கூறுவர். குடும்பப் பிரச்சினை உருவாகலாம்.

10. பெண்கள் திருப்தியடையாமையால் மனச்சோர்வு, மனவியாதி, மனநிலை பாதிப்பு ஏற்படலாம்.
11. ஆணுறைக்கு மிக சிறிய துவாரங்கள் இருக்கின்றன. உறை பெரிதாகும் பொழுது இத் துவாரங்களும் பெரிதாகின்றன. இத் துவாரங்கள் வழியாக விந்து வெளிவருவதற்கு வாய்ப்பு இருப்பதால் தோல்வியடையலாம். ஆணுறை சில சமயங்களில் கிழிந்து போவதால் முழுத்தோல்வி ஏற்படலாம்.
12. ஆணுறை சொருசொருப்பு இல்லாமல் இருப்பதற்காக உற்பத்தியாளர்கள் பல மருந்துகளை உறையின் மேல் தடவுவது உண்டு. இம் மருந்துகளினால் ஒவ்வாமை, எக்சிமா போன்ற தோல் வியாதிகள் உருவாகலாம்.
13. ஆணுறைப் பாவனை HIV க்கு முழுப்பாதுகாப்பு அளிப்பதில்லை. ஆணுறைப்பாவனை 20 வீதம் தோல்வியில் முடிகிறது என WHO அறிவிக்கின்றது என்றால் எய்ட்ஸ் தொற்றவும் வாய்ப்பு உண்டு.[93]

## 8.6 கருப்பையின் உள்ளே போடும் கருவிகள் ( IUD )

சாதாரணமாக ஒட்டகங்களை ஒரு இடத்திலிருந்து மற்றைய குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு பல நாட்கள் ஏன் மாதங்கள் கூட ஆகலாம். வழியில் ஒட்டகம் கர்ப்பமானால் சுமையைக் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாது. ஆகவே ஒட்டகம் கருத்தரிக்காமல் இருப்பதற்காக கருப்பையின் உள்ளே கல்லையோ அல்லது மரத்துண்டையோ போடுவது வழமை. இன்றும் இவ்வாறான முறையையே பின்பற்றுகிறார்கள்.[94]





படம் 31

[93] Cf., ஜான் ஜப், ஆணா, பெண்ணா, பக். 90-91.
[94] Cf., *Ibid.*, p. 92.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அடிப்படையாக வைத்தே வைத்தியர் ஆபிரகாம் ஸ்டோன் லூப்பைக் கண்டுபிடித்தார். லூப்பானது குழாய்க்குள் உட்செலுத்தப்படுவதனால் கருக்கட்டல் தடைசெய்யப்படுகிறது. வெவ்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் லூப் உற்பத்தி செய்யப்படுகிறது. லூப்பானது பிளாஸ்ரிக், செப்பு. மருத்துவ சில்க் போன்ற கலவைகளாலும் தயாரிக்கப்படுகிறது.




படம் 32

இது வைத்தியர் ஒருவரின் உதவியோடு தான் உட்செலுத்தப் படவேண்டும். மிகவும் சரியான அளவு தெரிவு செய்யப்படவேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இது மாற்றப்பட வேண்டும். பிளாஸ்ரிக் லூப்பானது சிறிய ரியூப்பால் பலோப்பியன் குழாயின் துவாரத்திற்குள் உட்செலுத்தப்படுகிறது. சில லூப்கள் சிறிய வால் அமைப்புடன் தயாரிக்கப்படுகின்றன. இவை உட் செலுத்தப்பட்ட பின் வால்ப் பகுதியானது பெண்ணுறுப்பின் வெளிப்பகுதியில் தொங்கியவண்ணமிருக்கும். இது கருக்கட்டல், குழாயுள் நிகழாதவாறு தடுக்கிறது.

லூப்பில் காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பாவனைக்கு விடப்பட்டதுதான் ‘காப்பர் ரீ’ (Coffer T) (காண்: படம்-33) எனப்படும் கருத்தடைச் சாதனம். இலங்கையில் இது பெருமளவு பாவனையில் இல்லாத போதிலும் இந்தியாவில் பெருமளவில் பாவனையில் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 33

சாதாரணமாக கருக்கட்டிய குழந்தை குழாயிலிருந்து கருப்பையை நோக்கி நகர்ந்து செல்கிறது. குழாயிலிருந்து கருப்பைக்கு வருவதற்கு ஒரு வாரமாகிறது. இந்த ஒரு வாரக்குழந்தை கருப்பைக்கு வந்து கருவறைச் சுவரில் கரு உட்பதிக்கப் பட்டால் தான் கரு வளர்ச்சியடைய முடியும். கருப்பையிலேயே குழந்தைக்கு உணவும், காற்றும் கிடைக்கிறது. காப்பர் ரீயானது கரு கர்ப்பப்பையில் உட்பதிக்கப்பட்டு வளரவிடாது தடுக்கிறது. அவ்வாறு உட் பதிக்கப்பட்டாலும் காப்பர் ரீ குழந்தையை கர்ப்பப்பையிலிருந்து பிரித்துவிடுகிறது. இதனால் சிசு இறந்துவிடுகிறது. காப்பர் ரீயில் சுற்றியிருக்கும் செப்புக்கம்பி விந்துவை பலமில்லாமலும், சாகடிக்கவும் செய்கிறது.[95]

## 8.6.1 கருப்பையின் உள்ளே போடும் கருவிகளினால் (IUD)

1. முதுகு வலி வயிற்று வலி எற்படலாம்.
2. அடி வயிற்றில் சீழ் பிடித்தல், சிறு நீரில் சீழ், வெள்ளைக் போக்கு அதிகமாகலாம்.
3. சீழ் பிடிப்பதால் குழாய் தடைப்பட்டுப் போகலாம்.
4. கருவிகளை எடுத்த பிற்பாடு மீண்டும் கருக்கட்ட வாய்ப்பு இல்லாமல் போகலாம்.
5. வலியுடன் கூடிய மாதவிடாய் அடிக்கடி ஏற்படலாம்.
6. கருப்பையில் புண் வளர்ச்சியடைந்து கப்பர் ரீயைச் சுற்றுவதால் வயிற்றைக் கிழித்து குடலிற்கு இடையிலிருந்து கப்பர் ரீயை தேடி எடுக்கவேண்டும். இது மிகப்பெரிய அறுவை சத்திர சிகிச்சையாகும்.
7. கருப்பைச் சதையோடு சில சமயங்களில் இது ஒட்டுவதால் கருப்பையைக் கூட வெட்டி எடுக்கவேண்டிய நிலை உருவாகலாம்.
8. புற்று நோய்* கருப்பையிலே அல்லது கருப்பை வாயிலிலே ஏற்பட வாய்ப்பு உண்டு.


[95] Cf., *Ibid*., pp. 94-95.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இக்கருவியோடு கூட கருத்தரித்து பிரசவம் நிகழ்வதுண்டு. முதலில் இக்கருவி வெளியே வரும் பின்னர் குழந்தைவெளியே வரும். இவ்வாறாக வெளிவரும் குழந்தை ஊனமுற்றதாகப் பிறக்கலாம்.
10. குறைமாதப் பிரசவங்கள் அடிக்கடி ஏற்படலாம்.[96]

## 8.7 குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள்



படம் 34

கருத்தடை மாத்திரைகள் பல வகைப்படும். இவற்றுள் பெரும்பாலானவை பெண்களின் ஓமோன் சுரப்புகளோடு தொடர்புள்ளவையாகவே காணப்படுகிறது. இவற்றின் முக்கியமான தொழிற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. கருச்சினைவுக் கனிவைக் கட்டுப்படுத்தல் (Ovulation)
2. விந்தின் உயிர்வாழ்தலுக்கும், குழாய் ஊடான பயணத்திற்கும் குந்தகம் விளைவிக்கக் கூடிய கசிவை ஏற்படுத்தல் (கருப்பைச் சுரப்புகளைத் தடிப்பாக்குதல்).
3. கருவின் கருப்பை மீதான தரிப்பை இடையூறு செய்தல்.

இம் மாத்திரைகள் மாதவிடாய் சுழற்சி ஆரம்பித்த ஐந்தாம் நாளிலிருந்து 24ஆம் நாள் வரை பாவிக்கப்படுகின்றன.

### 8.7.1 கருத்தடை மாத்திரைகள் பாவிக்கும் போது மிக அதிகம் பாதிக்கப்படுபவர்கள்

1. 35 வயதுக்கு மேல் இருப்பவர்கள், இவர்களுக்கு மாரடைப்பு, இறப்பு ஏற்படலாம்.
2. இரத்தக் கொதிப்பு இருப்பவர்கள், இவர்களுக்கு திடீர் இறப்பு ஏற்படலாம்.

[96] Cf., *Ibid*., pp. 99-100.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இதய வியாதி இருப்பவர்கள், இவர்களுக்கு இதயம் பலவீனமாகி இறப்பு ஏற்படலாம்.
4. கல்லீரல் வியாதி, மஞ்சள் காமாலை, கல்லீரலில் புற்று நோய் இருப்பவர்கள்.
5. கருப்பையில் கட்டியும், மார்புகளில் கட்டியும் இருப்பவர்கள்.
6. நீரிழிவு நோய், கொழுப்புச் சத்து அதிகம் இருப்பவர்கள்.[97]

### 8.7.2 மாத்திரைகளால் ஏற்படும் ஏனைய கெடுதல்கள்

1. மாதவிடாய் நாட்கள் அதிகமாகலாம்.
2. அடிக்கடி மாதவிடாய் ஏற்படலாம்.
3. தலைச் சுற்றல், தலை வலி, வாந்தி அடிக்கடி ஏற்படும்.
4. உடல் பெருக்கலாம். (உணவு குறைந்த பிற்பாடும்).
5. கல்லீரலில் வியாதிகள் உருவாகலாம்: கல்லீரல் கல், புற்று நோய்.
6. இரத்தக் குழாய்களில் இரத்தம் கட்டியாதல், இந்நிலை இதயத்தில் ஏற்பட்டால் மாரடைப்பும் இறப்பும் ஏற்படலாம்.
7. கொழுப்புச் சத்து அதிகமாகி இதயத்திலும், இரத்தக் குழாயிலும் நோய்கள் அதிகமாகலாம். இரத்த ஓட்டம் குறைவடையலாம்.
8. மார்புகளில் கட்டி, புற்று நோய் உருவாகலாம்.
9. நீரிழிவு நோய் வரலாம்.
10. மாத்திரைகள் நிறுத்திய பின்னரும் கருத்தரிப்பு நடைபெறாத நிலைமை ஏற்படலாம்.
11. அனுசேபக் குழப்பங்கள் (Metabolic Problems) உருவாகலாம்.
12. கருப்பையில் புற்று நோய் உருவாகலாம்.[98]

## 8.8 நிரந்தரமான முறைகள்

### 8.8.1 வசக்டமி (Vasectomy)

ஆண்களுடைய விதைப்பையிலிருந்து விந்து வெளியே வரும் குழாயை (Vas Deferens) துண்டித்து அல்லது மின்சாரத்தினால் எரித்தும் விடுகிறார்கள். விந்து வெளியில் வராததினால் கருத்தரித்தல் ஏற்படாது.[99]

---

[97] Cf., *Ibid.*, pp. 102-103.
[98] Cf., *Ibid.*, pp. 103-105.
[99] Cf., *Ibid.*, p. 108.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.8.2 டியூபெக்டமி

கருப்பையின் இரண்டு பக்கத்திலும் இருக்கும் பலோப்பியன் (Fallopian) குழாயை சிகிச்சை மூலம் துண்டித்து அல்லது மின்சாரத்தினால் எரித்துவிடுவது. இதனால் முட்டை வெளியில் வராமல் தடை செய்யப்படுகிறது. விந்தினது குழாயூடான பயணமும் தடை செய்யப்படுகிறது.[100]

## 8.9 ஒழுக்கவியல் போதனை

இன்று அனேகமான குடும்பத்தினர் கருத்தடை சாதனங்களைப் பயன் படுத்துகின்றனர். பல கோடிக்கணக்காக கருத்தடைச் சாதனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை பெருமளவில் வளர்முக நாடுகளில் விற்பனையாவது கவலைக்குரிய விடயமாகும். கருத்தடைப் பொருட்களை பாவிப்பவர்கள் பின் வரும் சிந்தனைகளை தம்மகத்தே கொண்டுள்ளார்கள்.

1. திருமண வாழ்வின் ஏற்றுக்கொள்ள முடியாத சுமையாகப் பிள்ளை களைக் கருதுகிறார்கள். இச்சுமையானது கவனமாக விலக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளார்கள்.
2. சிலர் குழந்தைகளை வளர்த்து நாம் களைப்படைந்துவிட்டோம், இனி மேலும் இச்சுமையை நாம் சுமக்க முடியாது என்ற மனப்பாங்கில் தமது ஆசாபாசங்களை வெறுமனே அனுபவிக்க விரும்புகிறார்கள்.
3. குடும்பம் இன்று எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முகமாக குழந்தைகளை விரும்புகின்ற மனநிலை குறைந்து கொண்டேபோகிறது.[101]
4. திடீர் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக வளர்முக நாடுகளில் பல குடும்பங்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே அரசானது இப்பெரும் ஆபத்தை எதிர்கொள்ளும் நோக்கத் தோடு கருத்தடைச் சாதனங்களை இறக்குமதி செய்வதோடு விளம்பரப்படுத்தல் வசதிகளுக்கும் அனுமதி வழங்கியுள்ளது.
5. பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பொருளாதார, கல்விசார் பிரச்சனை கள் அதிகமாகக் காணப்படுகிறது. பெரிய குடும்பம் ஒன்றிற்கு இக் கடமையை நிறைவேற்றுவது கடினமாயிருக்கிறது.
6. பெண்ணியம் பற்றிய புதிய சிந்தனைகளின் வளர்ச்சி, பெண்கள் பிள்ளை பெறுவது மதியீனம் என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

---

[100] Cf., *Ibid*., p. 108.
[101] Cf., Pope Pius XI, "Encyclical Letter on Christian Marriage" (Dec. 31, 1930), *The Human Body, Papal Teaching*, pp. 27-29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் தனது வாழ்வியல், உடலியல், உணர்வியல், சமூகவியல், உலகியல் காரணிகள் அனைத்திற்கும் அறிவு பூர்வமான விளக்கம் கொடுக்க முற்பட்டுள்ளான். இதன் காரணமாக பிள்ளைப் பேற்றை விலக்கி அதற்கான விளக்கத்தையும் கொடுக்கின்றான்.[102]

## 8.9.1 மனிதனுடைய முழுமையான தரிசனம்

விடைகாணக் கடினமாகவுள்ள சில ஐயப்பாடுகளைப் போன்று குழந்தைப் பேறு என்கின்ற பிரச்சினை எம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட அறிவியல் அமைப்புகளான உடலியல், உளவியல், சனத்தொகையியல், சமூகவியல் கற்கை நெறிகளைக் கொண்டு தீர்த்துவிட முடியாத ஒன்றாகும். இங்கு மனித முழுமையும் அவனுடைய முழுமையான பொறுப்புகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இவ்வுலகிற்கென வரையறுக்கப்பட்டவற்றையும், இயற்கையானவை களையும் கருத்தில் கொள்வதோடு மாத்திரம் நின்றுவிடாது முடிவில்லாத வற்றையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட காரணிகளையும் நாம் கவனத்தில் எடுத்தல் அவசியமாகிறது. கருத்தடையை நியாயப்படுத்த முற்படுவோர் 'திருமண அன்பு', 'பொறுப்புள்ள பெற்றோர்' ஆகிய இரண்டு அம்சங்களையும் அடிப்படையாக வைத்தே வாதிடுவர். எனவே இவை இரண்டையும் முதலில் நாம் நேரிய முறையில் வரைவிலக்கணப்படுத்தவும், ஆய்வு செய்யவும் வேண்டியவர்களாய் இருக்கிறோம்.[103]

## 8.9.2 திருமணம் ஓர் அருள் அடையாளம்

திருமண அன்பானது தனது ஊற்றை தந்தையாம் இறைவனிடமிருந்தே பெறுகின்றது. ஏனெனில் அவரே அன்பாகவும், தந்தையாகவும் விளங்குகிறார். இவரிலேயே ஒவ்வோர் குடும்பமும் பெயரிடப்பட்டுள்ளது. எனவே திருமணத்தை மனித பரிமாணத்தின் ஒரு கூறாகவோ அல்லது எதேச்சையாக உருவாக்கப்பட்ட ஒன்றாகவோ நாம் கணித்துவிட முடியாது. மனிதனில் தனது அன்பின் வடிவை நிலைநிறுத்த இறைவன் முழுஞானத்தோடும், விருப்பத்தோடும் ஏற்படுத்திய அமைப்பே குடும்பமாகும். இதன் விளைவாக கணவனும் மனைவியும் தமக்கு மாத்திரமே உரிய பரஸ்பர அன்புப் பகிர்வால் உருவாகும் தனித்துவமான இணைப்பால் ஒருவர் ஒருவரை முழுமையாக்கி அதன் விளைவால் உருவாகும் புதிய உயிர்களைப் படைக்கவும், கல்வியூட்டி வளர்க்கவும், ஆளுமையில் உருவாக்கவும், நற்பண்புகளால் பக்குவப்படுத்தவும், வேண்டியவர்களாக இருக் கிறார்கள். இவற்றுக்கு மேலாக திருமுழுக்குப் பெற்ற இரு விசுவாசிகளுக்

[102] Cf., Pope Paul VI, "Encyclical Letter on the Regulation of Births", (July 25, 1968), Vatican Council II, Vol. 2, pp. 397-398.
[103] Cf., *Ibid*. p. 400.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையில் நிகழும் திருமணமானது அருள் அடையாளமாக விளங்குகிறது. காரணம் இவ்வன்புப் பிணைப்பானது கிறிஸ்துவினதும் திருச்சபையினதும் பிணைப்பை வெளிப்படுத்துகின்றது.[104]

### 8.9.3 திருமண அன்பு

திருமண அன்பு முற்று முழுதாக மனிதமும் உடலும் ஆவியும் இணைந்ததே. இது வெறுமனே இயற்கையான இயல்பூக்கங்களையும், உணர்வு நிலைகளையும் கொண்டதல்ல. மனிதனுடைய சுதந்திரமான புத்தியின்பால் பிறக்கும் திருமண அன்பானது திருமண வாழ்க்கையில் வரும் இன்பத்தையும் துன்பத்தையும் மகிழ்வோடு ஏற்று, கால ஓட்டத்தில் வளர்ச்சி பெற்று முதிர்ச்சியடைந்து மனித முழுமையை அடைதலையே நோக்காகக் கொண்டது. இவ்வன்பானது முழுமையானதாகும். இது சிறந்த நட்புக்கான அன்பாகும். கணவனும் மனைவியும் தம்மை மற்றவருக்குப் பகிர்ந்து, தமது தனித்துவமான விருப்பு வெறுப்புகளில் நிலைத்திருக்காது, நான் என்ற நிலையிலிருந்து நாம் என்ற நிலைக்குள் சென்று, முழுமையடைகிறார்கள். யார் யார் தனது துணையை முழுமையாக அன்பு செய்கின்றனரோ அவர்கள் தாம் பெறுவதன் நிமித்தம் மாத்திரம் அன்பு செய்வதில்லை. மாறாக, ஒருவர் ஒருவர் தம்மை மற்றவருக்குக் கொடையாகக் கொடுத்தே அன்பு செய்கின்றனர்.

திருமண அன்பு இறப்பு வரையும் பிரமாணிக்கத் தன்மையுள்ளதாகவும், கணவன் மனைவிக்கிடையில் மட்டுமே நிலைத்திருக்க வேண்டியதாகவும் இருக்கிறது. இதையே திருமண அருட்சாதனம் பெறும் நாளில் கணவன் மனைவி இருவரும் கைகள் இணைக்கப்பட்ட நிலையில் தாம் கொடுக்கும் வாக்குறுதியிலிருந்து விளங்கிக் கொள்கிறார்கள். ஆனாலும் கணவன் மனைவிக் கிடையிலான பிரமாணிக்கத்தன்மை பல வேளைகளில் சோதனைக் குள்ளாவதையும் இன்று பலரும் இதை நடைமுறைப்படுத்த கஷ்டப்படுவதையும் நாம் காணலாம். இதன் பொருட்டு திருமணப் பிரமாணிக்கமானது வாழப்பட முடியாதது என நாம் முடிவுக்கு வந்துவிட முடியாது. காரணம் இப்பிரமாணிக் கமானது மதிப்பிற்குரியதும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியதுமாகும். பல நூற்றாண்டுகளாக நல்ல குடும்ப வாழ்க்கை வாழ்ந்தவர் களின் அனுபவத்திலிருந்து திருமண பிரமாணிக்கம் வாழக்கூடிய ஒன்றாகவும், உண்மையான மகிழ்ச்சிக்கு ஊற்றாகவும் காணப்படுகிறது.[105]

திருமண அன்பானது இறைவனின் படைப்பாற்றலில் பங்கு பெறும் ஊடகமாயிருக்கிறது. கணவன் மனைவியின் அன்புப் பகிர்வால் புதிய உயிர்

[104] Cf., *Ibid.*, p. 400.
[105] Cf., *Ibid.*, p. 401.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை உலகிற்கு உவந்து கொடுக்கும் தன்மையை திருமண அன்பு கொண்டிருக்கிறது. "திருமணமும் திருமண உறவும் இயற்கையாகவே பிள்ளைப் பேறிற்காகவும், குழந்தை வளர்ப்பிற்காகவும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் திருமணத்தின் வெளிப்படையான செல்வங்களாக கருதப்படுகிறார் கள். பெற்றோரின் நலனுக்கு பெரிதும் பங்களிப்புச் செய்பவர்கள் குழந்தைகளே."[106]

## 8.10 கருத்தடை உத்திகளால் ஏற்படும் பாரிய விளைவுகள்

1. திருமணப் பிரமாணிக்கமானது ஆபத்துக்குள்ளாவது மாத்திரமல்லாது சமூகத்தில் பல ஒழுங்கீனங்கள் உருவாக வழிஏற்படுகிறது. குடும்ப அமைப்புக்குள் பிரமாணிக்கமின்மை உருவாவதால் கணவன் அல்லது மனைவி வேறு திருமணமான அல்லது திருமணமாகாத நபரோடு தகாத உறவு வைத்துக்கொள்ள முனைவர். திருமணமான ஒருவருடன் உறவு கொள்வதால் அக்குடும்பம் பாதிப்புக்குள்ளாகிறது. பிள்ளை கள் கைவிடப்படும் நிலை ஏற்படுகிறது. இதன் விளைவாக சமூக ஒழுங்கமைப்பு பாதிக்கப்படுகின்றது. சமூகத்தில் கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் அதிகமாகிறார்கள். பெற்றோரின் கவனிப்பில்லாத பிள்ளைகள் தொகை அதிகரிப்பதால் ஒழுக்கக் கேடுகள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தே போகும்.

2. இளையோர் மிகவும் பாரிய அளவில் பாதிப்படையும் நிலை உருவா கிறது. தமக்குள்ளேயும் தமக்கு வெளியேயும் புதுமையை அனுப விக்கத் தொடங்கும் காலத்தில் கருத்தடைப் பொருட்கள் மட்டிலான விளம்பரப்படுத்தலும், பாவிப்பவர்கள் கூறும் புழுகுக் கதைகளும் இளையோரை இப்பொருட்களைப் பாவிக்கும் நிலைக்குத் தள்ளும். இதனால் பல இளையோர் நடத்தைப் பிறழ்வுக்குள் செல்கிறார்கள். விபச்சார விடுதிகள் தொகை அதிகரிப்பதோடு பல இளையோர் இவ்விடுதிகளுக்குச் செல்லவும் முற்படுவர்.

3. பெண்களும் சமமான முறையில் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். ஆண்களுக்குக் கொடுக்கப்படும் அதே மரியாதையும், மாண்பும் பெண் களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆணாகவும் பெண்ணாகவும் இவ்வுலகில் உயிர் வாழ்வதென்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட யதார்த்தம் ஆகும்.[107] இன்று பெண்ணியம் பற்றிய பல புதிய சிந்தனை களும் போக்குகளும் வளர்ந்துவரும் நிலையில், கருத்தடைப் பொருட்கள் பலவும் பெண்களைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றன.

---

[106] Cf., *Ibid.*, pp. 401-402.
[107] Cf., CCC, No. 369.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தடைப் பொருட்களைப் பாவிப்போர் பெண்களை இயந்திரம் போன்றே பாவிக்கின்றார்கள். இயந்திரத்தைப் பாவிப்பதைப் போன்று பாவித்துவிட்டு விட்டுவிடுகிறார்கள். அவர்களும் உணர்வுகளைக் கொண்ட மனிதர்கள் என்பதை சிந்திக்க மறுக்கிறார்கள். ஆணின் ஆசாபாசங்களை திருப்பிப்படுத்தும் கருவியாகவே பெண்ணைப் பார்க்கும் நிலை ஏற்படுகிறது.[108]

திருத்தந்தை பதினோராம் பயஸ் கருத்தடைச் சாதனங்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "கருத்தடைச் சாதனங்கள் தன்னிலேயே தீமையானவையாக இருக்கின்றன".[109] எனவே திருச்சபை எச்சந்தர்ப் பத்திலும் கருத்தடைச் சாதனங்கள் பாவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள வில்லை. இவற்றை வன்மையாக திருச்சபை கண்டிப்பதோடு இவற்றுக்கு மாற்றீடாக இயற்கை குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை பாவிக்கும்படி முன்மொழிகிறது. ஆன்ம மேய்ப்பர்கள் இவற்றில் அக்கறை செலுத்தி இறைமக்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை தேவையான காலத்தில் வழங்குவதன் மூலம் திருமணத்தின் புனிதத்தன்மையை பேணிப்பாதுகாக் கும் பணியை செவ்வனே ஆற்றவேண்டுமென திருச்சபை கற்பிக்கிறது.

## முடிவாக

இறைவன் அனைத்தையும் திறம்பட தனக்கே உரிய ஒழுங்கமைப்போடு படைத்துள்ளார். மனிதன் இறைவனின் திட்டத்தில் குறுக்கிடுவதன் விளைவே அழிவாகும். குடும்ப அமைப்பானது இறைவன் நிறுவிய குழுவாகும். அந்த அமைப்பின் பணிகளும், இயக்கங்களும், செயற்பாடுகளும் அவராலேயே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மனிதன் செயற்கையாக கருவிகளையும் பொருட் களையும் பயன்படுத்தி இறைதிட்டத்தை சீர்குலைக்க முயல்வானாயின் அதற்குரிய தீய விளைவுகளுக்கும் அவனே பொறுப்பாகிறான்.

எனவே கருத்தடை பொருட்களை விற்பனை செய்பவர்கள் தமது உற்பத்திகள் தீமையானவை என ஒரு பொழுதும் கூறமாட்டார்கள். அப்படிக் கூறினால் அப்பொருட்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது. அவர்கள் தமது விளம்பரப்படுத்தலை அதீதப் போக்கிலேயே மேற்கொள்வார்கள். இவற்றின் மட்டில் நாம் விழிப்பாயிருந்து இறை திட்டத்தை எம் வாழ்வில் நிலைநாட்ட நாம உழைக்கவேண்டும். இதுவே கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருடையவும் அழைப்பாகும்.

[108] Cf., *Ibid.*, pp. 406-407.
[109] Cf., Pope Pius XI, Encyclical Letter, "*Casti Connubii*", II, 54,56.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பொருட்களை நாம் பாவிக்காது விடுவதோடு மாத்திரம் நின்றுவிடாது மற்றவர்களும் பாவிக்காது வாழ நாம் அவர்களுக்கும் முன்மாதிரிகை காட்டவேண்டும். சமூகமாக வாழப் படைக்கப்பட்ட நாம் சமூக முன்னேற்றத்திற்காகவும், மீட்பிற்காகவும் உழைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

😐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 01



படம் 02



படம் 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 05



படம் 07



படம் 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 09



படம் 10




படம் 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 15




படம் 16




படம் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 23




படம் 24




படம் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 26




படம் 30





படம் 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 32



படம் 33



படம் 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHY

## BOOKS

Bernard Haring, *The Law of Christ*, trans. Edwin G. Kaiser, Vol.3, Bangalore: Theological,1960.

EDMOND D. PELLEGNINO and David C. Thomasma, *A Philosophical Basis of Medical Practice*, New York: Oxford Press, 1981.

GILL, ROBIN, *A Text Book of Christian Ethics*, 2nd ed., London: T. & T. Clark, 1985.

Grugni, Antony, *Preparing for Marriage*, Bombay: St. Paul Press Training School, 1992.

HAMLON, JOHN S., *A Call to Families*, Steubemille: Human Life Centre, 1988.

Kenney, John P., *The Principles of Medical & Ethics*, England: Thomas Moor Books Ltd., 1962.

Kipply, John, *The Art of Natural Family Planning*, Cincinnati: The Couple to Couple League International Inc., 1985.

Lobo, George V., *Current Problems in Medical Ethics*, India: St. Paul's Publications, 1974.

O 'ROURKE, KEVIN D., *Medical Ethics*, USA: The Catholic Health Association of the United States, 1989.

Pazhyampazllil, Thomas, *Pastoral Guide: Moral-Canonical-Liturgical*, Vol. 2, Bangalore: KJC Publications, 1977.

Peschke, Karl H., *Christian Ethics*, Vol.II, Bangalore: Theological Publications in India, 1987.

Shaw, Annette, *Where Have All the Babies Gone?* Sal Coats: Campaign Printing , 1989.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

W., Thomas, Hilgers W. and Dennis J.Horan, *Abortion and Social Justice*, New york: Sheed and Ward, 1972.

WHITE, R.E.O., *Christian Ethics*, Atlanta: John Knox Press, 1981.

தாசன், வி. மா., *அவன், அவள், அவர், (கிறிஸ்தவ திருமணம்),* யாழ்ப்பாணம்: குடும்ப மேய்ப்புப்பணி நிலையம், 1981.

ஜப், ஜன் *ஆணா பெண்ணா: விருப்பத்திற்கேற்ப பெற்றுக்கொள்வது எப்படி?* ஈரோடு: காவலர் பப்ளிகேஷன்ஸ், 1999.

## Papal Teaching

Pope John Paul II, "A Priest is a Person" (Oct. 27, 1980), *The Pope Speaks*, 26: No 1, 1981, pp. 1-3.

Pope John XXIII, "Pacem in Terris", (April 1963), *The Pope Speaks*, 9: No 1, Summer 1963, pp. 15-17.

Pope Pius XII, "Fertility and Sterility" (May 19, 1956)), *The Human Body: Papal Teachings*, pp. 387-90.

Pope Pius XII, "The Exalted Character of the Medical Profession" (Feb. 13, 1945), *The Human Body: Papal Teachings*, pp. 67-70.

Pope Pius XII, "The Foundation of Medical Morality" (Oct. 19, 1953), *The Human Body: Papal Teachings*, pp. 281-83.

Pope John Paul II, "Catholic Doctors: Higher Witnesses" (Oct. 3, 1982), *The Pope Speaks*, 28: No 1, 1983, pp. 30-35.

Pope John Paul II, "Natural Family Planning" (Dec.13, 1985), *The Pope Speaks*, 31: No 1, 1986, pp. 60-62.

Pope John Paul II, "Responsible Procreation" (June 8, 1984), *The Pope Speaks*, 29: No 1, 1984, pp. 244-47.

Pope Pius XII, "Fundamental Laws Governing Conjugal Relation" (Oct. 28, 1951),*The Human Body: Papal Teachings* 1960, pp. 163-65.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pope John Paul II, "Blood and Organ Donors" (Aug.2, 1984), *The Pope Speaks*, 30: No 1, 1985, pp. 1-2.

Pope John Paul II, "Celebrate Life" (Oct. 7, 1979), *The Pope Speaks*, 24: No 4, 1979, pp. 1-2.

Pope Pius XII, "Tissue Transplantation" (May 14, 1956), *The Human Body: Papal Teachings*, pp. 380-383.

Pope John Paul II, "Many Ethical, Legal and Social Questions Must Be Examined in Greater Depth", (June 20, 1991), *Dolentium Hominum*, Vatican Press 1992, N.3, pp. 12-13.

Pope Pius XI, "Encyclical Letter on Christian Marriage" ( Dec. 31, 1930), *The Human Body: Papal Teachings*, pp. 31-34.

Pope Pius XII, "Christian Norms of Morality", (Sep. 29, 1949), *The Human Body: Papal Teachings*, pp. 117-119.

Pope Pius XII, "Fundamental Laws Governing Conjugal Relations" (Oct. 29.1951), *The Human Body: Papal Teachings*, pp. 171-172.

Pope Pius XII, "The Prolongation of Life" (Nov. 24.1957), *The Pope Speaks* 4: No.4, 1958, pp. 396-397.

Pope John Paul II, " The Christian Family in the Modern World" (Nov. 22. 1981), Vatican Council II, Vol. 2, pp. 827-837.

Pope John Paul I, "The Transmission of Life" (Aug. 22.1984), *The Pope Speaks,* 29: No. 4, 1984, pp. 349-351.

Pope Pius XII, "Christians Principles and the Medical Profession" (N0v. 12.1944), *The Human Body: Papal Teachings,* p. 63.

Pope Pius XII, " The Intangibility of the Human Person" (Sep. 13. 1952), *The Human Body: Papal Teachings*, pp. 196-197.

Pope Paul VI, "Encyclical Letter on the Regulation of Birth" (July 25.1968), Vatical Council II, Vol.2, pp. 397-408.

Pope Pius XII, "The Attempt on Innocent Human Life" (Nov. 26.1951), *The Human Body: Papal Teachings*, p. 182.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pope John Paul II, "The Mystery of Life and Death" (Oct. 19-21. 1985) *Origins* 15: No. 25, Dec. 5, 1985, p. 416.

Pope John Paul II, "Opposing Euthanasia" (Sep. 6, 1984), *The Pope Speaks* 29: No. 44, pp. 353-354.

Pope John Paul II, "Health Care: Ministry in Transition" (Sep.14.1987), *Origins* 17: No. 17, Oct. 8. 1987, pp. 292-294.

Pope John Paul II, "Biological Experimentation" (Oct. 23.1982), *The Pope Speaks*, 28: No. 1, 1983, pp. 74-75.

John XXIII, Encyclical letter, "Mater et Magistra", III, 194; cf. CDF, Donum vitae I, 1; CCC, No. 2270.

Encyclical Letter, "Evangelium Vitae", no. 58.

Pope John Paul II, Apostolic Letter, "Mulierris Dignitatem" (Aug. 15, 1988), 14: AAS 80, (1988), 1686.

V. 2. Patres Apostolici, ed., F.X. Funk, 1,17.

Pope Pius XI, Encyclical Letter, "*Casti Connubii*", II, 54,56.

## OTHER DOCUMENTS

Vatican II: The Conciliar and Post Conciliar Documents, "Dogmatic Constitution on divine Revelation", (Nov. 18, 1965), Vol 1, Austin Flannery, ed., Bombay: St. Paul's Publications.

Congregation for the Doctrine of the Faith, "Declaration on Procured Abortion" (Nov. 18, 1974), Vatican Council II: Constitutions, Decrees, Declarations, Vol. 2, Dublin, 1982, pp. 441-43.

Congregation for the Doctrine of the Faith, "Instruction on Respect for Human Life in its Origin and on the dignity of Procreation",(Mar. 10, 1987), *Origins* 16:no.40, Mar. 19, 1987, pp.701-702.

Ad Hoc Committee on Pro-Life Activities of the National Conference of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Catholic Bishops, "Pastoral Guidelines for the Catholic Hospital and Catholic Health Care Personnel " (Apr. 11, 1973), Pastoral Letters of the United States Catholic Bishops, Vol. III, 1983, pp. 370-74.

Pontifical Academy of Sciences, "Report on Prolonging Life and Determining Death "(Oct. 30, 1985), *Health Progress*, Dec. 1985, p.31.

Congregation for the Doctrine of the Faith, "Declaration on Euthanasia" (May 5, 1980), Vatican Council II: Constitutions, Decrees, Declarations, Vol. 2, Dublin, pp. 510-16.

Pontifical Council for Unum, "Question of Ethics Regarding the Fatally Ill and the Dying", Vatican Press, 1981, pp. 9-11.

United States Catholic Conference, "Pastoral Statement of the United States Catholic Bishops on Handicapped People" (Nov. 15, 1978), Pastoral Letters of the United States Catholic Bishops, Vol. IV, pp. 267-770.

National Conference of Catholic Bishops Committee for Pro-Life Activities, "The Rights of the Terminally Ill ", (July2, 1986), *Origins* 16: no 12, Sep. 4, 1986, pp. 222-24.

National Conference of Catholic Bishops, 'Statement on Uniform Rights of the Terminally Ill Act", (Mar. 20, 1986), *Origins* 16: no 12, Sep. 4, 1986, pp. 222-24.

Cardinal Joseph Bernardin, "Call for a Consistent Ethics of Life" (Dec. 6, 1983), *Origins* 13: no. 29, Dec. 29, 1983, pp. 492-93.

Congregation for the Doctrine of the Faith, "Declaration on Certain Problem of Sexual Ethics", (Dec. 29, 1975), Vatican Council II:Constitutions, Decrees, Declarations, Vol. 2, Dublin, 1982, pp. 486-96.

Congregation for the Doctrine of the Faith, "Sterilization in Catholic Hospitals" (Mar.13, 1975), Vatican Council II:Constitutions, Decrees, Declarations, Vol. 2, Dublin, 1982, pp. 454-55.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OTHER PAPERS

Paul, Rohan J. C., "The Thomistic Ontological Concept of Person and the Issue of Human Cloning", Unpublished Dissertation, Rome: Pontificia Universitas, Urbaniana, 2001.

Keeler, William Cardinal, "Cloning of a Human Being is Wrong", Maryland:*Seminarians for Life*, Spring 2002.

Ford, Norman, "Cloning and Embryo Research in Australia", *Ethics and Medics*, Vol. 28, March 2003.

Cloffi, Alfred, "Reproductive and Therapeutic (Cloning)", *Ethics and Medics*, Vol. 27, March 2002





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lebara Library**
**Kilinochchi**

**இரவல் வழங்கும் பகுதி**

இப்புத்தகம் கீழ் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுபடாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப் பணமாக ரூபா 01/- அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலின் ஆசிரியர் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கத் திருச்சபையின் திருப்பணியாளராவார். இவர் யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் கற்கைநெறிகளை நிறைவு செய்துள்ளார்.

இவர் இறையியல் கோலங்கள், மெய்யியல் நோக்கு, நான் போன்ற சஞ்சிகைகளுக்கும், உதயன், நமது ஈழநாடு, பாதுகாவலன், Messenger போன்ற பத்திரிகைகளுக்கும் பல ஆக்கங்களை எழுதியுள்ளார்.

இறையியலில் இளம்இறையியல்மானிப்பட்டத்தையும் .B.Th. (Rome), மெய்யியலில் இளம்மெய்யியல்மானிப்பட்டத்தையும் B. Ph. (Rome) இவர் பெற்றிருக்கிறார் .

மருத்துவவியல், இறையியல் ஆகிய இரு துறைகளும் ஏனைய பல துறைகள் போன்று வேகமாக வளர்ச்சி காண்கின்ற துறைகளாகும். ஆய்வுகள் வழி துரித வளர்ச்சி காணும் மருத்துவத்துறை ஆய்வுகளின் போதும், ஆய்வுகள் வழி பெறப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தும் போதும் மருத்துவ ஒழுகலாறு, மருத்துவ ஒழுக்க நெறிகளுக்குட்படுத்தப்பட்டுச் செப்பனிடப்பட்டவையாக அமையும்போதே இத்துறைசார் புதிய கண்டுபிடிப்புக்கள் மனித குலத்திற்குப் பயனுள்ளவையாக அமையும். இந்நிலையில் கத்தோலிக்கத்திருச்சபை முன்வைக்கும் ஒழுக்க நெறிகளை வழிகாட்டியாகக் கொண்டு அருட்சகோதரன் தேவதாஸ் யூட்தாஸ் அவர்கள் மருத்துவ ஒழுக்க நெறி என்னும் சிறந்ததோர் ஆக்கத்தை எமக்குத்தந்துள்ளார். இவ்விடயத்தைக் கருப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பெற்ற முதல் தமிழ் நூல் இதுவாக இருக்கலாம். இந்நூல் குறிப்பாக இறையியல் மாணவர்கள், பல்கலைக்கழகமாணவர்கள், பங்குப்பணியாளர்கள்,மருத்துவர்கள் முதலானோருக்கும், ஏனைய பலருக்கும் பயனுள்ள ஆக்கமாக அமைந்துள்ளது. குருத்துவக்கல்லூரி மாணவன் என்னும் நிலையில் நின்று இவரால் ஆக்கப்பெற்ற இந்நூல் இவருடைய புலமைப் பின்புலத்தினை வலுவாக வெளிக்காட்டி நிற்கிறது.

அருட்கலாநிதி. ஞா. பிலேந்திரன்
தலைவர்/கிறிஸ்தவ, இஸ்லாமிய
நாகரிகத்துறைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

கண்ணுக்குத் தெரியாத கரு நிலையில் இருந்தாலும் மருத்துவம் பதில் கூற முடியாத சாவுக்குரிய நோயின் பிடியில் சிக்கித் தவித்தாலும் இறைவன் தந்த மனித உயிர் இறுதிவரை மதிக்கப்படவே வேண்டும். நல்ல மனச்சாட்சியின் உறுத்துதலுக்கு நேர்மையாகப் பதில் சொல்ல முன்வந்து மனித மாண்பை மதித்துவாழ விரும்பும் வயதுவந்த பெண்களும், ஆடவரும் ஆழமாகப் படித்துப் பயன்பெறத் துணை நிற்கும் துணிச்சலான படைப்பு இந்நூல். இதை ஆக்கிய அருட்சகோதரன் தேவதாஸ் யூட்தாஸ் அவர்களுக்கும் அவர் பயின்ற எம் பிரான்சிஸ் சேவியர் குருத்துவ உயர் கல்லூரிக்கும் அது இணைந்திருக்கின்ற ஊர்பன் பல்கலைப்கழகத்திற்கும் இது பெருமை சேர்ப்பது உறுதி.

பேராசிரியர் அருட்கலாநிதி
மைக்கல் சௌந்தரநாயகம்

ISBN 978-955-50314-0-0

Desi... udeson 0777 446973

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org